Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 07 புதன்கிழமை (21.05.2014) | பக்கங்கள் 20 | ஓசை - 232

## ரவிகரனுக்கு நீதிமன்றம் எச்சரிக்கை

(முல்லைத்தீவு)

மாகாணசபை உறுப்பினர் ரவிகரனுக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் எச்சரித்துள்ளது. நீதிமன்ற நடவடிக்கைகளை குழப்பும் விதமாக செயற்படக்கூடாது என்று எச்சரிக்கப்பட்டுள்ளார்.

வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் நேற்று முல்லை நீதிமன்றில் ஆஜரான வேளை, பொலிஸார் உறுப்பினர் ரவிகரன் காணாமற்போனோர் தொடர்பிலான வழக்கு தாமதமடைவதை தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்றினை நீதிமன்றின் முன் முன்னெடுக்கவுள்ளதாகவும், இது நீதிமன்ற அவமதிப்பு செயல் எனவும், நீதிமன்றுக்கும், பொதுமக்களுக்கும் இடையூறு விளைவிக்கும் செயல் எனவும் குறிப்பிட்டனர்.

நீதிபதி மாணிக்கவாசகர் கணேச

19 ஆம் பக்கம் பார்க்க

## மோடி திங்களன்று பதவியேற்கிறார்

இந்தியாவில் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள நரேந்திர மோடி எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை பதவி ஏற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரதிய ஜனதாக் கட்சியானது நரேந்திர மோடியை தமது நாடாளுமன்றக் குழுத் தலைவராகவும் பிரதமர் பதவிக்குரியவராகவும் தேர்ந்தெடுத்திருந்தது. குஜராத் முதலமைச்சரான நரேந்திர மோடி தற்

19 ஆம் பக்கம் பார்க்க

## பணிப்புறக்கணிப்பில் குதிக்க விரிவுரையாளர் சங்கம் முடிவு

ஆறு கோரிக்கைகளை முன்வைத்து, பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனம் அடுத்த மாதம் 3 ஆம் திகதி அடையாள சேவை புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்த சங்கத்தின் முன்னாள் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி இதனைத்தெரிவித்துள்ளார்.

அடிப்படை மேலதிக கொடுப்பனவு உரிய வகையில் அதிகரிக்கப்படாமை, தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டம் வழங்கும் வர்த்தமானி அறிவித்தல் இரத்து செய்யப்பட்டமை, மாணவ அமைப்புகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை நீக்கப்பட வேண்டும் என்ற மூன்று முக்கிய

19 ஆம் பக்கம் பார்க்க

# இணைக்கப்பேச்சின் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு



## இதுவே மோடி அரசின் அணுகுமுறை ராம் ஜெத்மலானி ஆரூடம்

(புதுடில்லி)

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இணக்கப்பேச்சுக்களின் ஊடாக பொருத்தமான தீர்வைக் காண்பதற்கு இந்திய அரசு தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்றும், மோடி தலைமையிலான புதிய அரசு இதே அணுகுமுறையை கடைப்பிடிக்கும் என்று இந்தியாவின் பிரபல சட்டத்தரணியான ராம் ஜெத்மலானி தெரிவித்தார்.**

ராஜீவ் கொலை வழக்கு தொடர்பில் தீர்வு எட்டப்படும் என்கிறார் ராம் ஜெத்மலானி.

பாரதிய ஜனதாக் கட்சி தனிப பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்துள்ளமையினால், வெளிநாட்டு பிரச்சினைகளில் உறுதியான செயற்பாடுகளை எடுக்க முடியும் என பிரபல வழக்கறிஞரும், அந்தக் கட்சியின் முன்னாள் உறுப்பினருமான ராம் ஜெத்மலானி மேலும் தெரிவித்துள்ளார். இலங்கைப் பிரச்சினை குறித்து பாரதிய ஜனதாக் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் 'த ஹிந்து' பத்திரிகைக்கு கருதத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கும், பாரதிய ஜனதாக் கட்சிக்கும் இடையில் நீண்ட கால உறவு இருப்பதாக ராம் ஜெத்மலானி தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், இனப்பிரச்சினைக்கான சுமூகத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க பாரதிய ஜனதாக் கட்சி நடவடிக்கை எடுககும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கம், இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர் பிரச்சினை; தீர்வுக்கு மீண்டும் பேச்சு

(சென்னை)

இலங்கை-இந்திய மீனவர்களின் பிரச்சினையைத் தீர்க்க புதிய அணுகுமுறைகையாளப்படவுள்ளது. இந்தியாவில் புதிய அரசு ஆட்சி அமைத்ததும் இந்தப் புதிய அணுகுமுறையில் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படவுள்ளது.

இரு நாட்டு மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் ஏற்கனவே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியில் நிறைவு பெற்றுள்ள நிலையில், புதிய அரசாங்கத்தின் ஊடாக தீர்வு ஒன்றை பெற்றுக்கொள்ள விரும்புவதாக இலங்கை-இந்திய மீனவர் சங்க அமைப்பின் தமிழக தலைவர் தேவதாஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கான முன்னெடுப்புகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பணமோசடி செய்த இருவர் யாழ். நகரில் கைது

(யாழ்ப்பாணம்)

லண்டனுக்கு அனுப்பிவைப்பதாகக்கூறி 17 பேரிடம் பணம் பெற்று மோசடியில் ஈடுபட்ட பெண் ஒருவரும் அவரது மகளும் கைக்குழந்தையுடன் யாழ். பொலிஸாரினால் நேற்று யாழ். நகரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்இருவரும் சுமார் ஒரு கோடியே 58இலட்சம் ரூபாவைப்பெற்று மோசடி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். கஸ்தூரியார் வீதியும், நாவலர் வீதியும் இணையும் சந்தியில் உள்ள வீடு ஒன் றினை வாடகைக்குப்பெற்று தங்கியிருந்த வேளையே பாதிக்கப்பட்டவர்களின் தகவலை அடுத்து பொலிஸார் இவ்விருவரையும் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது, யோகிஸ்வரன் தவமணி அவரது மகளான துரைச்சந்திரன் ரஞ்சிதமலர் ஆகியோர் லண்டனுக்கு குறைந்த பணச்செலவில் அனுப்புவதாகக் கூறி பருத்தித்துறையைச்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் அபிவிருத்திக்கு பாகிஸ்தான் துணை புரியும்

### சீனாவில் பாக். ஜனாதிபதி உறுதி



(பீஜிங்)

யுத்தத்துக்குப்பிந்திய இலங்கையின் அபிவிருத்திக்கு பாகிஸ்தான் என்றும் துணைநிற்கும் என்றும் பாகிஸ்தான் எப்போதும் இலங்கைக்கு அதன் ஆதரவை தொடர்ந்தும் வழங்குமெனவும் பாகிஸ்தான் ஜனாதிபதி மஹ்மூன் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் சீனாவின் ஷங்காயில் இடம்பெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் உங்களோடு இருக்கும். நாங்களும் பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்தோம். பாதிக்கப்பட்டுக் கொணடிருக்கிறோம். இன்ஷா அல்

19 ஆம் பக்கம் பார்க்க

## பூநாறி மரத்தடியில் வாள் வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பூநாறி மரத்தடியில் நேற்று இரவு இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரம்படி லேன் கொக்குவிலைச்சேர்ந்த தீபன் (வயது-25) என்பவரே வாள் வெட்டுக்கு இலக்காகியதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

ஆட்டோவில் வந்தவர் மீதே இவ்வாறு வாள் வெட்டு இடம் பெற்றுள்ளதாகவும் வாள் வெட்டை மேற்கொண்டவரை தேடி பொலிஸார் வலை விரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (25)

## குடும்பப்பெண் வெட்டிக்கொலை மன்னாரில் கோரம்

மன்னார்- நானாட்டான் பகுதியில் பெண்ணொருவர், அவரது வீட்டில் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரையான காலப்பகுதியில் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீதவான் விசாரணைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் இதுவரையில் எவரும் கைதுசெய்யப்படவில்லை. கொலைச் சம்பவம் தொடர்பில் முருங்கன் பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# ஆண் சிசு விற்பனை மன்னாரில் சம்பவம்

## இருவர் கைது

(மன்னார்)

மன்னார், தாராபுரம் கிராமத்திலுள்ள தம்பதிக்கு 15 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட பிறந்து 15 நாட்களேயான ஆண் சிசுவொன்றை நேற்றுக் காலை மீட்டுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலையத்தின் சிறுவர், பெண்கள் பிரிவைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அத்துடன், குறித்த தம்பதியை கைதுசெய்ததாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, மன்னார் பொலிஸ் நிலையத்தின் சிறுவர், பெண்கள் பிரிவு மற்றும் பொலிஸ் நிலையத்தின் போதைப் பொருள் தடுப்புப்பிரிவு அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் தாராபுரம் கிராமத்திற்குச் சென்று இச்சிசுவை மீட்டுள்ளனர். இக்குழந்தை கடந்த 4 நாட்களுக்கு முன்னர் 15 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதுடன், இச்சிசுவின் தாய் வவுனியா, செட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்தவரென விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் விரிவான விசாரணைகளை மன்னார் பொலிஸ் நிலையத்தின் சிறுவர், பெண்கள் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறு விளம்பரங்கள்


### வீடு விற்பனைக்கு உண்டு

மஞ்சுளா வெதுப்பகச் சந்திக்கு அருகாமையில் திருநகர் தெற்கு, 85 ஆம் இலக்கம் உடைய பெரிய விசாலமான வீடு ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி : கோ.தேதீஸ்வரன் (ஈசன்), வள்ளுவர் பண்ணை ஊற்றுப்புலம், கிளிநொச்சி தொ.பே-0770334147

### உடனடியான வேலைவாய்ப்பு

டொபி, கிளவுஸ், ஐஸ்கிறீம், பால்மா, தேயிலை ஆகிய நூர் உற்பத்திக்கு பெகிங் படிப்புத் தேவையில்லை) 18-55 வயதான ஆண், பெண் தேவை. சம்பளம் 25,000-35,000 வரை சாப்பாடு தங்குமிட வசதியுண்டு. தொ.பே-0710854068. (C/3687)

□ □ □ □ □

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவ்லிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)


### அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு விசேட பயிற்சித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு திட்டமிடல் தொடர்பான விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கோண்டாவிலுள்ள முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர் பொ.வாகீசன் மேற்கொண்டுள்ளார்.

முதற்கட்டமாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 58 அபிவிருத்தி அலுவலர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகிறது.

பின்னர் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது. (92)

# யாழில் கலாசார மையம்; முதற்கட்டப் பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் கலாசார மையம் ஒன்றை அமைப்பதற்காக ஆரம்பகட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

கலாசார மையத்தை அமைப்பது குறித்த ஒப்பந்தம் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையில் நிலவி வந்த முரண்பாட்டுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் கலாசார மையம் ஒன்றை அமைக்க உதவுமாறு யாழ். மாநகர சபையால் இந்திய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு இந்திய அரசும் இணங்கியது.

இது தொடர்பில் இரு நாட்டுத தலைவர்களுக்கும் இடையில் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.

சுமார் 1030 மில்லியன் ரூபா செலவில் ஆறு மாடிகளைக் கொண்டதாக கட்டடம் அமைக்கப்படும். அதில் கடைசி மாடித் தொகுதியை 99 வருட குத்தகைக்கு இந்தியாவிற்கு வழங்க வேண்டும் என இந்திய அரசினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அவ்வாறு வழங்குவதால் ஏற்படும் பாதுகாப்பு பிரச்சினைகளைக் காரணம் காட்டி இதற்கு இலங்கை அரசு மறுப்புத் தெரிவித்ததால் கட்டடம் அமைக்கும் பணிகள் தாமதமாகி வந்தன. தற்போது இத்தகைய முரண்பாடுகள் களையப்பட்டு இரு பகுதியினரும் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர். எனவே கலாசார மையத்தை அமைக்கும் முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றார்.

# சிறுவர் தொழிலாளர்கள்; கட்டுப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சிறுவர்கள் தொழில் துறையில் ஈடுபடுத்தப்படுவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

பாடசாலைகளிலிருந்து இடை விலகிய 14 வயதிற்குட்பட்ட சிறு வர்கள் தொழில்களில் ஈடுபட்டு வருவது தடுத்து நிறுத்தப்பட்டு அவர்கள் மீண்டும் தமது கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்தார்.

சிறுவர் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலகத்தில் இன்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தி தொழில்களில் ஈடுபடும் 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைத்து அவர்களுக்கும் கல்விச் செயற்பாட்டை வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்ததுடன் சிறுவர்களை தொழில்களில் ஈடுபடுத்தச் செய்வதும் சிறுவர் துஷ்பிரயோகமே என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.


**UNIVERSITY OF JAFFNA**

**Professor Sivapathasuntharam Mageswaran Memorial Lceture**

**Synthesis and non - covalent Electron Transfer Studies of some Novel Organic Compounds**

Speker : Dr.Sathiosatham Muhunthan
Senior Scientist, Performance Monomers
R&D The Dow Chemical Company, USA

Venue : Kaillasapathy Auditorium
University of Jaffna.

Date : 22.05.2014
Time : 2.30 P.m

All are cordially invited.

**Registrar** (C/3686)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### மருத்துவ பீடத்திற்கு மனித உடல்கள் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ உடற்கூற்றியற் துறையில் மருத்துவ மாணவர்களின் திறன்மிகு கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் பொருட்டு தேவையான மனித உடல்களை சமூகப்பற்றாளர்களிடமிருந்து பெற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் கோரி நிற்கின்றது.

இவ்வகையில் தாம் இறந்த பின்னர் தமது புகழுடம்பைத் தானம் செய்யும் உயர்ந்த நற்பணியில் ஈடுபட விரும்புவோர் மருத்துவ பீடத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம் : 0212222073, 0779474857

**தானம் செய்ய விரும்புவோர் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்**

1. தானம் செய்ய விரும்புவோர் மருத்துவபீடக் காரியாலயத்தில் இருக்கும் உரிய படிவத்தை நிரப்பி ஒப்படைக்க வேண்டும்.
2. இறந்த பின் உறவினர் உடற்கூற்றியல் துறைத் தலைவர் அல்லது தொழில்நுட்பவியலாளருக்கு 10 மணித்தியாலத்திற்குள் அறிவித்தல் வேண்டும்.
3. யாழ்.மாவட்டத்திற்குள் போக்குவரத்து வசதிகள் பீடத்தினால் ஒழுங்கு செய்யப்படும்.
4. உடலை ஒப்படைக்கும் போது மரணச் சான்றிதழும் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

பதிவாளர் (C/3685)



## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **1058** | திகதி **19.05.2014**

வெற்றி எண்கள்: **36 39 52 64** | ஆங்கில எழுத்து: **S**

**ஜக்பொட் பரிசு ரூ. 2,89,72,620/= வெல்லப்படவில்லை**

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 2,89,72,620/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 19 | 50,000/= | ரூ. 9,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 241 | 1,000/= | ரூ. 2,41,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 525 | 1,000/= | ரூ. 5,25,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11211 | 60/= | ரூ. 6,72,660/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6098 | 40/= | ரூ. 2,43,920/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 148152 | 20/= | ரூ. 29,63,040/= |
| ஆங்கில எழுத்து | 21250 | 20/= | ரூ. 4,25,000/= |
| | | மொத்தம் ரூ. | 70,20,620/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 8 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| பதுளை | 606241711-9-19 |
| கம்பஹா | 606255377-7-07 |
| கம்பஹா | 606252471-6-06 |
| மாத்தறை | 606248486-5-15 |
| நுவரெலியா | 606242227-2-32 |
| அம்பாறை | 606249173-6-06 |
| ஹம்பாந்தோட்டை | 606247221-0-20 |
| மட்டக்களப்பு | 606248922-3-03 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 74,20,620/=

**எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 29,262,580/=**

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.05.22 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**அபிவிருத்தி லொத்தர் சபை**

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 338546/7

(C/3674)

# உணர்வுகளின் வெளிப்பாடாக கவிதைகள் படைக்கப்படவேண்டும்

## மூத்த பத்திரிகையாளர் ராதேயன் தெரிவிப்பு

(வடமராட்சி)

"கவிஞர் செல்வக்குமார் தனது வாழ்வில் ஊசல் அனுபவத்தேடலில் சிக்கிய வார்த்தைகளைக் கவிதை வரிகளாக்கிச் சமூகத்திற்குத் தந்துள்ளார். அவை அவரது தேடல் அனுபவஉணர்வுகளின் அதிர்வு வெளிப்பாடாக உள்ளதால் அந்த அதிர்வுகள் உள்ளடக்கியதாக இருப்பதே முக்கியவிடயம். தலைப்பிடப்படாத கவிதைகள் என்பதனாலேயே ஊசல் தேடல் வரையறையற்று வரிகளாகத் தொடர்வது புதிய அனுபவமே"

இவ்வாறு கவிஞர் செல்வக் குமாரின் "ஊசல் ஒரு தேடல்" கவிதை நூல் அறிமுகவிழாவிலே அறிமுகவுரையை நிகழ்த்திய மூத்த ஊடகவியலாளர் எஸ்.ராதேயன் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை ஞானாலயத்தில் இது. குலசிங்கம் தலைமையில் இக்கவிதை நூல் அறிமுகவிழா நடைபெற்றது. கே.கமலசுதர்சன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து உரையாற்றிய ராதேயன் குறிப்பிட்டதாவது,

ஈழத்துக்கவிதைகளிலே கவிஞர் செல்வக்குமாரின் கவிதைகள் வித்தியாசமானவை, தனித்துவமானவை. இந்தியாவில் மாத்திரமல்ல ஈழத்தில் யாழ்ப்பாணத்திலும் இதுபோன்ற கவிதை நூல்களை வெளியிட முடியும் என்பதை கவிஞர் செல்வக்குமார் நிருபித்துள்ளார். கவிதைகள் வாசகர்களைச் சென்றடையும் போது வாசகர்களுக்கு அவை நன்மை பயக்க வேண்டும்.

சமூகத்திற்கு இன்றியமையாத நல்ல கவிதைகள் கிடைக்க வேண்டும். நல்லமனிதர்களிட மிருந்து நல்லகவிதைகள் கிடைக்கும். கவிதைகளில் பாத்திரங்கள் முக்கியமல்ல அங்குள்ள பண்டங்களே முக்கியமானவை. ஊசல் ஒருதேடல் கவிதைகள் சிறந்த கவிதைகளாக இருக்கின்றன. எனினும் மக்களே அதனைத் தீர்மானிப்பார்கள்.

நவீன தமிழ்க்கவிதைகள் குறித்தும் கவிஞர்கள் குறித்தும் படைப்பிலக்கியவாதிகள் விமர்சகர்கள், வாசகர்கள் மத்தியில் பல்வேறுவகையான கருத்தியல்சார் விமர்சனங்கள் இருந்து வருகின்ற இவ் வேளையில்தான் கவிதைத் தொகுப்புகளின் வரவுகளும் அதிகரித்து வரும் நிலையும் உள்ளது. (01)

## பொருத்தமற்ற இடத்தில் மதகு நெல்வயல்கள் அழியும் அபாயம்

(முழங்காவில்)

பூநகரி - சங்குப்பிட்டி வீதியில் இருந்து முதலாவது கிலோமீற்றறில் விவசாய நிலங்கள் ஊடாகச்செல்லும் இராமலிங்கம் வீதியில் பொருத்தமில்லாத இடத்தில் அப்பகுதி கமக்கார அமைப்பின் ஆலோசனை பெறப்படாமல் புதிய மதகு ஒன்றை அமைத்துள்ளதால் 50 இற்கு மேற்பட்ட ஏக்கர் நெல்வயல்கள் அழிவடையும் அபாயம் உள்ளதாக மட்டுவில் நாடுமேற்கு கமக்கார அமைப்புத்தலைவர் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக காணி உரிமையாளர்கள் கமக்கார அமைப்பிடம் முறையிட்டதைத்தொடர்ந்து இவ்விடயம் சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிடமும், கமநல சேவை ஆணையாளரிடமும் கடிதம் மூலம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (112)

## வீடுதேடி வந்தது அதிஷ்டம்

## சுன்னாகம் வாசிக்கு 10 இலட்சம் ரூபா பரிசு

(திருநெல்வேலி)

சுன்னாகம் வாசியொருவருக்கு அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பத்து இலட்சம் ரூபா பணம் பரிசாகக் கிடைக்கப் பெற்றுள்ளது. நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட ஜயோதா சீட்டிழுப்பில் இவருக்கு இப்பணப் பரிசு கிடைக்கப்பெற்றது.

36, 39, 52, 64 ஆகிய நான்கு இலக்கங்களும் இவர் வாங்கிய அதிர்ஷ்ட இலாபச்சீட்டு இலக்கங்களுடன் பொருந்தியதினால் இவர் இப்பணத்துக்குரிய அதிர்ஷ்டசாலியாகத் தெரிவாகியுள்ளார். மேலும் 5 என்னும் ஆங்கில எழுத்தும் பொருந்தியிருந்தால் இவருக்கு சுமார் 2 கோடியே 97 இலட்சம் ரூபா பணம் கிடைத்திருக்கும்.

சுன்னாகம், காங்கேசன்துறை வீதியில் அதிர்ஷ்டஇலாபச் சீட்டுக்களை விற்பனை செய்யும் வைத்தியலிங்கம் நடராசா என்பவரிடம் இவ் அதிர்ஷ்டச் சீட்டை இவ் அதிஷ்டசாலி பெற்றிருந்தார். இம் முகவரிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட அதிர்ஷ்டஇலாபச் சீட்டுகளுக்கு ஏற்கனவே பலர் பல பணப்பரிசுகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட ஹைவே டீரீம்ஸ் சீட்டிழுப்பில் இவரிடம் வாங்கப்பட்ட அதிர்ஷ்ட சீட்டு ஒன்றுக்கு 18 இலட்சம் ரூபா பெறுமதியான மைக்ரோ பன்ரா மோட்டார் கார் ஒன்று கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (137)

## மதில் அமைக்கும் பணி ஆரம்பம்

(கொடிகாமம்)

கொடிகாமம் நகரிற்கு அருகாமையில் அமைந்துள்ள கொடி காமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு மதில் பெயர்ப் பலகை அமைக்கும் பணி நடைபெற்றுவருகின்றது.

பல இலட்சம் ரூபா செலவில் பாடசாலையின் பழைய மாணவர்களால் இவ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதுவரை காலமும் முன்பக்க சுவர் இல்லாமல் கம்பி வேலிகளால் அமைக்கப்பட்டு இருந்தது. இதனால் இப்பகுதிகளில் உள்ள கால் நடைகள் உள்ளே புகுந்து பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி வந்ததமை குறிப்பிடத்தக்கது.

## மாற்றுத்திறனாளிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வு

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலக பிரிவில் உள்ள மாற்றுத்திறனாளிகள் குறித்தான விழிப்புணர்வு நிகழ்வொன்று நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன், பூநகரி பிரதேசசெயலக சமூக சேவைகள் அலுவலர் செ.சுரேந்திரா, குடும்ப புனர்வாழ்வு நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் க.பிறேம்குமார் ஆகியோர் கலந்து கொண்டு கருத்தரைகளை வழங்கவுள்ளனர்.

சமூக சேவைகள் அமைச்சினால் மாற்றுத் திறனாளிகள் குறித்தான புனர்வாழ்வு திட்டத்திற்கென நியமிக்கப்பட்டுள்ள தொண்டர்கள் இந்த பயிற்சி நெறியில் கலந்து கொள்ளவுள்ளனர்.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் மாற்றுத் திறனாளிகள் குறித்தான புனர்வாழ்வு பணிகளை சிறப்பான வகையில் முன்னெடுக்கும் நோக்குடன் இந்த முழுநாள் விழிப்புணர்வு நிகழ்ச்சிதிட்டம் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. சமூக சேவைகள் அமைச்சு கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் குறித்து பல் வேறு வேலைத் திட்டங்களை தொடர்ச்சியாகவே ஆற்றி வருகின்றது. (90)




## இந்த நாடு உருப்படுவதற்கு இதுதான் வழி

மே 18 ஐ முன்னிட்டு, ஒரு முன்னேற்பாடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை அஞ்சு நாட்கள் மூடியிருக்கெல்லோ...

இது ஏனெண்டு ஆருக்காவது விளங்கியிருக்குமோ தெரியாது. ஆனால், நம்தமிழ் உலகம் இதை வைச்சு ஆயிரமாயிரம் பிரியாணியைப் போட்டு விட்டது.

இதைப்பற்றி பக்கம் பக்கமாகப் பத்திரிகைகள் எழுதிக் கிழித்து விட்டன.

இதை வைச்சு இணையத்தளங்கள் ஒரு தகவல் புரட்சியையே நடத்தி முடித்துள்ளன.

நம் தமிழ் அரசியல்வாதிகள் மட்டும் சும்மா இருப்பார்களா? அல்லது அவர்கள் என்ன எதிலும் சளைத்தவர்களா?

அவர்களும் தங்கள் பாட்டுக்கு இதைப்பற்றிக் கண்டன அறிக்கைகளை வெளியிட்டு, குற்றம் சுமத்தி, தங்கள் பணியை முடித்திருக்கிறார்கள்.

பல்கலைக்கழக மாணவர் அமைப்பும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் பெரிய போர்க்கொடியைத் தூக்கி ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தித் தங்களைப் பற்றி வரலாற்றில் பொன்னெழுத்துகளால் தங்களைப் பற்றிப் பொறித்தும் கொண்டார்கள்.

ஆனால், இது ஏன் மூடப்பட்டது எண்டு ஒருத்தரும் சிந்திக்கவும் இல்லை. அதைப்பற்றிச் சம்மந்தப்பட்டவர்களுடன் கதைக்கவும் இல்லை.

2012 ஆம் ஆண்டு மாவீரர்நாளுக்கு இந்த மாதிரித்தான் பேப்பர்காரரும் புலம்பெயர்ந்திருக்கிற எங்கட வெளிநாட்டுக்காரரும் கூட்டமைப்புக்காரரும் பப்பாவில ஏத்திவிட நாலைஞ்சு கம்பஸ் பெடியள் விளக்கேத்தினாங்கள் எல்லோ...!

இந்தப் பெடியளை விளக்கேத்திறதுக்கு உஷார்ப்படுத்திப்போட்டு, மற்றவையெல்லாம் மெல்லக் கழண்டிட்டம்.

இந்த நாலைஞ்சு பெடியள் பாவம். வீணாகச் சிக்கி, நாலைஞ்சு மாசம் சிறையிருந்துதான் வெளியில வந்ததுகள்.

அதோட பல்கலைக்கழகமும் அஞ்சு மாதம் மூடப்பட்டிருந்துது. இந்தப் பெடியளை விட்டால்தான் பல்கலைக்கழகத்தை நடத்த விடுவம் எண்டு மாணவர்கள் போராடினால் வேற என்ன செய்யிறது?

பெடியளின்ரை வயசில அவங்கள் அப்பிடித்தான் சிந்திப்பாங்கள். அப்பிடித்தான் எதையும் பார்ப்பாங்கள். அதுவும் பல்கலைக்கழகப்பெடியள் எண்டால் கொஞ்சம் கூடுதலாகச் சுதந்திரமாகத்தானிருப்பாங்கள்.

இதில ஆரும் தப்போ தவறோ சொல்லேலாது.

ஆனால், பழச்சவை, சமூகத்தில பொறுப்பான இடங்களில இருக்கிறவை, புத்திஜீவிகள் எண்டிருக்கிறவை கொஞ்சம் நிதானமாக யோசிக்கோணும்.

இவையெல்லாம் சரியாகச் சிந்திச்சால் பல காரியங்கள் சிறப்பாக நடக்கும். பல சிரமங்கள் நடக்காமலே போகும்.

இந்த முறை மே 18 ஐ ஒட்டி ஒரு கிழமைக்கு பல்கலைக்கழகம் மூடப்பட்டதெல்லோ...

இந்த முடிவைப்பற்றி ஆரும் விமர்சிக்கலாம். விடலாம்.

ஆனால், நாலு பேரின்ரை விசுக்கோத்து வேலைகளால நாலாயிரம் ஐயாயிரம் பெடியளின்ரை படிப்பும் எதிர்காலமும் வீணாகாமல் காப்பாற்றப்பட்டிருக்கு.

ஒரு ஆறு ஏழு நாளைக்கு பல்கலைக்கழகத்தை மூடினதால அஞ்சு ஆறு மாதத்தைப் பேணிப்பாதுகாத்திருக்குது பல்கலைக்கழக நிர்வாகம் எண்டுதான் சொல்லுவன்.

இதைத்தான் புத்திசாலித்தனமான முடிவு எண்டு சொல்லிறது.

ஒரு கிழமையை இழந்தாலும் அஞ்சு ஆறு மாதத்தைப் பாதுகாத்திருக்கிறதுக்காகப் பல்கலைக்கழக நிர்வாகத்தைப் பாராட்டோணும்.

ஆனால், எங்கட ஆட்கள் என்ன செய்யினம் தெரியுமா?

'விடடா கெடப்போகிறன். வேணுமெண்டால் வா, வந்து பந்தயம் கட்டு' எண்டெல்லோ இந்த மாதியான விசுக்கோத்து வேலைகளுக்கு முன்னுக்கு வந்து நிக்கினம்.

இப்ப பல்கலைக்கழகத்தை அப்பிடியே வைச்சிருந்தால், அங்க நாலுபேர் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு தாங்கள் நினைச்ச மாதிரி நடக்க, அது பெரிய வில்லங்கமாகி, அடிதடி எண்டு வளர்ந்து கைது, சிறை வரை போயிருந்தால்....

பேப்பர்காரருக்குக் கொண்டாட்டம். அரசியல்வாதிகளுக்குத் திருவிழா. இணையப் புரட்சிப்படைக்குப் புரியாணி.

என்ன செய்யிறது, இதொண்டுக்கும் இடம் வைக்காமல், புத்திசாலித்தனமாக நடந்து எல்லாரையும் சப்பெண்டு ஆக்கி விட்டுது பல்கலைக்கழக நிர்வாகம்.

இதுக்காக இதோட – இந்த முடிவோட சம்மந்தப்பட்டவைக்கு நாங்கள் ஒரு சபாஷ் சொல்லத்தான் வேணும்.

**மற்றவையைப் பார்த்து எங்கட பின்பக்கத்தையும் ஒருக்கால் காட்டலாம்.**

இப்பிடி ஒவ்வொரு முடிவையும் அதோட சம்மந்தப்பட்டவை கொஞ்சம் புத்தியாக – நிதானமாக எடுத்தால் இந்த நாடு உருப்படும். நாடு உருப்பட வேணும் எண்டால் நாங்கள் உருப்படியாக நாலு காரியம் செய்யவேணும்.

மிகப்பெரிய உண்மை இது, பலமே வாழ்வு பலவீனமே மரணம். - விவேகானந்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## அதிசயங்களுக்குக் காத்திருத்தல்!

நம்முடைய அரசியல் ஆய்வாளர்கள், புத்திஜீவிகள், கட்டுரையாளர்கள் யாரும் அவல வாழ்விலிருக்கும் மக்களின் நிலையையும், பின்னடைந்து செல்லும் தமிழ்ச் சமூக நிலைமையையும் கவனத்தில்' கொண்டு எழுதுவதைக் காணமுடிய்வில்லை.

இலங்கையிலுள்ள இனப்பிரச்சினையானது உள்ளூரில் தீர்க்கப்படக் கூடிய கட்டத்தைக் கடந்துவிட்டது, இனி சர்வதேச தலையீடோ அழுத்தமோ மத்தியஸ்தமோ இன்றி இங்கு எந்த மாற்றமும் ஏற்படாது என்று சோழிகளை உருட்டிவிட்டுக் குறிசொல்வதுடன் தங்களது அரசியல் ஆய்வுப் பார்வையை முடித்துவிட்டுக் காத்திருக்கிறார்கள்.

இப்படி நாங்கள் விருப்பப்பட்டதையே வாசித்தும் கேட்டும் நமது ரோசக்கனவுகளைப் பூர்த்தியாக்கக் கூடிய கணக்குகளைப் போட்டுவரும் மக்களும் அதிசயங்களுக்காகக் காத்திருப்பதில் நாட்களைக் கடத்தி வருகிறார்கள்.

இலங்கை அரசுடன் பேசுவதன் மூலமே இலங்கையிலுள்ள தமிழர்கள் தங்களுக்கான தீர்வைக் காண வேண்டும் என்று பாந்தமாகவும் சாடைமாடையாகவும் இந்தப் பிரச்சினை தீர்வதில் அக்கறையுள்ள சர்வதேச நாடுகள் சொல்வதை யாரும் காதில் வாங்கிக் கொண்டதாகவே காட்டிக்கொள்வதில்லை.

இலங்கை அரசாங்கத்திற்குப் பூட்டுப் போட்டு விழுத்தி யாராவது அதன் கையிலிருந்து தீர்வைப் பறித்துத் தருவார்கள் என்ற சொகுசு நம்பிக்கையை இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் மக்களுக்குக் களவாய் விழுங்கக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள்? மக்களும் எவ்வளவு காலத்துக்குத்தான் இந்த ஏமாற்றை விழுங்குவதற்காக வாயை மட்டும் திறந்து வைத்துக் கொண்டேயிருப்பார்கள்?

அவர்களும் சளைக்காமல், "பேசுங்கள், நீங்களாகப் பேசித்தான் தீர்வைக் கண்டு உங்கள் நாட்டில் நிரந்தரமாய்ச் சேர்ந்தொன்றாய் வாழ வேண்டும்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களும் விடாமல், "நாங்கள் பேசித் தீர்வெதையும் எடுத்துவிட முடியாது என்பதை சர்வதேசத்துக்கு நிரூபிப்பதில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

காரணம் என்னவென்றால், பேச்சுவார்த்தையை வெற்றிகரமாக்கும் திட்டங்களோ, இந்த நாட்டிலுள்ள சிந்திக்கக் கூடிய தரப்புகளுக்கு – நியாயவுணர்வுள்ள பேரளவிலான மக்களுக்கு நமது நிலையை விளக்கி வென்றெடுக்கக் கூடிய உழைப்போ மேற்கொள்ள இவர்கள் தயாராயில்லை.

அரசையும் பெரும்பான்மைச் சமூகத்தையும் வெறுமனே திட்டிக் கொண்டிருந்தால் எங்கிருந்தாவது வௌவால்களோ வல்லூறுகளோ வந்து எதையாவது பிடுங்கித் தரும் அல்லது வாக்குகளாவது விழும் என்ற சொகுசு அரசியலுக்கு பழக்கப்பட்டு விட்டார்கள்.

மக்களும்.... ஆத்திரத்தை வெறுப்பாக்கிக் கொள்ளவும் அதிசயத்துக்குக் காத்திருக்கவும் தான் முடியுமே தவிர, வேறு சிந்திக்கும் சிரமமெல்லாம் படவே மாட்டோம் என்பதில் மிக உறுதியாகவே உள்ளார்கள்.

"வெளிநாட்டுப் பிடி இறுகுது பிடி இறுகுது பிடி இறுகுது" என்று கூவிக் கொண்டே குண்டுச்சட்டிக்குள் வட்டமடிப்பதில்தான் எங்கள் பெரும்பான்மைத் தமிழ் ராஜதந்திரம் கொடி நாட்டுகிறது!

வன்முறையும் வெறுப்பும் நம்மிடம் இருப்பதையும் பறித்துவிடும், எதையுமே அளிக்காது என்பதை இன்று நம்மைவிட உணர்ந்தவர்கள் யாரிருக்க முடியும்? ஆனபோதும், வெறுப்பையும் வன்முறையையும் தூண்டும் பேச்சுக்களுக்கு அப்பால் எதையும் நகர்த்தத் தெரியாதவர்களையே இன்னும் நம் தலைவர்களாகச் சொல்லி உலா வர அனுமதித்துக் கொண்டிருக்கிறோம்.

ஒட்டுமொத்த சமூகத்தையே பாசிஸ மனநிலைக்குள் அமிழ்த்தும் வெற்று வீம்பு ரோச உரையாடல்களே இன்றும் நம் அரசியல் அபத்தமாகத் தொடர்கிறது. இதுகுறித்துத் தமிழ்மக்கள் விழிப்படைந்தாக வேண்டும்.

-ஆசிரியர்.

# நம்பிக்கையில்லா பிரேரணை

# வாக்களிப்பிலிருந்து விலக முடிவு

### -தேசிய சுதந்திர முன்னணி அறிவிப்பு-

அரசாங்கத்திற்கு எதிரான ஐக்கிய தேசியக் கட்சியின் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு வாக்களிப்பதில் இருந்து விலகியிருக்கப் போவதாக தேசிய சுதந்திர முன்னணி நேற்று தீர்மானித்துள்ளது.

அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் மொகமட் முசம்மில் இந்தக் தகவலை வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்ற விவாதத்திலும் கலந்து கொள்ளப் போவதில்லை என்றார்.

இதுதவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது நிலைப்பாடு தொடர்பில் தற்போது கலந்துரையாடலில் ஈடுபட்டு வருகின்றது.

ஜே.வி.பி, அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கை இல்லா பிரேரணை தொடர்பில் ஆதரவாகவோ, எதிராகவோ வாக்களிப்பது குறித்து தமது நிலைப்பாட்டை இதுவரை வெளியிடவில்லை.

நாட்டில் அபாயகர மருந்துகள், போதைப்பொருள் மற்றும் மதுபானங்கள் மீதான கட்டுப்பாடுகள் குறித்து இந்த நம்பிக்கையில்லா பிரேரணை ஐக்கிய தேசியக் கட்சியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க மட்டக்களப்பில் நடமாடும் சேவை

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மற்றும் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவுடன் இணைந்து சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கும் நடமாடும் சேவை இடம்பெற்று வருகின்றது.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். கிரிதரன், உதவி மாவட்டச் செயலாளர் எஸ்.ரங்கநாதன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மனநலவளத்துறை வைத்திய நிபுணர் கே.கடம்பநாதன், வை.எம்.சீ.ஏ. உத்தியோகத்தர்கள், சிறுவர் கழகத்தினர் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில், செயல்திட்டம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டதுடன், சிறுவர் குழுக்களின் விழிப்புணர்வு நாடகங்களும் நடைபெற்றன. வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளான அங்கவீனமுற்ற சிறுவர்கள், மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த சிறுவர்களின் சமூக பொருளாதார சூழலை மேம்படுத்துவதற்கான செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு கிறிஸ்தவ வாலிபர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிகழ்வானது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் எதிர்வரும் யூன் மாதம் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

# மர முந்திரிகை அறுவடை ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை 500 ஏக்கரில் மரமுந்திரிகை செய்கையிடப்பட்டதாக இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய முகாமையாளர் கே.சசிகரன் தெரிவித்தார்.

கடந்த வருடம் செய்கையிடப்பட்ட மரமுந்திரிகை செய்கையின் அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு, கிராண்குளம், களுவாஞ்சிக்குடி, வாகரை, செங்கலடி உட்பட பல பிரதேச செயலகப் பிரிவுகளில் மரமுந்திரிகை செய்கையிடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அறுவடையாகும் மரமுந்திரிகை பழங்கள் மற்றும் விதைகள் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதிகளில் வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதனை மக்கள் மிகவும் ஆர்வத்துடன் கொள்வனவு செய்கின்றனர்.

இதனால் மரமுந்திரிகை செய்கையாளர்கள் பெரிதும் நன்மையடைகின்றனர்.

இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக மரமுந்திரிகை அறுவடை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆர்ப்பாட்ட தடை உத்தரவுகளுக்கு ஒருவாரகால முன்னறிவிப்பு அவசியம்

### கொழும்பு நீதவான் பொலிஸாருக்கு அறிவுறுத்து

எதிர்வரும் காலங்களில் ஆர்ப்பாட்டங்களுக்கு தடை உத்தரவு 'பெற வேண்டுமாயின் ஒரு வாரத்திற்கு முன்பே நீதிமன்றிற்கு அறிவித்திருக்க வேண்டும் என கொழும்பு நீதவான் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் செய்து கைது செய்யப்பட்ட இணை சுகாதார விஞ்ஞான பீட மாணவர்களை நீதிமன்றில் நேற்று முன்தினம் பொலிஸார் ஆஜர்ப்படுத்திய போதே நீதவான் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

ஆர்ப்பாட்டம் ஒன்றுக்கு தடை விதிக்கும் போது ஏற்பாடு செய்த தரப்பினரிடமும் கருத்தறிய வேண்டியுள்ளதென நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் உரிமைப் போராட்டங்களை முன்னெடுக்கவென ஆர்ப்புபாட்டங்கள் ஏற்பாடு செய்யும் போது சமூக அமைதிக்கு பங்கம் ஏற்படும் என்ற கருத்தை முன்வைத்து பொலிஸார் நீதிமன்றில் தடை உத்தரவு பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் 19 வருடங்களாக சட்டவிரோதமாக தங்கியிருந்தவர் கைது

இலங்கையில் 19 வருடங்கள் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் அநுராதபுரம் பிரதான நீதவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதி யுரேசா டி சில்வா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான இந்தியப் பிரஜை மீது 26ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் - பரசன்கஸ்வெவ, கோலிபெந்தேவ பகுதியில் வைத்து குறித்த இந்தியப் பிரஜை கைது செய்யப்பட்டுள்ளார்.

## மாணவத்தலைவர் மீது கத்திக்குத்து தாக்குதல்

பலபிட்டிய பிரதேசத்துக்குட்பட்ட பாடசாலையொன்றின் மாணவத் தலைவர், அதே பாடசாலை மாணவரொருவரினால் கத்திக்குத்துக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவத் தலைவர், நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# காந்தி - இந்தியா

சுகு-ஸ்ரீதரன்

**தான் ஒரு பண்பாட்டு மரபைச் சேர்ந்தவராக இருந்தாலும் சக மனிதர்களின் கலாசாரம் பழக்கவழக்கங்களை புண்படுத்தாமல் வாழவேண்டும் என்று எப்போதும் வலியுறுத்தினார். போராட்டத்தின் பெயரில் மக்களை அவலத்தில் தள்ளி விடும் பொறுப்பற்ற செயல்கள் அவரிடம் இருக்கவில்லை. வெறுப்பு, பகை உள்ளங் என்பன அவரிடம் காணப்படவில்லை. சாமானிய மனிதர்களின் சார்பில் அதிகாரத்திற்கு அழுத்தம் தருவது மனச்சாட்சியை உலுக்குவதே அவரின் போராட்டத்தின் சாரம்சமாக இருந்தது.**

**காலனி** ஆதிக்கத்திற்கெதிரான இந்திய சுதந்திர இயக்கம் இந்தியாவிற்கும் உலகிற்கும் பல அறங்களைக் கற்றுத் தந்தது.

வன்முறை சாராத காந்தியாரின் போராட்ட முறைமை எதிரிகளின் மனச்சாட்சியை உலுக்கியது. இந்தியாவின் கோடான கோடி மக்களை ஆகர்சித்தது.

துன்புறும் மனிதர்கள் மீது அவர் கருணை கூர்ந்தார்.

இந்திய ஆன்மிகத்தில் உருவான எளிமையான வாழ்க்கை, கொல்லாமை, பொய்யுரையாமை என சமூக விழுமியங்கள் அவர் மீது தளை விட்டன

மனிதர்கள் மீது இயல்பான சமத்துவத்தையும் நேசிப்பையும் அவர் கொண்டிருந்தார்.

நிறவெறிக்கெதிரான அவரது ஆட்சேபங்கள்* அவரை நெருக்கடிக்குள் தள்ளின.

தென்னாபிரிக்காவில் ரயிலிலிருந்து தள்ளிவிடப்பட்ட அந்த இடத்திலிருந்து பிரதானமாக தனது அறப்போராட்டத்தை தொடங்கினார்.

மனிதர்களின் சுயமரியாதை, கண்ணியம் பற்றிய அக்கறைகளே அவரின் சுதந்திரப்போராட்ட அற உணர்வின் அடிப்படையாக அமைந்தன.

சாதாரண சராசரி இந்தியர்களின் வாழ்க்கையைத் தரிசிப்பதற்கான அவரது 3 ஆம் பெட்டி ரயில் பயணங்களும் எளிமையான ஆச்சிரம வாழ்வும் இந்திய மக்கள் பற்றிய அவரின் தேடல் உணர்வின் வெளிப்பாடாகும்.

இராட்டினத்தில் நூல் நூற்றல், எளியோருடன் வாழ்வது, பொது மல கூடங்களைச் சுத்தப்படுத்துவது, தொழு நோயாளர்களுக்குச் சேவகம் செய்வது பிரார்த்தனைகளில் ஈடுபடுவது என்பது அவரது வாழ்க்கைமுறையாக இருந்தது.


சாதியின் கொடூரத்தில் சிக்கிய மனிதர்களை கடவுளின் குழந்தைகள் என்றார்.

வாழக் கடினமான கரடு முரடான பகுதிகளில் தனது ஆச்சிரமங்களை அமைத்தார்.

இந்தியப் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்களை தனது நீண்ட இந்திய தரிசனத்தினூடாக கண்டடைந்தார்

அவர் ஒரு சமூக ரிசியாக வாழ்ந்தார்.

தான் ஒரு பண்பாட்டு மரபைச் சேர்ந்தவராக இருந்தாலும் சக மனிதர்களின் கலாசாரம் பழக்க வழக்கங்களை புண்படுத்தாமல் வாழவேண்டும் என்று எப்போதும் வலியுறுத்தினார்.



மக்களிடமிருந்தும் சகாக்களிடமிருந்தும் உலகின் உன்னத மனிதர்களிடமிருந்தும் கற்றுக் கொள்ள அவர் எப்போதும் தயாராக இருந்தார். ஆலோசனைகள் கருத்துக்களைக் கேட்டார்.

இந்திய மனிதர்களின் நிலைமையை தாம் வாழவேண்டும் என்பதற்காக மேல் சட்டையில்லாத அரைநிர்வாணியாக அவர் வாழ்ந்தார்.

அந்தக் கோலத்தில் எந்த பிரபுக்கள் சபையிலும் ஏறுவதற்கு அவர் கூச்சப்படவில்லை.

ஐன்ஸ்ரீன் போன்ற மாபெரும் விஞ்ஞானிகளால் அவர் நேசிக்கப்பட்டார்.

சட்ட மறுப்பு இயக்கங்கள்- தான் கைது செய்யப்படும் போதும் விடுதலை செய்யப்படும்போதும் பதட்டமில்லாத இயல்பான மனித தோற்றத்துடன் அவர் காணப்பட்டார்.

சிறை அதிகாரிகள்- பிரித்தானிய அதிகார வர்க்கத்தினர் செயற்பாடுகளை அஞ்சாமை புன்முறுவலுடன் நோக்கினார்.

தனது ஆன்மீக நம்பிக்கைகள் சமூக கலாசார பெறுமானங்களுடன் இந்திய சமூகத்தை நோக்கினார்.

நிறவாதம், காலனி ஆதிக்கம், அடக்குமுறை, சுரண்டல் - இவை தொடர்பான இயல்பான சொந்த அனுபவங்களினூடாக அவரது எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டது.

அதற்காக நிதானமாக அமைதியாக மக்களைத் திரட்டினார்.

போராட்டத்தின் பெயரில் மக்களை அவலத்தில் தள்ளி விடும் பொறுப்பற்ற செயல்கள் அவரிடம் இருக்கவில்லை.

தான் தனது குடும்பம் எல்லாவற்றையும் இந்திய மிடிமை வாழ்வின் பகுதியாகவே கண்டார்.

வெவ்வேறு, மதங்கள், மொழிகள், கலாசாரங்கள் எல்லாவற்றையும் இந்தியா என்று ஒன்றிணைக்கும் வல்லமை அவரிடம் காணப்பட்டது.

உலகளாவிய அளவில் போராட்ட அறம் அவரால் கற்றுத்தரப்பட்டது. சாமானிய மனிதர்களின் சார்பில் அதிகாரத்திற்கு அழுத்தம் தருவது மனச்சாட்சியை உலுக்குவதே அவரின் போராட்டத்தின் சாரம்சமாக இருந்தது.

ஒரு கீழைத்தேச மனிதரின் முழு மனச்சாட்சியாக அவர் இருந்தார்.

மாட்டின் லூதர், நெல்சன் மண்டெலா போன்ற சமகால உன்னத மனிதர்களின் வழிகாட்டியாகவும் அவர் திகழ்தார்.

கிறிஸ்தவத்தின் அறக் கோட்பாடுகளின் அடிப்படையில் எழுந்த லியோ ரோல்ஸ்ரோயின் எழுத்துக்கள் அவரை ஆகர்சித்தன.

இந்துத்துவ கிறிஸ்தவ இஸ்லாமிய அறங்கள் அவர் மேல் செல்வாக்குச் செலுத்தின. மதச்சார்பற்ற இந்தியாவை உருவாக்குவதில் இவை பங்களித்தன.

வெறுப்பு, பகை உள்ளம் என்பன அவரிடம் காணப்படவில்லை.

ஜவகர்லால் நேரு, அம்பேத்கர், பட்டேல், ஜின்னா போன்ற ஆளுமைகளின் கருத்துக்களுக்கெல்லாம் இடைவெளிகளைக் கொண்ட பன்முகத்தன்மை வாய்ந்ததாக காந்தியம் காணப்பட்டது.

சுதந்திர இந்தியாவின் அதிகாரத்திற்கு வருவதற்கு அவர் ஒருப்படவில்லை.

காந்தியாரின் சகிப்புத்தன்மை தீவிரவாத சக்திகளுக்கு கசப்பாக இருந்தது.

இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக எரிந்து கொண்டிருந்த தேசத்தில் தன்னை ஒறுத்தார். வன்முறையில் ஈடுபட்டவர்களின் மனச்சாட்சியை கிளறிவிட அவர் பாடுபட்டார்.

இது மிக மிக அசாதாரணமானது.

எரியும் நெருப்புக்கு நடுவே அவர் உண்ணாவிரதம் சத்தியாக்கிரகம் இருந்தார்.

வெறுப்பு, குரோதம் மனிதர்களை மனிதர் மாய்க்கும் செயற்பாட்டிற்கெதிராக அவர் நெருப்பின் நடுவே நின்றார்.

தனது எரியும் இதயத்தை அவர் திறந்து காட்டினார்.

காந்தி காட்டிய வழியில் இந்தியாவும் உலகமும் இருக்குமானால் உலகில் அதிகாரங்களுக்கு இடமில்லை. காழ்ப்புணர்வு விரோதம் சுரண்டலுக்கு இடமில்லை.

மனித குலத்திற்கான அறம் பற்றி காந்தியும் கார்ல் மார்க்சும் தத்தமது அனுபவங்களிலிருந்து போதித்தார்கள்.

வன்முறையற்ற உலகிற்கான அவரது கனவுகள் போதனைகள் செயற்பாடுகளை மீறி இந்தப் பிராந்தியம் - உலகம் வன்முறையின் களமாக மாறியிருக்கிறது.

காந்திய அறங்கள் உலகளவில் வாழ்க்கைமுறையின் எல்லா மட்டங்களிலும் பலவீனமடைந்துள்ளது. புதிய சமூக அனுபவங்களின் தார்மீகக் கூறுகளையும் உள்ளடக்கி இது செழுமையுடன் முன் கொண்டு செல்லப்படவேண்டும்.

காந்திய விழுமியங்கள் உலக வாழ்வில் மீள் செலுத்தப்படவேண்டும்.

ஆக்கிரமிப்பு, யுத்தம் மனிதப்படுகொலைகளுக்கெதிராக இவை முன்நிறுத்தப்படவேண்டும்.

இயற்கை அழிவு, பிராணி வதைகள், ஊழல், சமூக மோதல்கள், அரச-மற்றும் குழுக்களின் வன்முறைகள் தொடர்பில் காந்தியம் உன்னதமான போதனைகளை வழங்குகிறது.

பெரும் கோடீஸ்வரர்களும் பஞ்சத்தில் உழலும் கோடானகோடி மக்களும் காந்தியத்திற்கு முரண் நிலையாகும்.

சிறந்த கல்வியும் விரிந்த பார்வையும் இந்திய சுதந்திர இயக்கத்தின் ஆதார அடிப்படையாக இருந்தன..

இந்தப் பிராந்தியத்தில் இந்தியா ஒரு மாபெரும் ஜனநாயகமாக உருக்கொள்வதற்கு அதன் அறப்போராட்ட பாரம்பரியம் ஒரு மூலவிசையாகும்.

உலகில் நாம் கருதிய பல நாடுகள் சிதைவுற்ற நிலையிலும் இந்தியா நிற்கிறது.

இது நாம் ஆழமாகச் சிந்திக்கவேண்டிய விடயம்.

சுதந்திர இயக்கம் ஜனநாயக நெகிழ்வுத் தன்மை கொண்ட வெவ்வேறு மனிதர்களிடையே நல்லிணக்கத்தை வெளிப்படுத்துவதாக அது அமையவேண்டும்.

நாம் கருதிய சோவியத் நாடு நிற்கவில்லை. இந்தியா நிற்கிறது.

காந்தியடிகளின் தலைமை இந்திய தேசிய சுதந்திரத்திற்கப்பால் இந்திய மக்களின் சமூக ஏற்றத்தாழ்வுகளை களைவதில் முன்செல்லமுடியவில்லை. அது இன்றைய தலைமுறையினரால் தான் முன்னெடுக்கப்படவேண்டும்.

மனிதர்கள் ஒருவரை ஒருவர் மதித்தல், வன்முறையற்ற மனோநிலை, கருணை என்பன காந்திய அறங்கள்.

ஆனால் இன்றைய நிலைமை...

தீண்டாமைக் கொடுமைகள் -மதப் பூசல்கள்- மேலாண்மை ஊழல் என்பன தலைவிரித்தாடுகின்றன.

சகிப்புத்தன்மையற்ற வாழ்வு இங்கு பெரும் சவால். எடுத்ததற்கெல்லாம்

வன்முறை என்ற நிலை உருவாகியிருக்கிறது.

காந்தியாருக்குப் பின் வியட்னாமிலும் சில ஆபிரிக்க நாடுகளிலும் மத்திய கிழக்கிலும் பல மிலிலியன் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

சாதாரண மக்களின் நலன்களைப் புறக்கணிக்கும் எதிர்த்திசையில் உலகம் பிரவேசிக்கத் தயாராகியிருக்கிறது.

இன்றைய அராஜக வாழ்வில் மாற்றம் தேவை. காந்திய சிந்தனை இன்று மிக விசாலமாக முன் கொண்டு செல்லப்படவேண்டும்.

நிலமானிய சித்தனையின் தாக்கங்கள் அதில் இருந்தாலும் நவீன வாழ்வில் காந்தியத்தை அதன் வழியில் பிரசன்னப்படுத்தவேண்டும்.

உலகளாவிய அளவில் அதிகாரங்களுக்கெதிரான பண்பாட்டுப் புரட்சிகள் தேவைப்படுகின்றன.

இந்திய சுதந்திர இயக்கத்தின் செல்வாக்கிலிருந்த பாகிஸ்தான், பங்களாதேஷ், மியன்மார், இலங்கையில் வெவ்வேறளவில் இராணுவ வகைப்பட்ட அதிகாரங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இன சமூகங்களின் அபிலாசைகள் சாதாரண மக்களின் சமூக பொருளாதார அபிலாசைகள் கவனப்படுத்தாத வரை உண்மையான சமத்துவம் நிலவாது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் பொலிஸார் செயற்பட வேண்டும்

### தேசிய ஐக்கிய முன்னணி தலைவர் ஆலோசனை



நாட்டின் சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகள் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் பொலிஸார் நடந்து கொள்ள வேண்டும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத ஸாலி தெரிவித்துள்ளார்.

வர்த்தக போட்டியை நியாயமான முறையில் எதிர்கொள்ள முடியாதவர்களே வன்முறையை தூண்டும் வகையில் செயற்படுகின்றன.


நியாயமான விலையில் தரமான பொருட்கள் கிடைக்குமாயின், நுகர்வோர் அந்த வர்த்தக நிலையங்களை நாடிச் செல்வதை எவராலும் தடுக்க முடியாது

அளுத்தமை மற்றும் மாவனல்லை ஆகிய பகுதிகளில் இந்தப் பாணியிலேயே கடை உடைப்பு மற்றும் கடைகள் எரியூட்டப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறான தாக்குல்களின் பின்னணியில் செயற்படும் கும்பலை இதுவரை பொலிஸாரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

நாட்டில் இடம்பெறும் பாரதூரமான குற்றங்களின் குற்றவாளிகளை ஒருசில நாட்களில் கைதுசெய்ய முடியுமானால், இவ்வாறான சம்பவங்களின் ஒரு சந்தேகநபரையாவது ஏன் இதுவரை கைது செய்யவில்லை.

இதன்மூலம் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா? என்ற சந்தேகம் எழுகின்றது என்றார்.



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச கொழுமபு மாவட்ட பேராயர் வணக்கத்துக்குரிய மல்க்கம் ரஞ்ஜித் ஆண்டகையை அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன் தான் முன்வைத்துள்ள கோரிக்கைகள் அடங்கிய ஆவணத்தையும் பேராயரிடம் கையளித்தார்.

## சட்டம், ஒழுங்கு தொடர்பாக ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கக் குழு

(கொழும்பு)

சட்டம், ஒழுங்கு தொடர்பில் ஆலோசனைக் குழுவொன்று உருவாக்கப்படவுள்ளது.

சட்டம், ஒழுங்கு விவகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் இந்தக் குழு உருவாக்கப்படவுள்ளது.


சட்டம் ஒழுங்கு தொடர்பில் கொள்கை வகுப்பு மற்றும் திட்டங்களை முன்னெடுத்தல் தொடர்பில் இந்தக்குழு ஜனாதிபதிக்கு நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆலோசனைக்குழு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் கீழ் இயங்கும் .மத முரண்பாடுகள், சமூகப் பிரச்சினைகள், இன பிரச்சினைகள் தொடர்பில் இந்தக் குழு ஆலோசனை வழங்கவுள்ளது.

இந்த ஆலோசனைக்குழு சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளாது பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது குறிதது ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் என தெரிவிக்கப்படுகிறது.

மத முரண்பாடுகளை தடுக்கும் நோக்கில் ஏற்கனவே விசேட காவல்துறைப் பிரிவொன்று உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதற்கு மேலதிகமாக இந்த விசேட ஆலோசனைக்குழுவினையும் அரசாங்கம் நிறுவத் திட்டமிட்டுள்ளது.

# உயிரிழந்த படையினருக்கு நாடாளுமன்ற வளாகத்தில் நினைவஞ்சலி



முப்படை வீரர்களை நினைவு கூரும் படையினர் நினைவஞ்சலி தேசிய நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற மைதான வளாகத்தில் உள்ள படைவீரர் நினைவுத் தூபிக்கு அருகில் நடைபெற்றது.

யுத்தம் நிறைவடைந்து 5 ஆண்டுகள் முடிவடைந்திருக்கும் நிலையில் யுத்தத்தில் பலியான முப்படை வீரர்களுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

பிரதமர் டி.எம்.ஜயரட்ன, அமைச்சர்கள், முப்படைத் தளபதிகள், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் மாகாண ஆளுநர்கள் ஆகியோர் படையினரின் ஞாபகார்த்தமா அமைக்கப்பட்டுள்ள தூபிககு மலரஞ்சலி செலுத்தினர்.

யுத்தத்தில் உயிர்நீத்த படையினரின் உறவினர்கள் தீபமேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

முப்படைத் தளபதியான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு தேசிய கீதத்துடன் ஆரம்பமானது.

அதனையடுத்து இருநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையும், பெரு நாத முழக்கத்துடன் படையினருக்கு மலரஞ்சலியும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உயிரிழந்த படையினரின் குடும்ப உறவினர்கள் 6000 பேர் கலந்துகொண்டிருந்தனர்.

# கலப்பு அரசாங்கத்தை விரட்டும் காலம் வந்துள்ளது

### கூறுகிறார் சரத் பொன்சேகா

தூரநோக்கற்ற கலப்பு அரசாங்கத்தை விரட்டி விடுவதற்கான காலம் நெருங்கியுள்ளதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றின்போதே அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -


அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் தேர்தலில் வெற்றி பெற்றபின், பொதுமக்களுக்கு எதுவும் செய்யாமல், அவர்களைக் கொல்லாமல் கொன்று அடுப்பில் போடுகின்றார்கள்.

சொந்த விருப்புக்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற இந்த தலைவர்களை விரட்டுவதற்கான காலம் நெருங்கியுள்ளது. எங்களுக்கு நம்பிக்கை மிகு அரசியல்வாதிகளே தேவை. இந்து சமுத்திரத்தின் முத்து என அன்று வர்ணிக்கப்பட்ட எங்கள் பொன்னிலங்கை இன்று வெறும் வித்தாக மாறியுள்ளது.

நாட்டை அழிவின்பால் இட்டுச் செல்கின்ற, சாறை உறிஞ்சி சக்கையை தருகின்றவர்களுடன் நாங்கள் சென்றால், நாய்களுடன் உறங்கி, நாய்த் தேள்களுடன் விழித்து எழலாம். இன்று அந்த நிலைதான் உருவாகியுள்ளது.

எந்தவொரு இழி செயலையும் செய்பவர்களுக்கு இன்று அரசியலில் முதலிடம் வழங்கப்பட்டுள்ளது.

சிறுவர் பாலியல் வல்லுறவுகளிலும், கொலை கொள்ளைகளிலும் ஈடுபடுகின்றனர். அவர்களுக்காகத்தான் இன்று அரசியல் ஆசனங்கள் ஒதுக்கப்படுகின்றன.



நீதிக்கு இடம் இல்லை. அநியாயமே அரசோச்சுகின்றது. இன்று நாட்டில் உள்ள கலப்பு அரசியலுக்கு முடிவு கட்டும் காலம் நெருங்கியுள்ளது என்றார்.

## தரம் -1 மாணவர் இணைப்பு; அமைச்சரவை உபகுழு நியமனம்

2015 ஆம் ஆண்டில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் செயற்பாட்டுக்கான அமைச்சரவை உப குழுவொனறு நியமிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் இக்குழு செயற்படவுள்ளது.குறித்த அமைச்சரவை உப குழு முதலாம் தரத்திற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பாக ஆராய்ந்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் அறிக்கை சமர்ப்பிப்பர் என்றும் அந்த அறிக்கையை ஆராய்ந்த பின்னர் எடுக்கப்படும் தீர்மானத்திற்கமைவாக கல்வி அமைச்சு மேலதிக நடவடிக்கை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பாக அமைச்சரவைக் உபகுழுவினால் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லையென்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

## போதைப்பொருளைக் கட்டுப்படுத்த சுங்கத் திணைக்களத்தின் புதிய பாடநெறி

போதைப்பொருள் கட்டுப்பாடடு செயற்பாட்டை பலப்படுத்துவதற்காக இலங்கை சுங்கத் திணைக்களம் புதிய பாட நெறியொன்றை நேற்றுமுன்தினம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்போது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கொள்கலன்கள் தொடர்பிலான பரிசோதனை குறித்து கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளது. இதன்படி, எதிர்காலத்தில் போதைப்பொருள் தொடர்பில் கடும் கட்டுப்பாடுகளை விதிக்க முடியும் என்று கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெறற செய்தியாளர் சந்திபபில் சுங்க பணிப்பாளர் நாயகம் ஜகத் பி.விஜேவீர தெரிவித்துள்ளார். இதுதவிர, போதைப் பொருள் கடத்தலை உறுதிப்படுத்துவதற்கு மோப்ப நாய்கள பிரிவொன்றையும் ஸ்தாபிப்பதற்கு இலங்கை சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# பௌர்ணமி காலங்களில் விமலின் புத்தி பேதலித்து விடும்

### உயர் கல்வி அமைச்சர் தெரிவிப்பு

பௌர்ணமி காலங்களில் அமைச்சர் விமல் வீரவன்சவின் புத்தி பேதலித்து விடும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தமக்கு எதிராக சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நிதி அமைச்சின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தரவை, எஸ்.பீ போன்றவர்கள் தேவையற்ற வகையில் போற்றி வருவதாகவும், பீ.பி. ஜயசுந்தர சிறையில் தணடனை அனுபவிக்க வேண்டியவர் எனவும் விமல் வீரவன்ச அண்மையில் குறிப்பிட்டிருந்தார.

இது தொடர்பாக உயர்கல்வி அமைச்சர் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு சில நபர்களுக்கு பௌர்ணமி காலங்களில் புத்தி பேதலிப்பது வழமையானதே.


சிலருக்கு இவ்வாறு குறித்த காலங்களில் சிந்தனை ஆற்றல் இருக்காது எனவும் அவ்வாறான தருணங்களில் வெளியிடப்படும் கருத்துக்களை பெரிதுபடுத்தக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நபர்களுக்கு அனுதாபம் காட்டப்பட வேண்டுமே தவிர கோபபபடக் கூடாது.

இதேவேளை, தமது கொள்கைக்ளை ஜனாதிபதி ஏற்க மறுத்தால் அரசாங்கத்தை விட்டு விலகிச் செல்லப் போவதாக விமல் வீரவன்ச மீண்டும் பகிரங்கமாக அறிவித்திருந்தார். என்பதும் குறிபபிடத்தக்கது.

# பொருட்களைப் பெறுவது மட்டுமே பயனாளிகளின் கடமை அல்ல

## ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர்




பயனாளிகள் பொருட்களைப பெறுவதுதான் உங்களது கடமையாக இருக்கக்கூடாது இந்த உதவிகள் யார் மூலம் உங்களுக்கு கிடைக்கின்றது என்பதை இனங்கண்டு எதிர்காலத்தில் நீங்கள் உங்கள் பகுதி மக்கள் பிரதிநிதியை எங்கள் சார்பானவர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்தார்.

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்று பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் சிறிமோகனன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந் நிகழ்வு எளிமையான முறையில் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். சேவாலங்கா நிறுவனமானது பயனாளர்களைத் தெரிவு செய்வதில் பிரதேச மட்டத்தில் உள்ள அபிவிருத்திக் குழுக்களின் ஆலோசனைகளுக்கு அமைய தெரிவுகளை மேற்கொண்டிருந்தால் இன்னும் வேறு சில பயனாளர்களும் உள்வாங்கப்பட்டிருக்கலாம். இதன் போது சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் 53 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் சேவாலங்கா நிறுவனம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அப் பகுதியில் உள்ள 96 விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும், 125 விவசாயிகளுக்கு நீர் தெளிக்கும் உபகரணங்களும் 238 விவசாயிகளுக்கு விவசாய உளீடுகளும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் தெல்லிப்பளை பிரதேச செயலர் சிறிமோகனன், வடமாகாணசபை எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா, சேவாலங்கா நிறுவனத்தின் இணைப்பாளர் மௌலேந்திரன், சிறுவர் பாதுகாப்பு நிதிய இணைப்பாளர் புளோரியா, ஈ.பி.டி.பி தெல்லிப்பளை இணைப்பாளர் ஜெயபாலசிங்கம் (அன்பு) ஈ.பி.டி.பி சுன்னாகம் இணைப்பாளர் வலண்டயன் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக துறை சார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# இளைஞர் திட்ட இணைப்பாளராக ருக்ஸா நியமனம் பெற்றுள்ளார்

(வவுனியா)

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் வவுனியா மாவட்டத்திலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்திற்கு இளைஞர் திட்ட இணைப்பாளராக செல்வி.ஜே.ருக்ஸா நியமனம் பெற்றுள்ளார்.

எதிர்வரும் யூன் மாதம் 2 ஆம் திகதி கடமையைப் பொறுப்பேற்கும் வகையில் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும இந்த நியமனக் கடிதத்தை ஒப்பமிட்டு வழங்கி உள்ளார். நேர்முகப் பரீட்சையின் மூலமாக இந்த நியமன்ம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இளைஞர் திட்ட இணைப்பாளர் நியமனம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை. போரினால் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்ட இந்த மாவட்டங்களுக்கு இந்த நியமனம் வழங்கப்படுவது மிகவும் அவசியமானதென இப் பிரதேசங்களின் சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மிக விரைவாக தமது மாவட்டங்களுக்கும் இந்த நியமனத்தை வழங்கி உதவுமாறு அமைச்சிடம் எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார். (90)

# இளம் விஞ்ஞானிகளுக்கான விருதுக்கு விண்ணப்பம்கோரல்

தேசிய விஞ்ஞான மன்றம் மூன்றாம் உலக விஞ்ஞானங்களுக்கான கல்வி நிலையம் இளம் விஞ்ஞானிகளுக்கான (TWAS/NSF) விருது (2014) வழங்குவதற்காக 40 வயதுக்குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் முதுமானிப் பட்டமுடையவராகவும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட நாளேடுகளில் ஆராய்ச்சி, கட்டுரைகள் வெளியிட்டவராக இருத்தல் வேண்டும். அத்துடன் கடந்த ஐந்தாண்டுகளில் வெளிவந்த வெளியீடுகளின் பட்டியலொன்றை வழங்கல் விண்ணபதாரி ஆராய்ச்சி, புதிய செய்முறைகள், தொழில் நுட்பவியல்களுக்கு சிறப்பான பங்களிப்பை மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஜுலை 31 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், தேசிய விஞ்ஞான மன்றம், 7/5, மெயின்லண்ட் பிளேஸ், கொழும்பு - 07 என்ற முகவரிக்குபதிவுத்தபாலில் அனுப் பும்போது, கடித உறையின் இடதுமேல் மூலையில் "TWAS விண்ணப்பப் படிவம்" என குறிப்பிடல் வேண்டும். (105)


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்
தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்...

22.05.2014




- ஆரோக்கியமான கேள்விகள் புதிய சுற்று பதுங்கும் பதில்கள்...
- புலிகளின் தலைவர் எப்படி உயிர் தப்பினார்?
- மோடி - ஜெயலலிதா வெற்றியும் தமிழர்களுக்குத் தந்த வாக்குறுதியும்
- கிழக்கில் கைத்தொழில் முயற்சி - புதிய பார்வை



உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

மீண்டும் நாயகன்

சூடு - சுவை - சுவாரசியம் - இதுதான் தினமுரசு

INDIAN PREMIER LEAGUE 2014

# இன்றைய ஆட்டம்

**பஞ்சாப் எதிர் மும்பை**

**இடம்: சண்டீகர். நேரம்: இரவு 8 மணி**

# பிரெஞ் ஓப்பன் அசரென்கா விலகல்

(பரிஸ்)


பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி பரிஸ் நகரில் ஆரம்பமாகவுள்ளது. இதில் முன்னணி வீராங்கனையான பெலாரசை சேர்ந்த அசரென்கா கணுக்கால் காயம் காரணமாக விலகியுள்ளார்.

காயத்தில் இருந்து விரைவில் மீண்டு போட்டிக்கு திரும்புவேன். இந்த ஆண்டு பங்குபற்ற முடியாமல் போனது வருத்தம் அளிக்கின்றது. இது போன்ற சம்பவங்கள் சகல வீரர்களுக்கும் சகஜம் தான். அடுத்து வரும் தொடர்களில் முழு உடற்தகுதியுடன் களமிறங்குவேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அசரென்கா இரண்டு முறை அவுஸ்ரேலிய ஓப்பன் பட்டத்தை வென்றுள்ளார்.

# உனக்கே முதல் மகுடம்

(டாக்கா)



பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு இலங்கையைச் சேர்ந்த சந்திக்க ஹதுருசிங்க பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சகலதுறை வீரர் ஹதுருசிங்க இலங்கை அணியின் சார்பில் 26 டெஸ்ட் போட்டிகளிலும், 35 ஒருநாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார். அவரும் அதிரடி ஆட்டக்காரரான சனத் ஜெயசூரியவும் தமது டெஸ்ட் வாழ்க்கையை ஒரே போட்டியில் தொடங்கினர். இருவரும் நியூசிலாந்து அணிக்கு எதிராக ஹமில்டன் நகரில் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் களமிறங்கினர்.

அந்த அணிக்கு அர்ஜுன ரணதுங்க தலைமையேற்றிருந்தார்.

தனது முதல் டெஸ்ட் போட்டியின் முதல் ஆட்டத்தில் ஹதுருசிங்க ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கி 23 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். எனினும் இரண்டாவது ஆட்டத்தில் அவர் அதிரடியாக ஆடி 81 ஓட்டங்களை எடுத்தார். அந்தப் போட்டி எத்தரப்புக்கும் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

மகானாமா ஹதுருசிங்க ஜோடி, இலங்கை அணியின் பலமான ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகத் திகழ்ந்தது. அத்துடன் மித வேகப் பந்து வீச்சாளராகவும் ஹதுருசிங்க திகழ்ந்தார்.

தனது முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் அரை சதம் அடித்த அவர் இலங்கை அணியில் நிரந்தரமாக இடம்பிடிக்க முடியாமல் உள்ளே வெளியே என்று இருந்தார்.

1999 ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டிகளுக்கான இலங்கை அணியில் அவர் இடம்பெற்றிருந்தாலும் ஒரு போட்டியில் கூட ஆடும் வாய்ப்பு அவருக்கு வழங்கப்படவில்லை.

பின்னர் விளையாட்டிலிருந்து ஒதுங்கிய அவர், பயிற்சியாளராக மாறி ஐக்கிய அரபு எமிரேட்டுகள் அணி, இலங்கை ஏ அணிகளுக்கு பயிற்சி அளித்தார்.

தற்போது அவுஸ்ரேலியாவின் சிட்னி தண்டர்ஸ் அணியின் பயிற்சியாளராக இருக்கும் அவர் அந்தப் பொறுப்பிலிருந்து விலகி பங்களாதேஷ் அணியின் பயிற்சியாளராக பொறுப்பேற்கிறார்.

இதன் மூலம் இலங்கை வீரர் ஒருவர் வெளிநாட்டு அணிக்கு பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றும் முதல் சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கத்து.

# சவாலான தொடர்

இங்கிலாந்து ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கு ஒத்துழைக்கும் என்பதால், விரைவில் அதற்கான பயிற்சியை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளேன். இருப்பினும் இங்கிலாந்தில் நிலவும் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு எங்களைத் தயார்ப்படுத்தி, ஆடுவது சவாலானது. இருப்பினும் ஓர் அணியாக செயற்பட்டு எல்லா சவால்களையும் முடிறியடிப்போம் என இந்திய அணியின் இளம் வீரர் புஜாரா தெரிவித்துள்ளார். உலக கோப்பையில் விளையாட வேண்டும் என்பது ஒவ்வொரு வீரரின் கனவு. ஆனால் அடுத்த ஆண்டு நடக்கவுள்ள உலக கோப்பை தொடர் குறித்து தற்போது சிந்திக்கவில்லை. அடுத்து நடைபெறவுள்ள பங்களாதேஷ் அணிக்கெதிரான ஒருநாள் தொடரில் வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில், முழுத் திறமையை வெளிப்படுத்தி, எனது திறமையை நிரூபிக்க காத்திருக்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# போட்டிச் சின்னம்




பிரேசிலில் நடைபெறவுள்ள 20ஆவது உலகக்கோப்பையின் போட்டி சின்னமாக புலகோ என்னும் ஆர்மடில்லோ பிராணி தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஆர்மடில்லோ என்பது பிரேசில் காடுகளில் காணப்படும் அருகி வரும் ஒரு வகை சாது பிராணி.

இந்த ஆர்மடில்லோ தனது கையில் கால்பந்தை வைத்திருப்பதை போன்ற உருவம்தான் போட்டியின் அதிகாரபூர்வ சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புலகோ என்ற போர்த்துக்கேய மொழிச் சொல்லுக்கு கால்பந்து என்று அர்த்தம்.

# வெளியானது உலகக் கிண்ண கால்பந்துப் பாடலின் வீடியோ



பிரேசிலில் நடைபெறவுள்ள 20 ஆவது உலகக் கிண்ண கால்பந்து தொடருக்கான உத்தியோகபூர்வ பாடலின் வீடியோ நேற்று முன்தினம் வெளியாகியுள்ளது.

உலகெங்கும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள 20 ஆவது உலகக்கிண் கால்பந்து தொடர் பிரேசிலில் 'எதிர்வரும் யூன் மாதம் 12 ஆம் திகதி முதல் யூலை 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையிலேயே இத்தொடருக்கான உத்தியோக பூர்வ வீடியோ வெளியிடப்பட்டுள்ளது. கடந்த 2010 ஆம் ஆண்டு உலகக்கிண்ண தொடர் புகழ் பாடகி ஷாகிராவின் வக்கா வக்கா பாடலை தழுவி உருவாக்கப்பட்ட இத்தொடருக்கான We Are One (Ole Ola) என்ற பாடலை, அமெரிக்காவின் பிரபல பாடகர் பீற்றர்போல், பிரேஸின் பொப் பாடகி கிளாடியா லிட்ரி மற்றும் அமெரிக்க நடிகை ஜெனிபர் லோபஸ் ஆகிய நட்சத்திரங்கள் பாடி ஆடியுள்ளனர்.

பிரேசிலின் கலை, கலாசார விழுமியங்களைத் தழுவி அமைந்துள்ள குறித்த வீடியோவில் பிரேசில் ஒரு கால்பந்து திருவிழா நடைபெறுவது போல் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.




**கால்பந்து திருவிழா**


**இன்னும் 21 நாட்கள்**

# உலக கால்பந்தாட்ட விழா

# வெல்லப்போகும் அணி எது?



டிடியர் ட்றொக்பா



**எஸ். அன்ரனிப்பிள்ளை கிளிபேட்**

தலைவர்: யாழ். கால்பந்தாட்ட லீக்

## ஐவரி கோஸ்ட் சிறு பார்வை

ஐவரி கோஸ்ட் நாட்டின்சனத் தொகை 2 கோடி. 2006ஆம், 2010ஆம் ஆண்டுகளில் உலக கிண்ண முதலாம் சுற்றில் விளையாடியது.

FIFA இன் தரப்படுத்தலின்படி, ஆபிரிக்க நாடுகளில் முதலாம் இடத்தை வகிப்பது ஐவரி கோஸ்ட் ஆகும். நாட்டுக்காக அதிக கோல்களைப் போட்ட, 36 வயது முன்கள வீரர் டிடியர் ட்றொக்பா (Didier Drogba) அணிக்குத் தலைமை தாங்குகிறார்.

31 வயதுமத்திய கள வீரர் யாயா தூரெ (Yaya Toure) யும் அணிக்குப் பக்க பலமானவர்.இது இவர்களது மூன்றாவது உலக கிண்ண போட்டியாகும்.21 வயது வலது பின் கள வீரர் சேஜ் ஓரியர் (Serge Aurier) புதிய,குறிப்பிடத்தக்க வீரராவார்.42 வயது சப்ரி லுமோஷி (Sabri Lomouchi) அணியின் பயிற்சியாளராவார்.

# முன்பள்ளிகளின் வருடாந்த விளையாட்டு






மிருசுவில் பாரதி முன்பள்ளி 48





சாவகச்சேரி அல்லாரை ஐங்கரன் முன்பள்ளி 48







மல்லாகம் தெல்லிப்பளை முன்பள்ளி



காரைநகர் தங்கோடை முன்பள்ளி 50





வேலணை மத்திய சிறுவர் முன்பள்ளி

## தென்மராட்சி வலய மட்ட விளையாட்டுப் போட்டியின்போது...



# "தலை வணங்காமல் நீ வாழலாம்"

- எஸ்.எம்.எம்.பஷீர் கட்டுரையிலிருந்து.

எம்.ஜி.ஆரின் வேட்டைக்காரன் படத்தில் இடம்பெற்ற "உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்" என்ற பாடலில் வருகின்ற ஒரு பாடல் வரிதான் "உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் தலை வணங்காமல் நீ வாழலாம்" என்பது. ஒரு மனிதன் எந்த இடத்தில் இருந்தாலும் அவன் தலை வணங்காமல் வாழ வேண்டும் என்று எம்.ஜி.ஆர் பாடுவதாக வரும் பாடல் வரிகள் இவை.

ஆனால் தலை வணங்காமல் வாழ்வது என்பது ஒருவன் மற்றவனுக்கு அடிமையாகாமல், தனது மனித உரிமைகளைக் கைவிட்டு, கட்டுப்படாமல் சரணாகதி ஆகாமல் சுதந்திரமாக வாழ்வதைக் குறிக்கிறது என்றுதான் பொருள் கொள்ள தோன்றுகிறது.

ஆனால், மனதளவில் அல்லது பண்பாட்டு அடிப்படையில் சிரம் தாழ்த்துவது, சாஸ்டாங்கமாக மனிதர்களின் முன் வீழ்ந்து, தாள் படிந்து மரியாதை செய்வது என்பது வணக்கமல்ல, மரியாதையின் உச்சமாக செய்யப்படுவது என்று பலர் அதற்கு விளக்கம் அளிக்கலாம்.

வரலாற்றுக் காலம் தொடங்கி நாம் அறிந்த வரையில் பொதுவாக ஆசியாவின் பல நாடுகளில், குறிப்பாக இந்தியா ஜப்பான் சீனா உட்பட்ட நாடுகளில் தலை வணங்கி அரசனை வழிபடுவது, சாஷ்டாங்கம் செய்வது என்பவற்றுக்கு அப்பால் மத குருக்களுக்கு தலை வணங்குவது, அவர்களின் தாள் புணிந்து சாஸ்டாங்கம் செய்வது என்பது பொதுவாக காணப்படும் ஒரு அம்சமாகும்.

ஆனால் தனி மனிதர்களுக்கு அவர்களின் வயது, தகுதி, பதவி அல்லது சமூக மத அந்தஸ்தைக் கொண்டு அவர்களிடம் ஆசி பெறுவதற்கோ, அல்லது அவர்களுக்கு மரியாதை செய்வதற்கோ அல்லது தமது நன்றிக்கடனை செலுத்துவதற்கோ சிலரின் கால்களில் விழும் நடைமுறை உலகில் ஆசிய மத சமூக ஒழுங்கு முறையில் அவதானிக்கக் கூடியது.

அப்படி ஆசி பெறுவது என்பது பண்பாட்டு அம்சமாக இருந்து வருகிறது. மனைவி கணவனுக்கும், பிள்ளைகள் பெற்றோருக்கும் இளையவர்கள் மூத்தவர்களுக்கும், என ஆசி வேண்டி காலில் விழுவதும் சாஸ்டாங்கம் செய்வதும் "கடவுளை" வழிபடுவதற்கு ஒத்ததான ஒரு நடைமுறை, பொதுவாக அதில் உள்ள அம்சம் தலை வணங்குவதாகும்.

உண்மையில் எம்.ஜி.யாரின் நெருக்கத்துக்குரியவரான இன்றைய தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா உலகில் அதிகம் தாள் பணியப்படும் ஒரு பெண்மணி என்றால் மிகையாகாது. தன்னை தாள் படிந்து வணங்கும் ஒரு அடிமைச் சமூகத்தையே உருவாக்கி வைத்துள்ளவர் ஜெயலலிதா. மொத்தத்தில் உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் தன் தலை வணங்கி வாழ வேண்டும் என்று ஒரு உதாரணத்தையே ஏற்படுத்தி உள்ளவர் ஜெயலலிதா!



இலங்கையிலும் மனிதரை மனிதர் அவரின் அரசியல், சமூக, மத உயர்ந்த நிலைக்காக வணங்குவது என்பது சகஜமாகும். ஒரு மனிதனை காலில் வீழ்ந்து வணங்குவது, மரியாதை செய்வது என்பது ஒரு வியாதியாகும். தனி மனித ஆளுமையின் அவலமான ஒரு நிகழ்வாகவே இதனைப் பார்க்க முடியும்.

இந்த தாள் பணிந்து வணங்கும் மனிதர்கள் பற்றி இக்கட்டுரையினை எழுதும் பொழுது எனது சிறு வயது வாசிப்பு செய்தி ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு தடவை சுதந்திர இந்தியாவின் பிரதமர் நேருஜி ஒரு மேடையில் உரையாற்றிக் கொண்டிருந்த பொழுது, அந்த மேடையின் முன்னால் நின்றிருந்த ஒருவர் நேருவின் காலைத் தொட்டு வாழ்த்தி வணங்க முற்பட்ட பொழுது, நேருஜி தனது கால்களை உதறி, அவரைத் தள்ளி விட்டு, சுதந்திர இந்தியாவிற்கு தேவை மனிதர்களின் கால்களில் வீழும் அடிமைச் சமூகமல்ல, நிமிர்ந்த நெஞ்சு கொண்ட புதிய சமூகமே தனது கனவு என்று, சொல்லிதுடன் செய்தும் காட்டியவர் ஜவஹர்லால் நேரு.

முதன்முதலாக 1912ஆ
புத்தகங்களிலும் வெளியாகத்
1918ஆம் ஆண்டில் வெளிவ
மௌனப்படமாகும்.

"மனிதக் குரங்கினால் வ
தேவைகளனைத்தையும் தா
விளம்பரக் குறிப்பு இதுதான்
டார்ஸானாக அதிக படங்




# சினிமா சினிமா

☯ வருத்தப் படாத வாலிபர் சங்கத்தைத் தொடர்ந்து "காதல் முன்னேற்ற கழகம்" என்றொரு படம் வரவிருக்கிறது. புதுமுகங்கள் நடிக்கிறார்கள். "இத்தனை உதடுகள் சிரித்த பின்னரும் புன்னகை மிச்சமிருப்பதைப் போல், இத்தனை இதயங்கள் கடந்து வந்த பின்னரும் காதல் அலுக்கவில்லை. நகைச்சுவையுடன் இணைத்து சொல்லப்பட்ட காதல் கதை இது" என்கிறார் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கும் சிவநேசன்.

☯ "தெய்வத்திருமகள்", "தலைவா" ஆகிய படங்களில் நடித்தபோது இயக்குநர் விஜய் - அமலாபால் இடையே காதல் மலர்ந்தது. சமீபத்தில் இருவரும் காதலை உறுதி செய்ததுடன் திருமணத் தேதியையும் அறிவித்தனர். இதனால், பெரும் பட்ஜெட்டில் உருவாகவிருந்த "வாஸ்தா நீ வேணுகா" என்ற தெலுங்கு படத்திலிருந்தும் சமுத்திரக்கனி இயக்கத்தில் உருவாகவிருந்த தமிழ்ப் படத்திலிருந்தும் அமலா பால் நீக்கப்பட்டுள்ளார். அவர் வாங்கிய முன்தொகையைத் திருப்பி தரவும் கேட்கப்பட்டுள்ளது.

☯ விண் எரிகல் விழுந்து 8 நாள்களில் உலகம் அழியப் போகிறது என்று பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்த ஒரு கிராமத்து மக்கள், வாழப்போகும் 8 நாள்களில் எல்லாவற்றையும் அனுபவித்துவிட எண்ணி, இருப்பதையெல்லாம் செலவழித்து மகிழ்கிறார்கள். ஆனால் எதிர்பார்த்ததுபோல் உலகம் அழியவில்லை. அதன் பின் என்ன நடந்தது? என்பதுதான் "அப்புச்சி கிராமம்" படத்தின் கதை. திரைக்கதை எழுதி இயக்குபவர் புதுமுகம் ஆனந்த்.

☯ உத்தம வில்லன் படத்தில், 8 மற்றும் 21 என, இரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்த வேடங்களில் நடித்து வரும் கமல், அவரின் குருநாதரான, கே.பாலச்சந்தர் இயக்கத்தில், வீர விளையாட்டு என்ற படத்திலும் நடித்து வருகிறார். இப்படத்தில், ஒரு சிறிய ரோலில், ரஜினி முகம் காட்டி செல்வது போல் காட்சியமைத்திருப்பதால், அப்படம் திரைக்கு வரும் போது, கமல், ரஜினி தோன்றும் காட்சிகளை வைத்து, விளம்பரம் செய்யவும் திட்டமிட்டுள்ளனர்.


☯ படத்துக்கு இரண்டு கோடி கேட்கும் நயன்தாரா, தான் ஏற்கனவே கொடுத்த கால்ஷீட்டை வீணடித்து விட்டு, மீண்டும் கால்ஷீட் கேட்டால், கூடுதலாக ஐம்பது லட்சம் கேட்கிறார். சிம்பு தயாரித்து, நடிக்கும் படத்தில், இதே பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால், நயன்தாராவுக்கும், அவருக்குமிடையே மீண்டும், மனக்கசப்பு ஏற்பட்டுள்ளது.


☯ "ராஞ்சனா" படம் மூலம் பொலிவுட்டில் அறிமுகமான தனுஷ், தற்போது அமிதாப்பச்சனுடன் புதிய படத்தில் நடித்து வருகிறார். ஜோடியாக கமலின் 2 ஆவது மகள் அக்ஷரா ஹாசன். இதற்கிடையில் வெற்றிமாறனுடன் தனுஷ் இணையும் 3ஆவது படத்திற்கு ஹீரோயின் தேடுகிறார்கள். ஹிந்தியில் தனுஷுக்கான மார்க்கெட் உயர்ந்திருப்பதால், இப்போது ரஜினியின் ஜோடியாக நடித்துவரும் சோனாக்ஷி சின்ஹாவுக்கு முதல் இடம் தரப்பட்டுள்ளது.

☯ "என்ன பிடிச்சிருக்கா" படத்தில் நடிகை அனுராதாவின் மகன் கெவின் கதாநாயகனாக அறிமுகமாகிறார். மணிவண்ணன், விக்ரமன் உள்ளிட்டோரிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய சுப்புராஜ் இயக்குகிறார்.

☯ சிவகார்த்திகேயனைத் தொடர்ந்து, விஜய் டி.வி.யின் மற்றொரு தொகுப்பாளரான மா.கா.பா.ஆனந்த், பெரிய திரைக்கு வருகிறார். இயக்குநர் இராஜமோகன் "குங்குமப்பூவும் கொஞ்சும் புறாவும்" படத்தின் மூலம் அதிர்வுகளை ஏற்படுத்தியவர். நீண்ட இடைவெளிக்குப் பின் "வானவராயன வல்லவராயன்" படத்தின் மூலம் அண்ணன் தம்பி உறவை சொல்ல வருகிறார். அண்ணனாக கிருஷ்ணா நடிக்கிறார். "ஆண் பாவம் "சின்னத்தம்பி பெரியதம்பி" போன்ற அண்ணன் தம்பி படங்களுக்கான ரசிகர்கள் இப்போதும் இருக்கிறார்கள். அண்ணன், தம்பி இருவரையும் அதட்டி, பயமுறுத்த ஒரு பாட்டி வேண்டும். எல்லோருக்கும் பரிச்சயப்பட்ட முகமாக இருக்க வேண்டும் என்றுதா யோசித்தோம். சௌகார் ஜானகி அம்மா ஏற்றுக் கொள்வாரா என்ற சந்தேகத்துடன் தான் கேட்டுப் பார்த்தேன். "கதை சொல் பார்ப்போம்" என்றார். கதை பிடித்ததும் "நான் நடிக்கிறனே" என்றார்.
















☯ கோச்சடையானில் நடித்துள்ள தீபிகா, வடகறியில் நடனமாடியுள்ள சன்னி லியோன் ஆகிய இருவரும், மீண்டும் தமிழுக்கு வருகின்றனர். கௌதம் மேனன் அஜித்தை இயக்கும் படத்தில் நடிப்பதற்கு சமந்தாவும் தொடர்ந்து அனுஷ்காவும் கால்ஷீட் இல்லையென் கைவிரித்துவிட்ட பிறகு, அந்தத் திரில்லர் படத்தின் வசனகர்த்தாவான ஸ்ரீதர் ராகவன், "தீபிகா படுகோனேயை ஹீரோயினாக்கி, ஹிந்தியிலும் படத்தை ரிலீஸ் செய்யுங்கள்..." என்று ஐடியா கொடுத்தாராம்.

# ஒரு வரிக் கதை

- வ.மி.கோபு -



"ஒட்டகம் பாலைவனத்து கப்பல்" என்று பள்ளிப் புத்தகத்தில் படித்த ஞாபகம் இருக்கலாம்.

கணித இயற்பியல் விஞ்ஞானி ஃப்ரீமன் டைசன் எழுதிய "Infinite in All Directions" ("எத்திக்கும் ஈறில்லை") என்ற நூலை 2005இல் வாசித்தேன். ஒவ்வொரு அத்தியாயமும் அறிவியலையோ வரலாற்றையோ சமூகத்தையோ ஒரு அறிவியல் நோக்கத்தோடு, எளிய நடையில் அலசியதும், புதிய கருத்துக்களை அள்ளி வீசியதும், என் எண்ணத்தை இன்புருக்கியது.

ரோம நாகரிகத்தின் கல் சாலைகளை மாபெரும் சாதனையாகவும் ரோமப் பேரரசின் செல்வத்திற்கு முக்கிய காரணமாகவும் வரலாற்று அறிஞரும் பொருளியல் அறிஞரும் கருதுவர். அலெக்ஸாண்டர் காலத்தில் கிரேக்க ஆட்சிக்குட்பட்ட மேற்காசியா - சிரியா, ஈராக், ஈரான் - ஜூலியஸ் சீசர் காலத்தில் ரோமாபுரியின் ஆட்சிக்குட்பட்டது. ரோமானிய மன்னர்கள் இந்த அரபு நாடுகளிலும் தங்கள் கல்சாலைகளை செய்தனர்.

அற்புத சாலைகள் - மாட்டு வண்டிகளும் குதிரை வண்டிகளும் ரதங்களும் வேகமாகவும், பாரமேந்தியும் சென்று, வணிகம் பெருக வழி வகுத்த சாலைகள். ஆனால் ஏதோ ஒரு காலத்தில் சாலைகள் பழுதாகி, சீராகாமல், மாட்டு வண்டிகளும் குதிரை வண்டிகளும் அரபு நாடுகளில் காணாமல் போயின.

இது தொழில்நுட்ப பின்னேற்றம். வரலாற்றில் பொதுவாக முன்னேற்றங்களைத் தான் பார்க்க முடியும் நோய்களாலும், போர்களாலும் அவ்வப் பொழுது பின்னேற்றம் அடையலாம்.

வணிகம், செல்வம், மதம், மொழி, விஞ்ஞானம், கல்வி, அமைதி, கலை, மனித வளம், இவை எல்லாம் பின்னேறினாலும், பொதுவாக சமூகங்கள் தொழில் நுட்பத்தில் பின்செல்வதில்லை. ஐந்தாம் நூற்றாண்டில் ரோம ராஜ்ஜியம் வீழ்ந்தபின் ஐரோப்பா 700 ஆண்டுகள் இருளில் சூழ்ந்தது என்பர் வரலாற்றுரைஞர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பியர் ஆட்சியால் ரயிலும், இருபதாம் நூற்றாண்டில் கார்களும் பேருந்துகளும் லொறிகளும் வரும் வரை, அரபு நாடுகளிலும் ஈரானிலும் சக்கரம் போட்ட வண்டிகளே இல்லையாம். டூனிஸ் முதல் ஆஃப்கானிஸ்தான் வரையும், மங்கோலிய ஆட்சியில் சீனதேசம் முதல் பல்கேரியா வரையும், சாலைகளில் வண்டிப்போக்குவரத்தும் இருந்ததென்றும், இந்தியாவில் மாட்டு வண்டிகள் எக்காலத்திலும் இருந்தன என்பதும், மன்னன் ஷெர்ஷாசூரி பாகிஸ்தான் பெஷாவர் முதல் வங்கதேசத்து டாக்கா வரை நெடுஞ்சாலை அமைத்தான் என்பதையும் நினைவில் கொள்ளவும்.

அரபு நாடுகளில் சாலைகள் ஒழிந்து ஒட்டகம் மேலோங்கியது எப்படி?

The Camel and the Wheel "ஒட்டகமும் சக்கரமும்" என்று Richard Bulliet ரிச்சர்ட் புல்லியே ஒரு நூல் எழுதியுள்ளார். இதை ஃப்ரீமன் டைசன் சுருக்கி சொல்கிறார்.

சிரியா நாட்டில் பல்மைரா நகரம், இன்றைய சிங்கப்பூர் போல் வர்த்தக மையமாய் திகழ்ந்து, வரலாற்று முக்கியம் பெற்றது. ஐந்தாம் நூற்றாண்டில் பல்மைராவில் ஒரு வரிப்பட்டியலை புல்லியே சோதித்தார் மாட்டுவண்டியின் சரக்கு சுமை நான்கு ஒட்டகச் சுமைக்கு சமமாக இருந்தது. ஒட்டகம் சுமார் 300 கிலோ சுமையும் மாட்டு வண்டி 600 கிலோ சுமையும் தாங்குமாம். அதாவது, ஒரு மாட்டு வண்டி, இரண்டு ஒட்டகச் சுமையே தாங்கும். அப்படியிருக்க, மாட்டு வண்டிக்கு எதற்காக நான்கு மடங்கு வரி? ஏன் இந்த பாரபட்சம்?

ஒருகால், ஒட்டக வர்த்தகருக்கும் வரி அதிகாரிகளுக்கும் ஏதோ தொடர்புண்டோ என்று கேட்கிறார் டைசன். ஒட்டகங்களுக்கு சாலைகள் முக்கியமில்லை, எவ்வித பாதையிலும் செல்லும். ஆனால் மாட்டு வண்டிகளுக்கு தரமான சாலைகள் வேண்டும். வரிகளின் பாரபட்சத்தினால், காலப்போக்கில் ஒட்டக போக்குவரத்து மேலோங்கியது மாட்டுவண்டி போக்குவரத்து சரிந்தது. வரி குறைந்ததால் சாலைகளை பராமரிக்கும் தேவையான பணமும், அதனால் பணியும் குறைந்தது. சாலைகள் சீர்கெட்டன. மாட்டுவண்டி மட்டுமல்ல, சக்கரவண்டிகள் யாவும் சரிந்தன. ஆயிரம் ஆண்டு ஒட்டகங்கள் கோலோச்சின.

"சக்கரவண்டி" என்ற சொல்லே அரபு மொழியின் புழக்கத்திலிருந்து மறைந்தது.

வணிகமும், தொழில்நுட்பமும், சாலைகளும், கப்பல்களும், வரிகளும் வரலாற்றை ஆட்டிப் படைக்கும் மாபெரும் சக்திகள். காதலும் வீரமும் சூழ்ச்சியும் யுத்தமும் ஆட்சியும் வீழ்ச்சியும் ததும்பி வழியும் வரலாற்று கதைகளில், வணிகமும் வரியும் புலவருக்கு புளிக்கும். ரசிகருக்கு கசக்கும்.

# டார்ஸான்!



ஆண்டில்தான் "டார்ஸான்" கதை அனைத்து தொடங்கியது. முதல் "டார்ஸான்" திரைப்படம் து ஸ்கொட் சிட்னி என்பவர் இயக்கிய இந்தப்படம்

க்கப்பட்டவன். காட்டுவிதிகள் அனைத்தும் தெரிந்த அவன், தேடிக் கொண்டவன்" டார்ஸான் பற்றிய ஒரிஜினல்

ரில் நடித்தவர் ஜொனி வைஸ்முல்லர். ஒலிம்பிக் நீச்சல் வீரரான இவர் 1932ஆம் ஆண்டிலிருந்து 1948 ஆம் ஆண்டுவரை 12 படங்களில் டார்ஸானாக நடித்தார்.

டார்ஸான் படங்களிலும் சில தவறுகள் இருந்தன. அதில் ஒன்று, ஆபிரிக்கக் காடுகளில் மனிதக் குரங்குகள் இருப்பதாகக் காட்டி ரசிகர்களை ஏமாற்றியது. போடெரக், அன்ட்டி மெக்டோரல் நடித்த டார்ஸான்(1984) படத்தில் டார்ஸானுக்கு காதலி இருப்பதாகக் காட்டியது.

Tarzan and the Leopard woman (1946) Tarzan She Devil (1953) போன்ற தலைப்புகளில் வித்தியாசமாகப் படங்களை எடுத்தது போன்றவை அபத்தமாகக் கருதப்பட்டன. தொடர்ந்து டார்ஸான் படங்களைத் தயாரித்து வந்த ஹொலிவுட் தயாரிப்பாளர் ஜோன் கெய்லர்மன் இந்திய நடிகர்கள் பெரோஸ்கான், முராத் போன்றவர்கள் நடிக்க Tarzan goes to India (1962) என்ற தலைப்பில் படமொன்றைத் தயாரித்துள்ளார்.

# முகவரி தொலைத்த முகங்கள் 6

- சாத்திரி -

அன்றிரவு கப்பலின் மேல்தளத்தில் றோகன் கையில் விஸ்கி போத்தலை வைத்தபடி சிகரற்றை புகைத்தபடியிருந்தான். மாலுமி அறைக்குள் சென்ற ராஜன் வரதனிடம் மெதுவாக அண்ணை.. றோகன் கனக்க குடிச்சிருக்கிறான் சொன்னாலும் கேக்கிறான் இல்லை நீங்கள் கொஞ்சம் போய் சொல்லிப் பாருங்கோ.. என்றான்.

றோகனின் அருகில் வந்த வரதன் கையிலிருந்த பிளாஸ்ரிக் கிண்ணத்தை நீட்டினார். போதையில் சுருங்கியிருந்த றோகனின் கண்கள் ஆச்சரியமாக விரித்தபடி என்ன?.. விஸ்கி வேணுமா என்றதும், தலையை மெதுவாக மேலும் கீழுமாக ஆட்டிய வரதன் றோகன் கிண்ணத்தில் ஊற்றிய விஸ்கியை தண்ணீர் கலக்காமலேயே ஒரு மடக்கில் குடித்தார். நானும் தண்ணியடிக்கிறனான்தான் ஆனால் எங்கடை வேலையளை முடிச்சிட்டு ஓய்வா இருக்கிற நேரத்திலை மட்டும். இந்த தண்ணியடிக்கிறது மட்டுமில்லை உணர்ச்சிவசப்படுறது. பாட்டுப் படித்து கும்மாளம் அடிக்கிறது, அழுகிறது எல்லாமே எனக்கு தந்த வேலையை முடிச்சிட்டுத்தான். இதுகளிலை கவனத்தை சிதற விட்டால் எங்கடை வேலை செய்ய முடியாமல் போயிடும். இப்ப கப்பல்ல இருக்கிற பொருள்களையெல்லாம் பத்திரமா கொண்டு போய் சேர்க்கவேண்டியதுதான் எங்கடை முதல் வேலை பிறகுதான் மிச்சமெல்லாம்.. நல்லா பழகிட்டு இப்பிடி இழப்பு வரேக்கை கஸ்ரமாயிருக்கும். அதாலைதான் நான் உங்களோடையே அதிகமா கதைக்கிறேல்லை. இதெல்லாம் உனக்கும் போகப் போக பழகிடும் போய்ப் படு என்று றோகனின் தோளில் தட்டி விட்டு வரதன் மீண்டும் மாலுமி அறைக்குள் போய்விட்டார்.


எதையோ நினைத்த றோகன் அவசரமாய் கீழ்தளத்திற்கு சென்று படுக்கையறையில் குட்டியின் பயணப்பையை திறந்து ஆராய்ந்தான். அதற்குள் எதுவுமே எழுதப்படாத வெற்று டயறி ஒன்றும் அவனது கடவுச்சீட்டு கப்பலில் வேலை செய்வதற்கான ஆவணங்கள் அடையாள அட்டை என்பனவற்றை எடுத்துப் பார்த்தான். அவற்றில் எழுதப் பட்டிருந்த பெயர் விலாசங்கள் எல்லாமே போலியானதாகத்தானிருக்கும் என்பது றோகனிற்கு தெரியும். அவனது பேர்சை திறந்து பார்த்தான். ராசாத்தியின் சிரித்த கறுப்பு வெள்ளை புகைப் படமும் மடித்து வைக்கப் பட்டிருந்த குட்டி எழுதிய கவிதையும் இருந்தது.

அவற்றை எடுத்துக்கொண்டு மீண்டும் கப்பலின் மேற்தளத்திற்கு வந்தவன் போத்தலில் கொஞ்சமாய் மீதமிருந்த விஸ்கியையும் குடித்து முடித்துவிட்டு அந்தப் போத்தலிற்குள் குட்டி எழுதிய கவிதைக் கடதாசியில் ராசாத்தியின் புகைப் படத்தையும் சுருட்டி போத்தலிற்குள் போட்டவன், அதனை நன்றாக இறுக்கி மூடிவிட்டு கடலிற்குள் வீசியெறிந்தான்.. குட்டியின் கவிதை வரிகளைப் போலவே அந்தக் கவிதையும் ராசாத்தியின் கைகளிற்கு போய் சேராது என்பதும் றோகனிற்கு தெரியும். முழங்கால்களை மடித்து தலையைத் தொங்கப் போட்டபடி அங்கேயே அமர்ந்திருந்தான். வரதன் கப்பலை முல்லைத் தீவுக் கடலை நோக்கி செலுத்திக்கொண்டிருந்தார்.


*** *** *** *** ***

தொலைபேசி மணியடித்துக் கொண்டிருந்தது. வரதன் அதனை எடுப்பதற்கு முயற்சித்தார் முடியவில்லை. புலி வழமைக்கு மாறாக அவரைப் பார்த்து குரைத்துக் கொண்டேயிருந்தது. இப்பொழுது வரதனிற்கு நெஞ்சு வலி இல்லை.

அவர் பஞ்சைப்போன்று அந்தரத்தில் மிதப்பதைப் போன்றதொரு உணர்வு ஒரு றொக்கெற்றின் வேகத்தை விட அதிகமாய் காற்றைக் கிழித்துக் கொண்டு வானத்தில் பறந்தார்.. இன்னொரு சூரியகுடும்பம் முன்னாலும் நட்சத்திரக் கூட்டங்கள் அவர் பின்னாலும் தெரிந்தது. அதேயளவு வேகத்தில் மீண்டும் கீழே இறங்கினார். அந்தப் படத்தில் இருந்த அதே தீவின் கடற்கரையோரத்தில் பெரிய பாறை ஒன்றின் முன்னால் அவரது மனைவியும் றோகன், சித்தா, குட்டியுடன் வேறு நண்பர்களும் அவரைப்பார்த்து கையசைத்தனர். கடற்கரையோரத்தில் தடிகள் நடப்பட்டு கலர் கலராக பலூன்கள் பறக்கவிடப்பட்டு அங்கு ஒரு மேசைமேல் வர்ணக்கலரில் ஒரு கேக்கும் வைக்கப்பட்டிருந்தது. அந்தரத்தில் பறந்துகொண்டிருந்த வரதன் அவர்களருகே சென்று தரையிறங்கினார். மனைவி அவரை அழைத்து கேக்கை வெட்டவைத்து ஒரு துண்டினை அவரிற்கு ஊட்டிவிடும்போது சுற்றி நின்று அனைவரும் கைதட்ட றோகன் தனது கித்தாரை வாசித்தபடி "பிறந்தநாள் இன்று பிறந்தநாள் நாம் பிள்ளைகள் போலே தொல்லைகள் எல்லாம் மறந்தநாள்" என்று படிக்கொண்டிருந்தான். ஆனால் வரதனின் காதுகளில் புலி குரைக்கும் சத்தம் ஒலித்துக் கொண்டேயிருந்தது.







தியாகி அறக்கொடை நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் ஊடாக அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அறக்கொடையின் ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரனின் நிதிப்பங்களிப்புடன் சுமார் 150 இற்கும் மேற்பட்ட வறிய மாணவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவுக்கானநிகழ்வு நடைபெற்றது இதில் பிரதம விருந்தினராக தொழிலமைச்சர் காமின லொக்குகே கலந்து சிறப்பித்தார்.

# ஆலயங்களில் மிருகபலி சமயநெறிக்கு முரணானது

## சைவ மகாசபை கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்டத்தரிப்பு, பிரான்பற்று ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற உயிர்ப்பலியிடுதல் சம்பவம் தமது சமய நெறிக்கு முரணான, வருந்தத்தக்க செயலாகும் என சைவ மகாசபை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயங்கள் சிலவற்றில் இடம்பெறும் வேள்வி தொடர்பில் சைவ மகாசபையால் "உயிர் பலியை நிறுத்துவோம், ஜீவகாருணயம் காப்போம்" என்னும் தலைப்பில் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "எமது சமயம் அன்பே சிவம்" என்கின்ற உயரிய கோட்பாட்டை உடைய தன்னுயிர் போல மன்னுயிர். ஓம்புகின்ற உன்னத வழிபாட்டு நெறியைக் கொண்டுள்ளது.

எல்லா உயிர்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்திருக்கின்றான் என்கின்ற உயரிய விழுமியத்தின் அடிப்படையில் பிராணிகளையும் தாவரங்களையும் பூஜிக்கின்ற, வழிபாட்டு மரபை பின்பற்றுகின்ற சைவநெறியில் தங்கள் சுயலாபத்திற்காக ஒரு சிலரினால் இடையில் புகுத்தப்பட்ட பலியிடுதலானது, எமது சைவ ஆகம மரபிற்கும் மற்றைய உயிர்களை துன்புறுத்தக் கூடாது என்ற வகையில் நாம் பின்பற்றும் சைவ உணவுப் பழக்கத்திற்கும் முற்றிலும் மாறுபட்ட செயற்பாடாகும்.

உண்மையில் வேள்வி என்பது கந்தபுராணம் கூறுவது போல் "குறைவில்லாது உயிர்கள் வாழ்க", "நற்றவம் வேள்வி மல்க", "மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" எனக் கூறி யாகம் வளர்த்து அவிப்பொருள் சொரிந்து இறைவனை மனம், மொழி, மெய்யினால் வழிபடும் உன்னத முறைமையே அன்றி, குறைவிலாது உயிர்களை வாழ வைக்க வேண்டிய நாங்கள் அவற்றை பலியிடுதல் அன்று.ஆனால், இன்று சிவபூமி எனப்படும் எமது நாட்டில் வலிகாமம் பகுதியில் மட்டும் மிகச் சில ஆலயங்களில் நடைபெற்று வரும் இச்செயல் முழு ஜீவகாருண்யத்தை நேசிக்கின்ற சைவர்களையும் வேதனைக்கு உள்ளாக்கியுள்ளது. மேற்படி ஆலயத்தை தொடர்ந்து கடந்த வருடம் முதல் பலியிடுதலை நிறுத்துகின்றோம் என உறுதியளித்த சில ஆலயங்களும் பலியிடுதலை மேற்கொள்ளத் தயாராகி வருகின்றமையும் அதற்கு சில பிரதேச சபைகள் உறுதுணை புரிய முயற்சிக்கின்றமையும் மேலும் வேதனை தருவதாக உள்ளது.

அதேநேரம், உண்மையான இறைபக்தியை உடைய பலியிடுதலை தவறாக புரிந்து வைத்திருக்கின்ற கிராமிய அன்பர்களிடம் நாம் வேண்டுவதென்னவெனில், இன்னொரு உயிரை எமக்காக எனக் கூறி எல்லா உயிர்களுக்கும் பொதுவான இறைவன் சந்நிதியில் பலியிடுதலை தவிர்த்து உண்மையான கிராமிய வழிபாடான இன்றும் வற்றாப்பளை அம்மன், புளியம்பொக்கணை, புத்தூர் நாகதம்பிரான் போன்ற அருள் நிறைந்த கிராமிய ஆலயங்களில் நடைபெறுவது போல பொங்கல் பொங்கி, மடை பரப்பி, ஆடிப்பாடி இறைவனுக்கு படைத்து நாமும் உண்டு ஏனைய ஜீவராசிகளுக்கும் உணவளிக்கும் முறைமையாக எமது வேள்வியை மாற்றிக் கொள்வோம். அப்போதுதான் இறைவன் எம் வழிபாட்டை அகமகிழ்ந்து ஏற்று, எமக்கும் எமது எதிர்கால சந்ததிக்கும் தன் தெய்வீக அருளை அள்ளி வழங்குவான்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (63,48)

# கொடிகாமம் பருத்தித்துறை வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(கொடிகாமம்)

கொடிகாமம் பருத்தித்துறை வீதியானது பல வருடங்களாக திருத்தப்படாமல் உள்ளது. இவ்வீதியினை பயன்படுத்துவோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக கவலை தெரிவிக்கின்றனர். இவ்வீதியினை வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளை சேர்ந்த அரச அலுவலர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் என தினமும் ஏராளமானவர்கள் பயன்படுத்துகின்றனர்.

வடமராட்சி பகுதியில் உற்பத்தி செய்யப்படும் கடலுணவுகள், விவசாய உற்பத்திப் பொருட்களை தென்பகுதிக்கு கொண்டு செல்வதற்கும் தென்பகுதி உற்பத்தி பொருட்களை வடமராட்சி பகுதிக்கு கொண்டு வருவதற்கும் இவ்வீதியே மிகவும. முக்கியமாக அமைந்துள்ளது.

எனவே பொதுமக்களின் நன்மை கருதி புனரமைப்பு செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

# முரசின் இன்றைய பலன்



(21.05.2014 புதன்கிழமை)

ஐய வருஷம் சித்திரை மாதம் 31 ஆம் திகதி.
மரணயோகம்/ சப்தமி/கரிநாள்.
அவிட்டநட்சத்திரம். மு.இ 9.55 வரை. பின் சதயம்.
இராகு காலம 11.52 வரை. சுபநேரம 01.22 - 05.52 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சொந்தத் தொழில் நட்டத்தைத் தருவதினால் பங்கில் சேர்ந்தியங்க விரும்புதல். பிரிந்து சென்ற உறவினருடன் மீண்டும் இணையும் சந்தர்ப்பம் உண்டாகும். |
| ரிஷபம் | பிறருக்கு துணைபோக/உதவி செய்ய/சிபார்சுக்கு உடன் பட வேண்டாம். 'வீசா' முதலான வழக்குகளில் சாதகமான முடிவு வந்து சேரலாம். |
| மிதுனம் | தடைப்பட்டுவந்த திருமணம் நிறைவேற பச்சைக் கொடி காட்டுதல். பழைய கடனைத் தீர்க்க புதிதாக கடன் பெறும் நிலை ஏற்படல். |
| கடகம் | செய்யாத செயலுக்காக வீண் பழிச்சொல்லுக்கு ஆளாக நேரிடலாம். பிறரை நம்பி பொறுப்பு வைக்காமல் பொருட்கள்/பணத்தைக் கொடுக்க முயல வேண்டாம். |
| சிம்மம் | சுபச்செலவுகளைச் சமாளிக்க கடன்படும் நிலைக்குத் தள்ளப்படல். பெண்மணிகளால் அவமானப்படும் சூழலில் சிக்கித்தவிக்க நேரிடல். |
| கன்னி | அயலவருடன் உறவினை அளவாகப் பேணுதல் நன்மை கிட்டும். தடைப்பட்ட பணிகளை சக ஊழியர்கள் நிறைவேற்றி வைக்க ஒத்துழைப்பு நல்குவர். |
| துலாம் | ஏழரைச்சனியான பழியினால் புதிய முயற்சிகளைக் கைவிடும் எண்ணம் மேலிடல். உறவின ரின் தீர்வரவினால் உபசரிக்க முடியாத திண்டாட்ட நிலை ஏற்படும். |
| விருச்சிகம் | பிறருக்கு உதவி செய்வதை இட்டு எச்சரிக்கையாக இருக்கவும். புதிய நட்பினால் பொருளும் நிம்மதியும் இழக்க நேரிடலாம். |
| தனுசு. | மற்றவர்களின் விடயங்களில் தலையிட்டு சிக்கலில் மாட்டிக் கொள்ளல். தொலைந்த பொருட்கள் பற்றிய தகவல் கிட்டுவதினால் அவற்றைப் பெற முயலுதல். |
| மகரம் | விளையாட்டு மற்றும் கலைத்துறையில் பாராட்டும் பரிசில்களும் கிடைக்கும். பணநெருக்கடிகள் சுமூகமாகத்தீர ஆச்சரியமான வழி பிறக்கும். |
| கும்பம் | கடமைரீதியினை பயணம் எதிர்பாராமல் ஏற்படுவதினால் அதற்குரிய ஆயத்தங்களைச் செய்தல். |
| மீனம் | புதிய பொறுப்பு சுமத்தப்படும் நிலையில் பணியைத் திறம்பட ஆற்றத்துணிதல். உங்களின் பொறுமை/சகிப்புத்தன்மை பிறரின் பாராட்டுதலைத்தக்க வைக்கும். |

# க.பொ.த.உ/த பெறுபேற்றில் சாதனையை முறியடித்தது யாழ்.இந்துக்கல்லூரி



மீள் திருத்தப்பட்ட க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 19 பேர் 3A சித்திகளை பெற்றுள்ளனர். இதில் யாழ். மாவட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி முதல் இடத்தை பெற்றுள்ளது. அண்மையில் பரீட்சை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வேம்படி மகளிர் கல்லூரியும் யாழ்.இந்துக் கல்லூரியும் 18 மாணவர்கள் 3A சித்திகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் சமநிலையில் இருந்தன. இந்த நிலையில் அரசியல் விஞ்ஞான பாடத்தில் B நிலை சித்திபெற்ற இந்துக் கல்லூரி மாணவன் ஸ்ரீ. சிவஸ்கந்தஸ்ரீ மீள் திருத் தம் மூலம் A நிலை சித்தியை பெற்று 3A சித்தியடைந்துள்ளார்.

இதன் மூலம் மாவட்ட மட்டத்தில் சமநிலையில் இருந்த சாதனையை இந்துக்கல்லூரி தகர்த்துள்ளதுடன் குறித்த மாணவன் மாவட்ட மட்டத்தில் 32 ஆவது இடத்தில் இருந்து முன்னேறி 22 ஆவது நிலையை பெற்றுள்ளான். மேலும் இம்மாணவன் இந்துக்கல்லூரியின் விவாத அணியின் தலைவராக இருந்து அகில இலங்கை தமிழ்த் தினப்போட்டியில் தேசிய மட்டத்தில் தங்கப்பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (63)

# பொங்கல் விழா

கைதடி மேற்கு அண்ணமார் ஆலயத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி பொங்கல் விழா நடைபெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை அலங்கார உற்சவம் எதிர் வரும் யூன் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகி 12 தினங்கள் நடைபெறவுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (51)

# சமுர்த்தி பயனாளிகளால் 76 இலட்சம் ரூபா சேமிப்பு

## கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உதவிஆணையாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்,சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சமுர்த்தி பயனாளிகளிடையே இடம் பெற்ற புத்தாண்டு சேமிப்பு வாரத்தில் 76 இலட்சம் ரூபா சேமிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் எம்.எம். இர்பான் தெரிவித்துள்ளார்.

கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய 4 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நடாத்தப்பட்ட சேமிப்பு நிகழ்வுகளிலேயே இவ்வாறு சேமிக்கப்பட்டு அவை சமுர்த்தி வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது இந்த சேமிப்பு முதல் மூலமாக சமுர்த்தி பயனாளிகளுக்கு மிகவும் குறைந்த வட்டி வீதங்களான 8 வீதம், 10 வீதம் என்ற வகையில் சுய தொழில் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் சமுர்த்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதும் பொது மக்கள் ஆர்வத்துடன் சேமிப்பில ஈடுபட்டு வருவதனைக் காண முடிகின்றது.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் சமுர்த்தி வங்கிகளும் கட்டி முடிக்கப்பட்டு படிப்படியாக திறந்து வைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சமுர்த்தி திட்டத்தின் பயன்களை முழுமையாக மக்களுக்கு கிடைக்கும வண்ணம் 95 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

பிரதேச செயலகங்களிலும் சமுர்த்தி பிரிவு போதுமான ஆளணிகளுடன் இயங்கி வருகின்றது.

வங்கிகள் மிகவும் குறைந்த கிராமப்புற மக்கள் தமது சேமிப்பு கணக்குகளை சமுர்த்தி வங்கிகளூடாக மேற்கொண்டு வருகின்றனர்.

(90)

# கொடிகாமம் பஸ்தரிப்பிடம் திருத்தப்படுமா? மக்கள் கேள்வி

கொடிகாமம் சந்தி ஏ 9 வீதியில் பயணிகள் பஸ் தரிப்பிடமானது உரிய வசதிகள் இல்லாது காணப்படுவதாக பஸ்தரிப்பிடத்தினை பயன்படுத்தும் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த பஸ் தரிப்பிடத்தினை வடமராட்சி, தென்மராட்சி முதலான பகுதிகளைச் சேர்ந்த அரச அலுவலர்கள், பொதுமக்கள் என தினமும் ஏராள மானவர்கள் பயன்படுத்துவதோடு மழை, வெயில் என பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பயணிகள் இருந்து செல்லக்கூடிய இருக்கை வசதிகளையோ, வெயில் நேரங்களில் நிழல் குடையோ உரிய வகையில் இல்லையெனவும் விசனம் தெரிவிக்கின்றனர். அப்பகுதி பொது அமைப்புக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் பல முறை கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் கவலையடைந்துள்ளனர்.

வெளிமாவட்டங்களிற்கு செல்லும் அரச அலுவலர்கள், முதியோர்கள், சிறுவர்கள் முதலானவர்களின் நன்மை கருதி கொடிகாமம் நகர பஸ்தரிப்பிடத்தை திருத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

# கைதடி- மானிப்பாய் வீதியில் விபத்தை தடுக்க வேகத்தடுப்பு அணைபோடக் கோரிக்கை

(கைதடி)

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தினால் கைதடி மானிப்பாய் வீதியில் கைதடி சரஸ்வதி சனசமூக நிலையம் அருகாமையில் அடிக்கடி விபத்து நேரிடுவதால் வேகத் தடுப்பு அணை போடப்பட வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.


நிலையத்தின் தலைவர் ப.செல்லத்துரை இக் கோரிக்கையை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட பொறியியலாளருக்கு முன்வைத்துள்ளதுடன் அதன் பிரதியை யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இப் பகுதியில் அண்மைய 3 மாதங்களில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் பலர் படுகாயம் அடைந்தும் உள்ளனர்.

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையம் அருகாமையில் வீதி திடீரென திருப்பத்தை கொண்டிருப்பதால் வேகத் தடுப்பு அணை போடப்படுவதுடன் விபத்து ஆபத்து குறித்த அறிவிப்பும் செய்யப்பட வேண்டுமென அக் கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது.

கைதடி மானிப்பாய் வீதி காப்பெற் இடப்பட்ட பின்னர் இப் பிரதேசத்தில் அடிக்கடி விபத்துக்கள நேரிடுவதால் இப் பிரதேச மக்கள் மிகவும் அச்சமடைந்து உள்ளனர்.

கைதடி கலைவாணி வித்தியாலயம் எனும் ஆரம்ப பாடசாலையும் இப் பகுதியில் இருப்பதால் தமது பிள்ளைகளின் பாதுகாப்பு குறித்தும் பெற்றோர் மிகுந்த கவலை அடைந்துள்ளனர்(90)



அச்சுவேலி மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான கட்டடத்தொகுதி (85)

# ஆயுர் வேதம்



## இரத்தம் அழுத்தம் சீராக..!

பொதுவாகவே அதிக இரத்த அழுத்தத்திற்குக் காரணமாக அலுவல் அல்லது தொழில் செய்யும் இடங்களில் ஏற்படும் மனஉளைச்சல், காரசாரமான விவாதம், அதிக அளவில் தேநீர் பருகுதல், சிறுசிறு விஷயங்களுக்குக் கூட பொறுமையுடன் செயற்படாத தன்மை, முன்கோப குணம், அதிக பதற்றம் ஆகியன காரணமாகின்றன.

இதயத்திலிருந்து செயற்படும் வியான வாயுவின் அழுத்தமானது மனதின் சஞ்சலத்திற்கு ஏற்றவாறு ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கும். அதிகமான கவலை, கோபம், வெறுப்பு போன்ற மனநிலைகளில் வியான வாயுவின் சீற்றம் இதயப் பகுதியில் துரிதப்படுத்தப்பட்டு அதனுடைய சஞ்சார விசேஷமானது இரத்தக் குழாய்களின் வழியாக இயங்கும்போது இரத்தக்குழாய்ச் சுவர்களில் அதனுடைய அழுத்தத்தை அதிகரித்துவிடும். அதுவே இரத்தக்கொதிப்பிற்கு ஒரு முக்கிய காரணமாக அமையலாம்.

வியான வாயுவைக் கட்டுப்படுத்தும் தான்வந்தரம், மஹாதான்வந்தரம், வாயு குளிகை போன்றவற்றின் உள் உபயோகம் வாதத்தினால் ஏற்படக்கூடிய இரத்தக்கொதிப்பைக் குணப்படுத்தும்.

பித்ததோஷத்தின் குணங்களாகிய வேகமாக ஊடுருவும் தன்மை மற்றும் சூடு ஆகியவற்றின் சீற்றத்தை அதிக காரம், புளி, உப்பு, பட்டை, சோம்பு, மசாலாப் பொருட்கள், மதுபானச் சேர்க்கை, வெற்றிலை, பாக்கு போன்றவற்றின் மூலமாக இரத்தக்குழாய்களில் பரவச் செய்துவிட்டால் அதுவும் இரத்தக்கொதிப்புக்குக் காரணமாகலாம்.

அவிபத்தி சூரணம் எனும் ஆயுர்வேத மருந்தை மருத்துவர் ஆலோசனைப்படி சாப்பிடுவதன் மூலம் பித்தத்தினால் ஏற்படும் இரத்தக் கொதிப்பை கட்டுப்படுத்த முடியும்.

அதிக இனிப்பு, புளிப்பு, உப்பு ஆகியவற்றின் சேர்க்கையைக் கொண்ட உணவுவகைகளை அதிகம் சாப்பிடுபவராக இருந்தால் அதனால் ஏற்படும் கபதோஷத்தின் குணங்களாகிய நெய்ப்பு, குளிர்ச்சி, கனம், மந்தம், வழுவழுப்பு, நிலைப்பு ஆகியவற்றின் சேர்க்கையானது இரத்தக் குழாய்களின் உட்பகுதிகளில் படிவங்களாகத் தங்கும்பொழுது இரத்தத்தினுடைய வேகமானது தடைப்பட்டு, அதனால் உட்புறக் குழாய்களில் அழுத்தம் அதிகரிக்கலாம்.

அதிக வேலைப் பளு இல்லாத ஒரே இடத்தில் அமர்ந்து பல மணி நேரம் வேலை செய்தல், பகல் உறக்கம், சோம்பேறித் தனமானதொரு வாழ்கை முறை உள்ளவர்களுக்கும் இதுபோன்ற படிவங்கள் அதிகமாக இரத்தக்குழாய்களில் சேர்வதற்கு வாய்ப்பிருக்கிறது.

அதனால் உணவில் கசப்பும் துவர்ப்புமாகிய சுவைகளைக் கொண்ட கீரைகள், கறிகாய்கள், பட்டை, சோம்பு, சீரகம், ஓமம், மிளகு ஆகியவற்றின் சேர்க்கை சற்றுத் தூக்கலாக இருந்தால், அவற்றின் சூடான வீரியத்தினால் குழாய்களில் படிந்துள்ள படிமங்கள் கரைந்து இரத்த அழுத்தமானது சாதாரண நிலைக்கு வந்து விடும்.

லோத்ராஸவம், அயஸ்க்ருதி, நிம்பாம்ருதாஸவம் போன்ற மருந்துகள் இதுபோன்ற நிலைகளில் சாப்பிட உகந்தவை.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் உடலில் உள்ள கொழுப்பானது சீரான நிலையில் இல்லாமல் இரத்தத்தில் அதிக அளவில் காணப்படும் வாய்ப்பிருப்பதால் அவற்றிற்கான சிகிச்சை முறையை வரையறுத்துக் கூறுவதென்பது மருத்துவரின் நேரடியான தொடர்பின் மூலமாக மட்டுமே சாத்தியமாகும்.

பொதுவாகவே, ஆயுர்வேத மருந்துகளாகிய சிலாசத்துபர்ப்பம், சிருங்கீபர்ப்பம், லோஹபஸ்மம், த்ரிபலாசூரணம் போன்றவை அதிக கொழுப்பை உடலிலிருந்து நீக்கக் கூடியவை. பாகல் இலை, கோவைககாய், பாகற்காய், பொன்னாங்கண்ணிக் கீரை, வெந்தயக்கீரை, முருங்கைக்கீரை, வாழைத்தண்டு, வாழைப்பூ, எலுமிச்சம்பழம், நெல்லிக்காய் போன்றவற்றை அதிக அளவில் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**மருந்தாகும் பூண்டு**

* பூண்டை சிறிதாக நறுக்கிப் பாலில் போட்டுக் குடித்து வந்தால் இதயக் கோளாறு கட்டுப்படும். வாயுக் கோளாறு நீங்கும். நீரிழிவினால் உருவாகும் கால் வீக்கம் குறையும். ரத்தக் கொதிப்பும் கட்டுப்படும்.

* பூண்டை தேங்காய்ப்பாலில் வேகவைத்து நன்கு மசிய அரைத்து சுளுக்கினால் ஏற்பட்ட வீக்கத்தின் மேல் தடவினால் வீக்கம் குறையும்.

* ஒரு தேக்கரண்டி அரைத்த பூண்டுடன் தேங்காய் எண்ணெய் கலந்து உட்கெண்டால் வாதநோய் கட்டுப்படும்.

* பூண்டுச் சாறுடன் எலுமிச்சை பழச்சாற்றை கலந்து தடவினால் சரும நோய்க்ள் கட்டுப்படும்.

* பூண்டை சிறிதளவு நீர் கலந்து நசுக்கி சாறெடுத்து அத்துடன் தேவையான அளவு சீனியுடன் சேர்த்து உட்கொண்டால் இருமல் கட்டுப்படும்.

* பூண்டை நெருப்பில் சுட்டு அதை இளம் சூட்டில் மைபோல் அரைத்துத் தொண்டைக்கு வெளிப்புறம் தடவினால் தொண்டை வீக்கம் குறையும்.

# அநுராதபுரத்தில் உருவாகிறது பாரிய கலையரங்கம்

(கொழும்பு)

கொழும்பு தாமரைத் தடாகத்துக்கு அடுத்த படியாக, சகல வசதிகளுடன் கூடிய பாரிய கலையரங்கம் ஒன்று அநுராதபுரத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதன் நிர்மாண வேலைகள் அடுத்த யூன் மாதம் ஆரம்பிக்கப்படும். கலாசார அலுவல்கள் அமைச்சர் டி.பீ ஏக்க நாயக்க இந்த கலையரங்கம் அமைக்கப்பட உத்தேசித்துள்ள இடத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

கருத்திட்ட அமைச்சர் எஸ்.எம். சந்திரசோம ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கைக்கிணங்க அநுராதபுரம். சிறைச்சாலை வளவில் இதற்காக 3 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பாரிய கலையரங்க நிர்மாண வேலைகளுக்கு கடந்த வரவு செலவு திட்டத்திலிருந்து 1500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கலாசார அலுவல்கள் அமைச்சர் டி.பீ ஏக்கநாயக்கவுடன் வட மத்திய மாகாண ஆளுநர் கருணாரத்ன திவுல்கனே வட மத்திய மாகாண முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் சமரகோன் ஆகியோரும் இந்தக் கலையரங்கம் அமைக்கப்படவுள்ள இடத்தை நேரில் சென்று பார்வையிட்டனர்.

# இரசாயனம் பயன்படுத்தாத மரக்கறிகளை இராணுவத்தினருக்கு வழங்க நடவடிக்கை



நச்சு மீற்றும் இரசாயன பதார்த்தங்கள் பயன்படுத்தாத மரக்கறி வகைகளை முகாம்களுக்குள் உற்பத்தி செய்து அவற்றை நாடு முழுவதிலும் உள்ள இராணுவத்தினருக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

தொற்றா நோய்களை தவிர்க்கும் வகையில் இராணுவத்தின் மருத்துவ பிரிவினால் தயாரிக்கப்பட்ட "ஆரோக்கியமான இராணுவம் ஆரோக்கியமான தேசம்" என்ற தொனிப் பொருளிலாளான விசேட விழிப்புணர்வு வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது. நாரஹேன்பிட்டியில் அண்மையில் புதிதாக திறந்து வைக்கப்பட்ட இராணுவ வைத்தியசாலை புதிய கட்டடத் தொகுதியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மகிபால உட்பட முக்கியஸ்தர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர்.

இராணுவத் தளபதி அங்கு மேலும் உரையாற்றுகையில்: இராணுவ வீரர்கள் மத்தியில் திடீர் மரணம் மற்றும் தொற்றா நோய்களின் வீதம் அண்மைக்காலமாக அதிகரித்து காணப்படுகிறது யுத்த காலத்தில் நிலைமைகளை கருத்திற்கொண்டு தன்னை தனது உடல் ஆரோக்கியத்தை உரிய முறையில் பராமரிக்க முடியாதிருந்தமை இதற்கு காரணமாக இருந்தது.எனினும் யுத்தம் நிறைவுற்ற பின்னர் ஐந்து வருட காலப் பகுதிக்குள் இதுவரை 1200 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

விபத்துக்களால் உயிரிழந்த 400 பேரும், தொற்றா நோய் காரணமாக உயிரிழந்த 400 பேரும் ஏனைய காரணங்களால் உயிரிழந்தவர்களும் அடங்குவர். எனவே இதனைக் கட்டுப்படுத்தும் பொருட்டே இந்தப் புதிய திடடம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆரோக்கியமான இராணுவம, ஆரோக்கியமான தேசம் என்ற வேலைத்திட்டம் முதற் கட்டமாக யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தலைமையகத்திலிருந்து நாடு முழுவதிலும் உள்ள பாதுகாப்பு படைகளின் கட்டளை தலைமையகங்கள், முகாம்களில் நடைமுறைப்படுத்தப்படும்.இராணுவ வீரர்களின் நலனை கருத்திற்கொண்டே படை வீரர் மாதமான இம்மாதத்தில் இந்த வைத்தியசாலையை நாம் எதிர்பாராது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பாதுகாப்புச் செயலாளரின் வழிகாட்டலில் புதிதாக நிர்மாணித்து தந்தது என்றார்.

# மாணவர்களின் போசாக்கை அதிகரிக்க மூலிகைக் கஞ்சி வழங்கத் திட்டம்



(கொழும்பு)

மாணவர்களிடையே போஷாக்கை வளர்க்கும் பொருட்டு மூலிகைக்கஞ்சி வழங்கும் திட்டமொன்றை கல்விச் சேவைகள் அமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளது.

இது தொடர்பான ஆரம்ப வைபவம் கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்கா தலைமையில் இன்று காலை கல்விச் சேவைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடை பெறும் ஜனாதிபதி செயலக போஷாக்கு இணைப்பாளர் டொக்டர் லலித் சந்திரதாசவும் இதில் பங்கு பற்றுவார்.

இதனடிப்படையில் நாளாந்தம் மாணவர்களுக்கு ஒரு கோப்பை மூலிகைக்கஞ்சி வழங்கப்படும். போஷாக்கு பிரச்சினைகளைக் குறைத்தல், மாணவர் வரவை அதிகரித்தல், சிறந்த உணவுப் பழக்க வழக்கங்களையும், சுகாதாரப் பழக்க வழக்கங்களையும் உருவாக்குதல், உணவுக் கலாசாரத்தைக் கட்டி எழுப்புதல் மூலம் சிறந்த பிரஜையை உருவாக்கும் நோக்கில் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருகிறது.

# முதியவர்களை மகிழ்வாக பராமரிப்பது கோடி புண்ணியத்தை தரும்

## செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் தெரிவிப்பு

முதியவர்களைப் பராமரிக்க வேண்டிய பாரிய பொறுப்பு எமது சமூகத்திடம் காணப்படுகின்றது. வெறுமனே கோவில் வழிபாடு ஆற்றுவது மட்டும் புண்ணியத்தைத் தராது. முதியவர்களை மகிழ்விக்கும் வகையில் அவர்களைப் பராமரித்து கொள்வது கோடி புண்ணியத்தைத் தரும் என செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்துள்ளார்.

வைத்திய கலாநிதி அமரர் செல்வி யமுனா மார்கண்டுவின் ஞாபகார்த்தமாக சூழிபுரம் சிவ பூமி முதியோர் இல்லத்தில் பெற்றோர்களால் அமைக்கப்பட்ட வைத்திய நிபுணர் அமரர் செல்வி மார்க்கண்டு நினைவு மண்டபம் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திறந்து வைக்கப்பட்ட போது அந்நிகழ்விற்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்றைய சூழ்நிலையில் முதியவர்கள் பிரச்சினைகளால் துயரப்படுகின்றார்கள். பிள்ளைகள் இல்லாத பெற்றோர். திருமணமாகாத ஆண்கள் பெண்கள் பிள்ளைகள் எங்கே போனார்கள் என்று தெரியாத பெற்றோர் பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டு தொடர்பற்று இருக்கும் பெற்றோர் எனப் பல முதியவர்கள் பராமரிப்பார் இன்றி தனிமையில் துன்பப்படுகின்றார்கள்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

முதியோர்கள் பராமரிப்பதற்கு இடம் போதாத காரணத்தினால் 16 பரப்புக்காணி கொள்வனவு செய்யப்பட்டது. முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. பலர் எங்களிடம் விண்ணப்பித்தபடி இருக்கின்றார்கள். இந்நிலையில் முதியோர்களுடைய இடப்பற்றாக்குறையினை போக்கும் முகமாக மார்க்கண்டு தம்பதிகள் தங்களுடைய மகளின் நினைவாக புதியதோர் கட்டிடத்தினை அமைத்துத்தந்து தர்மகாரியத்தில் பங்கெடுத்துள்ளார்கள்.

தமிழர்களுக்கு தொண்டாற்ற வேண்டும் என்ற பற்றுறுதியின் வெளிப்பாடாக இது அமைக்கப்பட்டுள்ளது. அமரர் யமுனா எல்லாத்துறைகளிலும் வல்லமை பொருந்தியவர். சமூ கத்திற்க்கு பணியாற்ற வேண்டும் என்ற கருப்பொருளினைக் கொண்டிருந்தவர். அவருடைய சமூகப் பணியினை நிறை வேற் றும் வகையில் நல்ல பணியைச் செய்யக்கூடிய இடமாக சிவ பூமியை தெரிவு செய்து முதியோர்களுடைய இடப்பற்றாக் குறை பிரச்சினைகள் கரங்களை பூர்த்தி செய்யும் வகையில் இப்பணி பெற்றோர் களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


மார்கழி மாதம் 14 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு அவருடைய பிறந்த தினத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்றார்.

# அயல்வீட்டுக் குடும்பச் சண்டையை தடுக்கச் சென்ற பெண் பரிதாப மரணம்

(கொழும்பு)

அயல்வீட்டில் ஏற்பட்ட குடும்பச் சண்டையை விலக்கச் சென்ற பெண்ணொருவர் மண்வெட்டியால் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் மட்டக்களப்பு, வீரங்சேனை கிராமத்தில் இடம்பெற்றதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் 6 பிள்ளைகளின் தாயான (48 வயது) அரியமலர் என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.



இவர் படுகாமயடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புதூர் நாகதம்பிரான் வருடாந்த பொங்கல் விழா

வவுனியா, புதூர் நாகதம்பிரான் கோவிலின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் யூன் மாதம் 23ஆம் திகதி சிறப்பாக நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அன்றையதினம் காலையிலிருந்து விசேட பூஜைகள் நடைபெறவுள்ளதுடன், இரவு பொங்கல் நடைபெறவுள்ளது.

இதேவேளை, கோவில் பற்றுச்சீட்டுக்கள் கோவில் முன்றலில் விற்பனை செய்யப்படும் என்பதால், எவராவது கோவில் பெயரை பயன்படுத்தி பற்றுச்சீட்டுக்களை விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எனவே, இது தொடர்பில் பொதுமக்களை, அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொணடுள்ள கோவில் நிர்வாகம், இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் உடனடியாக கோவில் நிர்வாகத்திற்கு அறிவிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

# புகையிரத தொழில்நுட்ப பயிற்சிக்கு விண்ணப்பம்

இரத்மலானை இலங்கை-ஜேர்மன் புகையிரதத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தில் 2014 ஆம் ஆண்டுக்கான பயிலுநர்களை சேர்த்துக் கொள்வதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

18-25 வயதிற்குட்பட்ட, க.பொ.த (சா.த) பரீட்சையில் திறமைச்சித்தியுடன் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். பயிற்சி நெறியாக டீசல் என்ஜின் இயந்திரநுட்பவியலாளர் (21/2 வருடம்) ஓட்டும் நுட்பவியலாளர் (3 வருடம்) மின்நுட்பவியலாளர் (31/2வருடம்) இயந்திரவியலாளர் பொது (31/2வருடம்) ஆகியவையாகும் எழுத்துப் பரீட்சை மும் மொழியிலும் இடம் பெறும் பரீட்சைக் கட்டணம் 500 ரூபா வாகும். பரீட்சை கொழும்பில் மட்டும் நடைபெறும்.

விண்ணப்பங்கள் 20.06.2014 இற்கு முன்னர் பணிப்பாளர் இலங்கை புகையிரத ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிலையம் கல்தமுல்ல வீதி இரத்மலான எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். கடித உறையில் இடது மேல் மூலையில் இல ஜேப நெறி 2014 எனக் குறிப்பிடல் அவசியம்

(105)

# தங்கம் கடத்த முயன்ற இரு பெண்கள் உட்பட மூவர் கைது

(கொழும்பு)

சுமார் 12 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கம் கடத்திச் செல்ல முயன்ற மூவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் மும்பை நோக்கி செல்ல தயாராகவிருந்த நிலையில் இவர்கள் மூவரும் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் பெண்கள் இருவரும் அடங்குவர் சந்தேகநபர்களிடமிருந்து இரண்டு கிலோ 400 கிராம் நிறையுடைய 24• தங்கக்கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

# க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான அலகு ரீதியான பயிற்சிகள்

இரசாயனவியல்

*சென்றவாரத் தொடர்ச்சி....*

1) காரங்களை அமோனியம் உப்புக்களுடன் வெப்பமேற்றினால் அமோனியா வாயு வெளியேற்றப்படும்.

$NH_4Cl + NaOH \rightarrow NaCl + NH_3 \uparrow + H_2O$

2) காரங்கள் பல உலோகங்களுடனும் அலோகங்களுடனும் தாக்கமுறக்கூடியவை.

உதாரணமாக: சோடியம் ஐதரொட்சைட்டு, நாகம், அலுமினியம், வெள்ளியம், சிலிக்கன், குளோரின், கந்தகம், பொசுபரசு ஆகியவற்றுடன் தாக்கமுறுகிறது.

$2 NaOH + Zn \rightarrow Na_2ZnO_2 + H_2$

$2NaOH + 2 AI + 2H_2O \rightarrow 2NaAIO_2 + 3H_2$

$2NaOH + Sn + 2H_2O \rightarrow Na_2SnO_2 + 3H_2$

சோடியம் தானேற்று

$2NaOH _ Si H_2O \rightarrow Na_2SiO_3 + 2H_2$

$6NaOH + 3CI_2 \rightarrow NaCIO_3 + 5 NaCI + 3H_2O$

சூடான செறிந்தது

காரங்கள் அரிக்குமியல்பு உடையவை. இவை தோலிலும் தசையிலும் உள்ள புரதங்களுடன் தாக்கமுற்று அவற்றைப் பிரிக்கும்.

இவ்வியல்புகள் இலிதியம் ஐதரொட்சைட்டு, சோடியம் ஐதரொட் சைட்டு, பொற்றாசியம் ஐதரொட்சைட்டு என்ற ஒழுங்கில் அதிகரிக்கும்.

II ஆம் தொகுதியுடன் ஒப்பிடும்போது I ஆம் தொகுதி மூலகங்களின் ஐதரொட்சைட்டுகள் காரவியல்பு கூடியவை. II ஆம் தொகுதி மூலகங்களின் ஐதரொட்சைட்டுகளில் காரத் தன்மையும் மேல் இருந்து கீழ்வரும் ஒழுங்கில் அதிகரிக்கும்.

### சுவாலைப் பரிசோதனை

S தொகுப்பு மூலகங்களில் பெரும்பாலானவை சுவாலைப் பரி சோதனையின் போது நிறச் சுவாலைகளைத் தரும்.

சுவாலைப் பரிசோதனை பின்வருமாறு செய்யப்படுகிறது. தரப்பட்ட உலோக உப்பு சிறிதளவு செறிந்த HCl அமிலத்தினால் நனைக்கப் பட்டு, ஒரு பிளாற்றினம் கம்பியில் அல்லது பென்சிற் கூரில் அல்லது கன்னார்த்துண்டில் எடுக்கப்பட்டு பன்சன் சுவாலையொன்றின் ஓரத்தில், பிடித்தால் அது பின்வரும் சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நிறமுள்ளதாக மாறும்.

| உலோகம் | சுவாலையின்நிறம் | உலோகம் | சுவாலையின் நிறம் |
|---|---|---|---|
| 1. இலிதியம் | சிவப்பு | 6. கல்சியம் | செங்கட்டிச் சிவப்பு |
| 2. சோடியம் | பொன் மஞ்சள் | 7. பேரியம் | அப்பிள் பச்சை |
| 3. பொற்றாசியம் | நாவல் | 8. துரந்தியம் | கரும் சிவப்பு |
| 4. உருபீடியம் | கடும் சிவப்பு | 9. றேடியம் | கரும் சிவப்பு |
| 5. சீசியம் | நீலம் | 10. பெரிலியம் | இல்லை |
| | | 11. மக்னீசியம் | இல்லை |

S தொகுப்பு மூலகங்களில் உள்ள இலத்திரன்கள் சுவாலையினால் இலகுவில் கிளர்வூட்டப்படக் கூடியனவாய் இருப்பதால் உயர்ந்த சக்தி மட்டங்களுக்கு உயர்த்தப்படலாம். மீண்டும் இலத்திரன்கள் பழைய நிலைகளுக்குத் திரும்பும்போது சிறிதளவு சக்தி கதிர்க்கப்படுகிறது. இது புலனாகக்கூடிய ஒளி நிறங்களாகத் தெரிகிறது.

S தொகுப்பு மூலகங்களின் உப்புக்களின் கரைதிறன்

### முதலாம் தொகுதி

இலிதியத்தின் உப்புக்கள் அநேகமாக எல்லாம் நீரில் கரையக் கூடியவை. இலிதியம், புளோரைட்டு, இலிதியம், பொசுப்பேற்று, இதிலியம் காபனேற்று ஆகியவை நீரில் கரைவதில்லை.

சோடியம், பொற்றாசியம் உப்புக்கள் அநேகமாக எல்லாம் நீரில் கரைபவையாகும்.

உருபீடியம், சீசியம் ஆகிய மூலகங்களின் உப்புக்களும் அநேகமாக நீரில் கரையக்கூடியவை. ஆனால் பொற்றாசியம் உருபீடியம், சீசியம் ஆகிய மூலகங்களின் பெரிய எதிர் அயன்களைக் கொண்ட உப்புக்களின் கரைதிறன் குறைவானதாகும்.

### இரண்டாம் தொகுதி

இத்தொகுதி மூலகங்களின் உப்புக்களின் கரைதிறன் முதலாம் தொகுதி உப்புக்களின் கரைதிறன்களிலும் குறைந்தவையாகும். அநேகமான தனி ஏற்றமுள்ள எதிர் அயன்களை உடைய சேர்வைகள் கரையும் இயல்புடையவையாக இருக்கும்.

உதாரணம் :- மக்னீசியம் நைத்திரேற்று கல்சியம் குளோரைட்டு ஆனால் இரட்டை எதிர் ஏற்றம் அல்லது மூன்று எதிர் ஏற்றங்களை உடைய எதிர் அயன்களை உடைய உப்புக்கள் இலகுவில் நீரில் கரைவதில்லை.

**உதாரணம் :- காபனேற்றுக்கள்** $CO_3^{2-}$, சல்பேற்றுக்கள் $SO_4^{2-}$ பொசுப் பேற்றுக்கள் $PO_4^{3-}$

S தொகுப்பு மூலகங்களின் கரைதிறன் பற்றி பொதுக் கோட்பாடுகள் சொல்வது கடினம். பின்வரும் தன்மைகளை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

1) உயர் ஏற்றமும், குறைந்த அயனாரையும் கரையாத் தன்மையை ஏற்படுத்துகின்றன.
உதாரணம் : இலிதியம், பெரிலியம், மக்னீசியம் குறிப்பாக (இரட்டை ஏற்றமுள்ள அயன்களுடன் இணைந்தவை)

2) தாழ்ந்த ஏற்றமும், கூடிய அயனாரையும் உடைய மூலகங்களின் உப்புக்கள் கரையாத் தன்மையை அடைகின்றன.

உதாரணம்: பொற்றாசியம் நாலபீனைல்போறேற்று $KB(C_6H_5)_4$

முதலாம் இரண்டாம் தொகுதி மூலகங்களின் காபனேற்றுக்கள்

முதலாம் தொகுதி மூலகங்களின் காபனேற்றுகள் வெண்மையான திண்மங்களாகும். நீரில் நன்றாகக் கரையக்கூடியவை. இவற்றில் இலிதியத்தைத் தவிர்ந்த மற்றைய காபனேற்றுக்களை வெப்பத்தினால் பிரிகையுறச் செய்யமுடியாது. இலிதியம் காபனேற்று மட்டும் வெப்பம் ஏற்றும்போது பிரிந்து இலிதியம் ஒட்சைட்டையும் காபனீர் ஒட்சைட்டையும் தரும்.

$Li_2CO_3 \rightarrow Li_2O + CO_2$

இரண்ாம் தொகுதி மூலகங்களின் காபனேற்றுக்களும் வெண்மையான திண்மங்களாகும். இவை நீரில் கரையாதவை, வெப்பத்தினால் பிரிகையுறக்கூடியவை

உதாரணம்: $MgCO_3 \rightarrow LiO + CO_2$

இரண்டாம் தொகுதி மூலகங்களின் காபனேற்றுக்களும் வெண்மையான திண்மங்களாகும். இவை நீரில் கரையாதவை. வெப்பத்தினால் பிரிகையுறக்கூடியவை.

உதாரணம் : $MgCO_3 \rightarrow MgO + CO_2$

ஆனால் இவை பிரிகையுறக்கூடிய வெப்பநிலை Be தொடக்கம் Ba வரை ஒழுங்காக உயர்ந்து கொண்டு செல்கின்றது. இரு தொகுதிகளிலும் காபனேற்றுக்களின் உறுதிப்பாடு அதிகரிக்கின்றது.

இரு பிரதானமான காபனேற்றுக்கள் சோடியம் காபனேற்றும், கல்சியம் காபனேற்றும் ஆகும். சோடியம் காபனேற்று கண்ணாடி, சவர்க்காரம், கடதாசி ஆகியவற்றிலும் வன்னீரை மென்னீராக மாற்றுவதற்கும் உப யோகிக்கப்படும். கல்சியம் காபனேற்று சீமெந்து தயாரிப்பதிலும் கண் ணாடி தயாரிப்பதிலும் உபயோகப்படுகிறது.

### முதலாம் இரண்டாம் தொகுதி மூலகங்களின் ஐதரசன் காபனேற்றுக்கள்

முதலாம் தொகுதி மூலகங்களின் காபனேற்றுக்களின் கரைசல் களுக்கூடாக அல்லது இரண்டாம் தொகுதி மூலகங்களின் காபனேற்றுக் களின் நீர் தொங்கல்களுக்கூடாக காபனீரொட்சைட்டு மிகையாகச் செலுத்தப்பட்டால் கரைசலில் இருகாபனேற்று அயன்கள் உண்டாகும்.

$NaCO_3 + CO_2 + H_2O = 2NaHCO_3$

$CO_3^{2-} + H_2O + CO_2 = 2HCO^-$

இம்மூலகங்களின் ஐதரொட்சைட்டுக் கரைசல்களூடாக காபனீரொட் சைட்டைச் செலுத்தினால் முதலில் காபனேற்றுக்களும், மேலதிகமாக காபனீரொட்சைட்டைச் செலுத்தினால் ஐதரசன் காபனேற்றுக்களும் உண்டாகும்.

உதாரணம் : $Ca(OH)_2 + CO_2 \rightarrow CaCO_3 \downarrow + H_2O$

சுண்ணாம்பு நீர் பால்நிறம்

$CaCO_3 + CO_2 + H_2O \rightarrow Ca(HCO_3)_2$

நிறமற்ற கரைசல்

ஐதரசன் காபனேற்றுகள் அதிகமாக உலோகங்களின் கரைசல் நிலையில் தான் கிடைக்கும். ஆனால் கார உலோகங்களின் ஐதரசன் காபனேற்றுக்கள் திண்ம நிலையிலும் கிடைக்கக்கூடியவை. ஆனால் இவை கூட இலகுவில் பிரிகையுறும். சிறிதளவு வெப்பமேற்றினால் போதும்.

உதாரணம்: $2KHCO_3 \rightarrow K_2CO_3 + H_2O + CO_2$

$2K{+}HCO_3 \rightarrow (K^+)_2CO_3^{2-} + H_2O + CO_2 \uparrow$

**நீரின் வன்மை:** கல்சியம் காபனேற்று, மக்னீசியம் காபனேற்று, நிலத்தில் அதிகளவில் காணப்படும் இடங்களில் இவை நீருடனும் காபனீரொட்சைட்டுடனும் தாக்கமுறுவதால் இவற்றின் இரு காபனேற்றுக்கள் நீரில் கரைந்து காணப்படும். இது நீரில் வன்மையை ஏற்படுத்துகிறது.

உதாரணம் : $MgCO_3 + CO_2 + H_2O = Mg(HCO_3)_2$

ஆனால் இந்நீரை கொதிக்கவைத்தால் இத்தாக்கம் நேர்மாறாக நடப்பதால் வன்மை நீக்கப்படுகிறது.

$Mg(HCO_3)_2 \rightarrow MgCO_3 \downarrow + H_2O + CO_2$

இத்தகைய வன்மை நிலையில் வன்மை எனப்படும். வன்மையுள்ள நீர் சவர்க்காரத்துடன் இலகுவில் நுரைத்தலை உண்டாக்காது. கொதிக்க வைத்து நீக்கக்கூடிய வன்மை நிலையில் வன்மையாகும். வேறு கல்சியம் மக்னீசியம் ஆகியவற்றின் கரையக்கூடிய உப்புக்கள் நிலையான வன்மையை ஏற்படுத்துகின்றன.

நிலையான வன்மையை கொதிக்கவைத்து நீக்கமுடியாது. கணிக்கப்பட்ட அளவு சோடியம் காபனேற்று சேர்த்தால் நீரில் உள்ள $Ca^{2+}$, $Mg^2$ அயன்கள், காபனேற்றுக்களாக வீழ்படிவாகும். இவ்வாறு இவ்வன்மை நீக்கப்படலாம்.

**முதலாம் இரண்டாம் தொகுதி மூலகங்களின் நைத்திரேற்றுக்கள்**

மற்ற எல்லா உலோக நைத்திரேற்றுக்களைப் போல S தொகுப்பு மூலகங்களின் நைத்திரேற்றுக்களும் நீரில் கரையக்கூடியவையாகும். கார உலோகங்களைத் தவிர மற்ற எல்லா உலோகங்களின் நைத்திரேற்றுக்களும் வெப்பமேற்றப்பட்டால் அவ்வுலோகங்களின் ஒட்சைட்டுக்களாகவும், கபிலநிறமான நைதரசன் ஈரொட்சைட்டாகவும், ஒட்சிசனாகவும் பிரியும்.

உதாரணம் : $2Ca(NO_3)_2 \rightarrow 2CaO + 4NO_2 \uparrow + O_2 \uparrow$

$2Mg(NO_3)_2 \rightarrow 2Mgo + 4NO_2 \uparrow + O_2 \uparrow$

கார உலோகங்களின் நைத்திரேற்றுக்கள் மட்டும் வெப்பமேற்றும்போது முதலில் உருகி பின்பு உயர் வெப்பநிலையில் பிரிகையுற்று ஒட்சிசனையும் அவ்வுலோகங்களின் நைத்திரேற்றுக்களையும் தரும்.

$2NaNO_3 \rightarrow 2NaNO_2 + O_2$

$2KNO_3 \rightarrow 2KNO_2 + O_2$

இத்தொகுதியிலும் இலிதியம் நைத்திரேற்று ஒரு விதிவிலக்காகும். இலிதியம் நைத்திரேற்று வெப்பமேற்றும்போது பிரிந்து இலிதியம் ஒட்சைட்டையும், நைதரசன் ஈரொட்சைட்டையும், ஒட்சிசனையும் தரும்.

$2Li(NO_3)_2 \rightarrow 2LiO + 4NO_2 \uparrow + O_2 \uparrow$.

பொதுவாக இத் தொகுதிகளின் வழியே நைத்திரேற்றுக்களின் வெப்ப உறுதிப்பாடு அதிகரிக்கின்றது.

ஆய்வுகூடத்தில் நைத்திரேற்றுக்களை பெற்றுக்கொள்ள அவ்வுலோகங்களை, அவற்றின் ஒட்சைட்டுக்களை, ஐதரொட்சைட்டுகளை அல்லது காபனேற்றுக்களை நைத்திரிக்கமிலத்தில் கரைத்து, விளைவு கரைசலை செறிவுபடுத்திப் பளிங்காக மாற்றுவர்.

உதாரணம் : $MgO + 2HNO_3 \rightarrow Mg(NO_3)_2 + H_2O$

**S தொகுப்பு மூலகங்களின் ஏலைட்டுகள்**

முதலாம் தொகுதி மூலகங்கள் அலசன்களுடன் நேரடியாக தாக்கங்களில் ஈடுபட்டு ஏலைட்டுக்களை உருவாக்கும். இவை புறவெப்பத் தாக்கங்களாகும். இச்சேர்வைகள் எல்லாம் அயன் சேர்வைகளாகக் கருதப்படலாம், சீசியத்தின் சேர்வையைத் தவிர மற்ற ஏலைட்டுக்கள் எல்லாம் கறியுப்புப்பளிங்கின் சாலக அமைப்பை உடையவையாகும். இம்மூலக்கூறுகளில் நேர் அயன்களும், எதிர் அயன்களும் இணைப்பெண் (Coordination number) ஆறு உடையவை. இவ் ஏலைட்டுக்கள் எல்லாம் (இலிதியம் புளோறைட்டைத் தவிர) நீரில் கரையக்கூடியவை. இவற்றின் உருகுநிலை கொதி நிலை உயர்ந்தவையாகும்.

இரண்டாம் தொகுதி மூலகங்களும் அலசன்களுடன் நேரடியாக தாக்கமும் பெரிலியத்தின் உயர் அயனாக்கற் சக்தி காரணமாக இதன் ஏலைட்டுகள் பங்கீட்டு வலுச்சேர்வைகளாகும். ($BeF_2$ விதி விலக்காகும்). இத் தொகுதி உலோகங்களின் புளோரைட்டுகள் நீரில் கரையாது. $BeF_2$ கரையும். மற்ற ஏலைட்டுக்கள் நீரில் கரையும். கரைதிறன் Mg தொடக்கம் Ba வரை அதிகரிக்கும். பெரிலியத்தின் குளோரைட்டு புரோமைட்டு அயடைட்டு ஆகியவை சேதனக் கரைப்பான்களில் கரையும் (சேதனக் கரைப்பான்கள் அற்ககோல், ஈதர் அசற்றோன் ஆகும்) தொகுதியின் வழியே சேதனக் கரைப்பான்களில் கரையும் கரைதிறன் குறையும்.

**ஐதரைட்டுகள்**

பெரிலியத்தை தவிர்ந்த மற்ற எல்லாத் தொகுதி I, தொகுதி II மூலகங்களும் ஐதரசனுடன் நேரடியாகச் சேர்ந்து ஐதரொட்டைட்டுக்களைத் தரும்.

உதாரணம் : இலிதியத்தை ஐதரசன் ஓட்டத்தில் செஞ்சூடாக்கினால் இலிதியம் ஐதரைட்டு உண்டாகின்றது.

$$2Li + H_2 \underset{\triangle}{=} 2\,LiH$$

இதேபோல் சோடியம் ஐதரசன் ஓட்டத்திலே வெப்பமேற்றப்பட்டால் சோடியம் ஐதரைட்டு உண்டாகிறது.

$$2Na + H_2 \xrightarrow[\triangle]{360} 2NaH$$

எல்லா ஐதரைட்டுகளும் உலர்ந்தவளியில் உறுதியானவை. ஆனால் நீருடன் வீறாகத் தாக்கம் புரிந்து ஐதரசனை விடுவிக்கும்.

$MH + H_2O \rightarrow MOH + H_2 \uparrow$

$MH2 + 2H_2O \rightarrow M(OH)_2 + 2H_2 \uparrow$

உருகிய ஐதரைட்டுகள் மின்பகுக்கப்படும்போது ஐதரசன் அனோட்டில் விடுவிக்கப்படுவது அவதானிக்கப்படவேண்டியதாகும். உலோகம் கதோட்டில் விடுவிக்கப்படும். இச்சேர்வைகள் அயன் சேர்வைகள் என இது எடுத்துக்காட்டுகிறது. ஐதரைட்டுகளில் உறுதிப்பாடு தொகுதியின் வழியே அதிகரிக்கும்.

**சல்பேற்றுகள்**

சல்பேற்றுகள் தயாரிப்பதற்கு ஐதான சல்பூரிக்கமிலத்தை காரங்களின் ஐதான கரைசல்களுடன் நடுநிலையாக்கப்படும்.

உதாரணம் : $2NaOH + H_2SO_4 \rightarrow Na_2SO_4 + 2H_2O$

இக்கரைசல் பளிங்காகவிடப்படும்போது சோடியம் சல்பேற்று $Na_2SO_4\,10H_2O$ பளிங்குகளாக மாறுகிறது. பொற்றாசியம் சல்பேற்று நீரற்ற பளிங்குகளாகக் காணப்படும்.

காரமண் உலோகங்கள் அல்லது அவற்றின் ஒட்சைட்டுகள், ஐதரொட்சைட்டுக்கள் ஆகியவற்றை ஐதான சல்பூரிக்கமிலத்தில் கரைத்து இவற்றின் சல்பேற்றுக்களைத் தயாரிக்கலாம்.

உதாரணம்: $MgO + H_2SO_4 \rightarrow MgSO_4 + H_2O$

மக்னீசியம் சல்பேற்று நீரில் கரையும். கல்சியம் சல்பேற்று நீரில் மிகச் சிறியளவில் மட்டும் கரையும். துரந்தியம், பேரியம், சல்பேற்றுக்கள் மேலும் கரைதிறன் குறைந்தவை. கல்சியம் துரந்தியம், பேரியம் ஆகிய அயன்கள் உள்ள கரைசல்களுள் சல்பேற்று அயன்கள் உள்ள சேர்வைகள் சேர்க்கப்பட்டால் வெண்நிற வீழ்படிவுகள் தோன்றும்.

உதாரணம் : 1. $CaCl_2 + Na_2SO_4 \rightarrow CaSO_4 + 2NaCl$

2. $BaCl_2 + H_2SO_4 \rightarrow BaSO_4 + 2\,HCl$

3. $Sr(NO_3)_2 + K_2SO_4 \rightarrow SrSO_4 + 2KNO_3$

**ஐதரசன் சல்பேற்றுக்கள்**

மேலே சல்பேற்றுக்களைத் தயாரிக்க நிகழ்த்திய நடுநிலையாக்கலில் பெற்ற கரைசலுக்கு இப் பரிசோதனையில் உபயோகித்த அதே கனவளவு அதே வலுவுள்ள $H_2SO_4$ சேர்க்கப்பட்டால் இரு சல்பேற்றுக் கரைசல்கள் உண்டாகும்.

$Na_2SO_4 + H_2SO_4 \rightarrow 2\,NaHSO_4$

அல்லது வெப்பமான செறிந்த சல்பூரிக்கமிலத்தில் சல்பேற்றைக் கரைத்து ஆவியாக விட்டால் ஐதரசன் சல்பேற்றுக்கள் பளிங்காகக் கிடைக்கும். ஐதரசன் சல்பேற்றுகளின் நீர்க்கரைசல்கள் மற்ற ஐதரசன் உப்புக்களைப் போல அமிலவியல்புடையவை. ஏனெனில் ஐதரசன் சல்பேற்றயன்கள் பிரிகையடைந்து ஐதரசன் அயன்களைத் தருவதனால் ஆகும்.


$HSO_4^- \quad H^+ + SO_4^{2-}$

# இலங்கை-பாகிஸ்தான் ஜனாதிபதிகள் சந்திப்பு

(கொழும்பு)

மூன்று நாட்கள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சீனா சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று பிற்பகல் பாகிஸ்தான் ஜனாதிபதி மம்நூன் ஹீசைனுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

இலங்கைக்கு பாகிஸ்தானின் ஆதரவு தொடர்ந்தும் வழங்கப்படும் என பாகிஸ்தான் ஜனாதிபதி இப்பேச்சுவார்த்தையின்போது உறுதியளித்தார்.



மற்றும் இரு நாடுகளுக்கும் இடையில் கிரிக்கெட் சுற்றுப் பயணங்களை புதுப்பிப்பது தொடர்பாகவும் தெற்கு ஆசிய நாடுகள் இடையே நடைபெறும் வர்த்தக அளவை அதிகரிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் ரஞ்சித் உயன்கொட ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## நாவற்காடு-மிருசுவில் வீதி புனரமைப்பு பூர்த்தி

வரணி நாவற்காடு-மிருசுவில் வீதியானது கடந்த மூன்று வருடங்களாக திருத்தப்படாமல் மக்கள் பயணிக்க முடியாத நிலையில் இருந்தது.

கடந்த இரண்டு வருடங்களிற்கு முன்பு வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் பதிவாக இருந்த பகுதிகளிற்கு களிமண் பறிக்கப்பட்டு வேலைகள் தொடங்கப்பட்டிருந்த. போது மழை காலத்தில் அவ்வீதி மக்கள் போக்குவரத்துச் செய்ய இயலாமல் இருந்தது. பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பலரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

தற்பொழுது மீண்டும் அவ்வீதி கிரவல் இடப்பட்டு மிகவும் கடுமையாக சேதமடைந்து பாவிக்கமுடியாமல் இருந்த பகுதிகள் செப்பனிடப்பட்டு திருத்த வேலைகள் நிறைவடைந்துள்ளன.

இவ்வீதியினை நாவற்காடு குடமியன் மிருசுவில் வடக்கு முதலான பகுதிகளைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

## சைவசமய அபிவிருத்திக் கழகத்தினால் குருபூசையை முன்னிட்டு பேச்சுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக்கழகம் சைவச்சிறார்களின் பேச்சாற்றலையும் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு திருஞானசம்பந்தர் குருபூசையை முன்னிட்டு பேச்சுப் போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டி தரம் 1,2,3,4 மாணவர்களுக்கு நடாத்தப்படவுள்ளது. இப்பேச்சுப் போட்டி எதிர்வரும் யூன் 1 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பமுடிவுத் திகதி எதிர்வரும் மே 24 ஆம் திகதியாகும்.

பரிசில்கள் எதிர்வரும் யூன் 13 ஆம் திகதி திருஞானசம்பந்தர் குருபூசை அன்று வழங்கப்படும் மேற்படி பேச்சுப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல. 82 நாவலர் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப 3 மணி முதல் 5 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என சைவசமய அபிவிருத்திக்கழக சமய பிரசாரகரும் உதவிப் பரீட்சைச் செயலருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார்.

## ஆங்கிலதினப் போட்டி

பூநகரி கோட்ட மட்ட ஆங்கில தினப் போட்டியின் எழுத்தாக்கப் போட்டிகள் வடபிரதேச பாடசாலைகளுக்கு இன்று 9 மணியளவில் பூநகரி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பூநகரி தெற்குப் பிரதேச பாடசாலைகளுக்கான போட்டி நாளை ஜெயபுரம் மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளதாக பூநகரி கோட்ட கல்விப் பணிபபாளர் எஸ்.தரு மரத்தினம் அறிவித்துள்ளார்.(112)

## பூநகரியிலிருந்து 600 லீற்றர் பால் மீசாலை காகில்ஸ்ஸிற்கு விநியோகம்

(முழங்காவில்)

பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த 60 இற்கு மேற்பட்ட பால் உற்பத்தியாளர்களின் பசுப்பால் இம்மாதம் தொடக்கம் மீசாலையில் இயங்கும் காகில்ஸ் நிறுவனத்திற்கு தினமும் அனுப்பப்பட்டு வருகிறது.

பூநுகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினூடாக தினமும் 600 லீற்றருக்கு மேற்பட்ட பால் அனுப்பப்பட்டு வருகிறது.

ஒருவருடத்திற்கு மேலாக கிளிநொச்சியில் பால் பதனிடும் நெஸ்லே நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வந்த பாலுக்கு காகிலஸ் நிறுவனம் ரூபா 50-60 வரை லீற்றருக்கு வழங்க முன்வந்ததால் தற்பொழுது காகில்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்படுவதால் பயனாளிகள் கூடுதலான வருமானம் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (112)

## கல்வி வலயத்தின் விஞ்ஞான தின நிகழ்வு

வடமராட்சி கல்வி வலயத்தினால் விஞ்ஞான தினம் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை மண்டபத்தில் வடமராட்சி வலய விஞ்ஞான உதவிக்கல்விப்பணிபபாளர் திருமதி.கருணேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராசேந்திரம், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார், வடமாகாண விஞ்ஞான உதவிக்கல்விப்பணிப்பாளர் எ.சிவனருள்ராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக நெல்லியடி பருத்தித்துறை ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர்களான எஸ்.சத்தியசீலன், ஏ.யோகதாஸ் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

வடமராட்சி வலயத்திலுள்ள சகல விஞ்ஞான ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (109)

## பேருந்து சேவைகள் ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தாண்டிக்குளம் கிராமத்திலிருந்து பல்வேறு இடங்களிற்கு செல்லும் வகையில் செம்மன் வீதியுடாக பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சாந்திபுரம் ஊடாக எமில் நகரின் ஏனைய பிரதேசங்களுக்கு செல்லும் வகையில் இப்பேருந்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிராம மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

முன்னர் இவ்வீதிகளூடாக பேருந்து சேவைகள் இடம்பெறாமையால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தினமுரசு சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது

## ஒரு மருந்தாளரே கடமையில் சிரமத்துக்குள்ளாகும் நோயாளர்கள்

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் தற்போது சிகிச்சைக்காக வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நாளாந்தம் இவ்வைத்திய சாலைக்கு மானிப்பாய் பிரதேசத்தின் பல இடங்களிலிருந்தும் அதிகளவிலான நோயாளர்கள் அதிகாலை வேளையே வந்து தங்கி நின்று சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களுக்கு சிகிச்சையின் பின் மருந்து எடுப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

மருந்து வழங்கும் பகுதியில் ஒருவரே கடமையாற்றுவதால் நோயாளர்கள் நீண்டநேரம் காத்து நின்று மருந்தை பெற வேண்டிய நிலை காணப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

இந்நெருக்கடி நிலையை தவிர்க்க மருந்து வழங்கும் பகுதிக்கு மேலதிகமாக ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் எனவும் இது தொடர்பில் வைத்திய சாலை நிர்வாகம் கவனம் செலுத்த வேண்டும். என நோயாளர்களும் பொது மக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (104)



பேராதனை பல்கலைக்கழக கலைமாணிப் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த யாழ்.புதிய உயர் கல்லூரியில் கல்வி கற்ற 60 மாணவர்கள், கல்லூரி பணிப்பாளர்களான சண்முகநாதன் அருள்நங்கை தம்பதிகள் மற்றும் விரிவுரையாளர்களுடன் நிற்பதைக் காணலாம். (01)








வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும் புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# இந்திய நாடாளுமன்றம் ஜனநாயகத்தின் கோயில்

## மோடி தெரிவிப்பு



(டில்லி)


நாட்டுக்கு சேவையாற்றவே ஜனநாயகத்தின் கோயிலான நாடாளுமன்றத்திற்கு நான் வந்துள்ளேன் என பாரதிய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவராக மோடி தேர்வு செய்யப்பட்டதன் பின்னர் உரையாற்றும்போது அவர் தெரிவித்தார்.

பா.ஜ.க நாடாளுமன்ற குழுத் தலைவராக மோடியை மூத்த தலைவர் அத்வானி முன்மொழிந்தார். முரளி மனோகர் ஜோஷி, வெங்கையா நாயுடு, சுஷ்மா ஸ்வராஜ், அருண் ஜேட்லி, நிதின் கட்காரி ஆகிய தலைவர்கள் மோடியின் பெயரை வழிமொழிந்தனர். தலைவராக தேர்வு செய்யப்பட்ட மோடிக்கு அத்வானி, ராஜ்நாத் சிங் உள்ளிட்ட தலைவர்கள் பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தனர்.

பின்னர் பேசிய மோடி தம்மை தலைவராக தேர்ந்தெடுத்த அத்வானி மற்றும் ராஜ்நாத் சிங்கிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். அப்போது பேசிய மோடி, மூத்த தலைவர் வாஜ்பாயும் இவ் விழாவிற்கு வந்திருந்தர் சிறப்பாக இருந்திருக்கும் நாடாளுமன்ற மைய மண்டபத்திற்கு தாம் வருவது இதுவே முதல் முறை. நாட்டுக்கு சேவையாற்றவே ஜனநாயகத்தின் கோயிலான நாடாளுமன்றத்திற்கு தாம் வந்துள்ளேன் கட்சி ஊழியராக தமது முழு உழைப்பையும் வழங்கி இருப்பதாகவும் மோடி பேசினார். நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தந்த தியாகிகளை வணங்குவதாக மோடி தெரிவித்தார்.

பல தலைவர்களின் தியாகத்தாலேயே நான் இந்த மேடையில் நிற்கிறேன். நாட்டு மக்கள் அளித்து இருப்பது ஆட்சி மீதான அதிருப்தி அல்ல, புதிய ஆட்சி மீதான நம்பிக்கை என கூறிய அவர், மத்தியில் இருந்த பலவேறு ஆட்சிகளும் தம் வழியில் பல பணிகளை ஆற்றியுள்ளதாக தெரிவித்தார். பா.ஜ.க. மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றும் வகையில் பாடுபடும் என்றும், ஏழைகளிலும் பரம ஏழைகள் தமக்கு வாக்களித்துள்ளதாகவும் கூறினார். ஏழைகள், இளைஞர்கள், மகளிரின் முன்னேற்றத்திற்காக பாஜக அரசு பாடுபடும் என்றும் மோடி உறுதிபட தெரிவித்தார்.

# நிலவுக்கு குளிர்பானம் அனுப்ப திட்டமிடுகிறது ஜப்பான்



ஜப்பானைச் சேர்ந்த பிரபல குளிர்பான நிறுவனம் ஒன்று அடுத்த ஆண்டில் நிலவுக்கு குளிர்பானத்தை அனுப்பவுள்ளது.

ஜப்பானைச் சேர்ந்த பொகாரி ஸ்வீட் என்ற குளிர்பான நிறுவனம், எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில், நிலவுக்கு வர்த்தக நோக்கத்தில் குளிர்பானத்தை அனுப்புகிறது. இதற்காக ஒரு கிலோ எடையுள்ள குளிர்பான ரின்கள் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தகரப் பெட்டி ஒன்றில் வைத்து அனுப்பப்படுகிறது.

இதுகுறித்து அந்தக் குளிர்பான நிறுவனத்தின் உரிமையாளர் ஓட்சுகா கூறுகையில், இந்த குளிர்பானம் இளம் வயதினரை விண்வெளி வீரர்களாக ஊக்கவிப்பதுடன், நிலவுக்கு செல்லும் அவர்கள் அந்த ரின்களை திறந்து குளிர்பானத்தை குடிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

# ரஷ்ய படைகள் வாபஸ்

உக்ரைன் பிரச்சினையில் முக்கிய திருப்பமாக, பல மாதங்களாக நீடித்து வந்த எல்லையில் ரஷ்யா நிறுத்தி வைத்திருந்த படைகளை தங்கள் பழைய நிலைகளுக்குத் திரும்புமாறு அதிபர் விளாடிமிர் புடின், நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

உக்ரைனின் எல்லையை ஒட்டிய ராஸ்டோவ், பெல்கராட், பிரியான்ஸ்க் ஆகிய பகுதிகளில் பருவகால பயிற்சி என்ற பெயரில் ரஷ்ய படைகளை குவித்திருந்தது.

இதற்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள், ரஷ்யாவின் பல்வேறு அதிகாரிகள் மற்றும் வர்த்தகர்கள் மீது விசா மறுப்பு, சொத்துக்கள் முடக்கம் ஆகிய தடைகளை விதித்தன.

இந்நிலையில், ராஸ்டோவ், பெல்கோராட், பிரையான்ஸ்க் ஆகிய பகுதிகளில் பயிற்சி மேற்கொண்டுள்ள படைகளை தங்கள் பழைய நிலைகளுக்குத் திரும்ப அழைக்குமாறு பாதுகாப்புத்துறை அமைச்சர் செர்ஜி ஷோய்குவிடம் அதிபர் புடின் உத்தரவிட்டார்.

# நாள் ஒன்றுக்கு 8 ஆயிரம் குழந்தைகள் பிறந்தவுடன் இறக்கின்றனர்

## ஆய்வில் தகவல்



(லண்டன்)

லண்டனை சேர்ந்த மருத்துவ கல்லூரி பேராசிரியர் ஜாய் லாவ்ன் சர்வதேச அளவில் பிறக்கும் குழந்தைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். அதில் நாள் ஒன்றுக்கு 8 ஆயிரம் பிறந்த குழந்தைகள் இறப்பது கண்டறியப்பட்டது.

அதேவேளையில் ஆண்டுக்கு 29 இலட்சம் குழந்தைகள் இறக்கின்றன. இந்த இறப்பு விகிதம் இந்தியா, நைஜீரியா, பாகிஸ்தான் சீனர், காங்கோ போன்ற நாடுகளில் அதிகம் உள்ளன.

இந்தியாவில் மட்டும் ஆண்டுக்கு 7 இலட்சத்து 79 ஆயிரம் பிறந்த குழந்தைகள் இறக்கின்றன.

இது நைஜீரியாவில் 2 லட்சத்து 76 ஆயிரமும், பாகிஸ்தானில் 2 லட்சத்து 2 ஆயிரத்து 400 ஆகவும், சீனாவில் 1 இலட்சத்து 57 ஆயிரமாகவும், காங்கோவில் 1 இலட்சத்து 18 ஆயிரமாகவும் உள்ளது.

உலகம் முழுவதும் பிறக்கும் 4 கோடி குழந்தைகளில் மூன்றில் ஒரு பங்கு குழந்தைகள் பிறந்த ஒரு வருடத்திற்குள்ளேயே இறந்து விடுகின்றன.

அதே நேரத்தில் தாய்ப்பால் புகட்டுதல் மற்றும் அதிநவீன சிகிச்சைகள் மூலம் கருவிலேயே குழந்தைகள் அழிவது, பிறந்தவுடன் இறப்பது போன்ற நிகழ்வுகளும் தடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் சர்வதேச அளவில் ஆண்டுக்கு 30 இலட்சம் குழந்தைகள் காப்பாற்றப்படுகின்றனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகச் செய்திகள்

# சிரியாவில் தொடர்கிறது போர்

# 3 ஆண்டில் 1.62 இலட்சம் பேர் பலி

(லண்டன்)

மேற்காசிய நாடுகளில் ஒன்றான, சிரியாவில், 2011 முதல் நடந்து வரும் உள்நாட்டு போரில், 1.62 இலட்சம் பேர் இறந்துள்ளதாக, பிரிட்டனைச் சேர்ந்த மனித உரிமைகள் அமைப்பு, ஆதாரங்களுடன் தெரிவித்துள்ளது.

அந்நாட்டு அதிபர் அல் - அசாத் தலைமையிலான அரசு படைகளுக்கும், கிளர்ச்சியாளர்கள் மற்றும் அவர்களுக்கு ஆதர வான பயங்கரவாத குழுக்களுக்கும், இடையே நடந்து வரும் சண்டையில், 53 ஆயிரம் அப்பாவி மக்கள் இறந்துள்ளனர் அவர்களில், 8,600 பேர் குழந்தைகள்.

இராணுவத்தினரில், 61 ஆயிரம் பேரும், மீதமுள்ளவர்கள் பயங்கரவாதிகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவானவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிபியா, லெபனான், எகிப்து போன்ற நாடுகளில், 2011 இல், அரசுகளுக்கு எதிராக ஏற்பட்ட உள்நாட்டு கலவரத்தின்போது, சிரியாவிலும் வன்முறை தொடங்கியது. பிற நாடுகளின் கலவரம் அநேகமாக அடக்கப்பட்டுள்ள நிலையில், சிரியா இன்னும் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது.

# உறவினர்களின் வலியுறுத்தலால் விமானத்தின் தகவல்கள் வெளியீடு

மார்ச் 8 ஆம் திகதி காணாமற்போன மலேசிய விமானத்தின் செயற்கைக்கோள் தகவல் மற்றும் புகைப்படங்களை அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ளது.

எங்களது தேடுதல் பணி வெளிப்படையானதாக இருக்கும் வகையில், இந்தச் செயற்கைக்கோள் தகவல்களை வெளியிட்டுள்ளதாக விமான போக்குவரத்து மற்றும் பிரிட்டிஷ் நிறுவனம் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

விமானத்தில் பயணம் செய்தவர்களின் உறவினர்கள் பலரும், விமானத்தைத் தேடும் பணி நடந்து கொண்டிருப்பது குறித்து செயற்கைக்கோள் தகவல்களை வெளியிட்டால், அதனை வைத்து தனிநபர்களின் தேடுதல் தொடங்கும் என்று வலியுறுத்தியதன் அடிப்படையில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## காந்தி - இந்தியா....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இது தவிர்க்கமுடியாதது வரலாற்று விதியின் நியதி அது.

காந்தியின் சுதந்திர இலட்சியங்கள் அகிம்சை, தீண்டாமை ஒழிப்பு, மத இன சமூகங்களின் ஐக்கியத்தை வலியுறுத்தி நின்றது.

வன்முறையற்ற உலகு - சிந்திக்கும் போது எவ்வளவு நன்றாக இருக்கிறது.

ஆனால் அந்த இலட்சியங்களை தலை கீழாகப் புரட்டிப் போடும் செயல்கள் இன்று செல்வாக்குச் செலுத்துகின்றன.

முதிர்ச்சியடையாத அரைநிலமானிய முதலாளித்துவ இந்தியாவில் காந்தியடிகளின் தலைமையிலான சுதந்திர இயக்கம் வரையறைகளைக் கொண்டிருந்தது.

அநீதியற்ற சமூக அமைப்புமுறை பற்றிய தேடல்கள் கருத்துக்கள் நேருவிடமும் இடதுசாரித் தலைவர்களிடமும் இருந்தன.

ஆனால் அதே காந்திய வலுக்களுடன் சமூக மாற்றத்திற்கான இயக்கமும் முன்னெடுத்துச் செல்லப்பட்டிருக்கவேண்டும்.

காந்திய அறங்கள் சிதைக்கப்பட்டதும் சமூக நீதிக்கான இயக்கத்தை முன்னெடுப்பதில் தடைகளை ஏற்படுத்திய தெனலாம்.

இந்திய சுதந்திரத்திற்கான செயற்பாட்டில் இடதுசாரிகள் காந்தியாருடன் தீவிரமான பேதங்களை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. விமர்சனமும் செயற்பாடும் என்ற முறைகளையே பின்பற்றினார்கள்.

காந்தியின் காலத்து காங்கிரஸ் மாநாடுகள் கூட்டங்கள் பொதுவாகவே கலந்துரையாடல் கருத்தொருமிப்பு என்ற முறைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

ஒரு மனிதரைச் சுற்றி என்பதல்ல. தனிமனிதரின் வரலாற்றுப் பாத்திரம் முக்கியமானது. லட்சோபலட்சம் மனிதர்கள் இருந்தார்கள். கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாக உருவெடுக்கும். காந்தியம் அத்தகைய மாபெரும் ஆற்றலைக் கொண்டிருந்தது.

உலக விவகாரங்களில் இந்தியா என்ன செய்கிறது அல்லது இந்தியாவின் மீது உலகத்தினரின் மரியாதை எல்லாம் இங்கிருந்துதான் ஆரம்பிப்பவை.

காந்தியின் தேசம் பொக்கை வாயுடன் சிரித்துக் கொண்டிருக்கும் எனத்தான் இந்தியாவிற்கு அப்பால் உள்ள சாதாரண மக்கள் சிந்திப்பார்கள்.

ஆனால் யதார்த்தம் அதுவல்ல. ஒரு கருணையற்ற தன்னலமும் அதிகார அகங்காரமும் இன்று உருவெடுத்துள்ளது.

இவை களையப்படவேண்டும். காந்திய கொள்கைகளில் போதாமை இருந்திருக்கலாம்.

ஆனால் காந்திய அறம் இன்று தேவைப்படுகிறது.

வெறுப்பும், குரோதமும் மலிந்த உலகில் அது நவீன வடிவில் இன்று தேவைப்படுகிறது.

# பிரேஸிலில் பஸ் விபத்து; ஸ்தலத்தில் 20 பேர் பலி




பிரேஸில் நாட்டில் உள்ள கடற்கரை நகரான போர்டலேஸாவில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் முன்னால் சென்ற மோட்டார் சைக்கிள் திடீரென ப்ரேக் போட்டதால் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து சாலையில் இருந்து விலகி விபத்துக்குள்ளானதாக விபத்தில் இருந்து தப்பிய ஓட்டுனர் கூறினார்.

பஸ் விபத்தில் 18 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் 2 பேர் சிகிச்சைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்து விட்டதாகவும் 17 பேர் காயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கிளிநொச்சியில் வாழ்வின் எழுச்சி;

# பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவி



வாழ்வின் எழுச்சித் திட்டத்தின கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் நேற்று கிளிநொச்சி கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிக்கான கால்நடைகளை வழங்கி வைத்துள்ளார்.

இதனை வழங்கி வைத்து கருத்துத் தெரிவித்த வடக்குத் மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் வாழ்வாதார உதவிகள் தொடர்ந்தும் இனிவரும் காலங்களில் கிடைக்கப் போவதில்லை எனவே மக்கள் கிடைக்கின்ற வாழ்வாதார உதவிகளை வைத்து சரியாக பயன்படுத்தி உரிய பயனை பெற்றுக்கொள்ள வேண்டும். அதுமட்டுமன்றி வாழ்வாதார நோக்கங்களுக்கு பல வங்கிகளில் இலகு கடன்கள் வழங்கப் படுகின்றன. எனவே அந்தச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார். இதன்போது கனகாம்பிகைகுளம், செல் வாநகர், விவேகானந்தநகர், பெரியபரந்தன், மருதநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நல்லின ஆடுகளும்,மாடுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச உதவி பிரதேச செயலர் சிவகாமி, கால்நடை வைத்திய அதிகாரி றேனுகா, பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் பாலா, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் றெஜினோல்ட், சுதாயினி, பிரியதர்சினி, ஈஸ்வரி மற்றும் பயனாளிகள்ஆகியோர் கலந்துகொணடனர்.

## காட்டுயானைகள் தொல்லை ஒட்டுசுட்டானில் அதிகம்

### பொது மக்கள் முறைப்பாடு

ஒட்டுசுட்டான் கருவேலன்கண்டல் மானுருவிக் கிராமத்தில் இரவு வேளைகளில் காட்டுயானைகள் புகுந்து அட்டகாசம் செய்வதால் தாம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். தினமும் கிராமத்துக்குள் புகும் யானைகள் தென்னை, வாழை, பப்பாசி உள்ளிட்ட பயன்தரு மரங்களைத் தள்ளி வீழ்த்தி அவற்றை அழிப்பதுடன் வீடுகளுக்குள் இருக்கும் உணவுப் பொருள்களையும் இழுத்து எடுக்கின்றன. அத்துடன் வீட்டுக்கூரைகளைப்பிடுங்கி எறிவதுடன் சுவர்களையும் தள்ளி வீழ்த்துகின்றன. இதனால் இரவில் வீட்டில் நிம்மதியாகப் படுத்துறங்க முடியாதுள்ளதாகவும் அச்சத்துடன் விழித்திருந்து யானைகளை விரட்டவேண்டியுள்ளதாகவும் அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### மோடி...

போது இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியை சந்தித்து நாட்டின் அடுத்த பிரதமராக வருவதற்கு முறைப்படியான உரிமையை கோரியிருந்தார்.

இதேவேளை ஒரு கட்சி தனித்து ஆட்சி அமைக்கும் அளவுக்கு ஆசனங்களை வெல்வதென்பது இந்தியாவில் கடந்த முப்பது ஆண்டுகளில் இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

### பணிப்புறக்...

கோரிக்கைகளை முன்வைத்தே இந்த அடையாள சேவைப் புறக்கணிப்பு முன் எடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக இது தொடர்பில் நாடளாவிய ரீதியாக தொழிற்சங்கப் போராட்டங்கள் முன் எடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது, வழங்கப்பட்ட உறுதி மொழிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

### இலங்கையின்...

லாஹ் இந்தப் பிரச்சினையை முற்றாக ஒழித்துக்கட்டுவோம் என ஜனாதிபதி ஹுசைன் தெரிவித்தார்.

இன்று நடைபெறவுள்ள ஆசியாவின் தொடர்பாடல் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் தொடர்பான நான்காவது உச்சி மாநாட்டை ஒட்டியதாகவே இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. இந்தச் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நேற்றுக் காலை சீனா சென்றடைந்த ஜனாதிபதி ராஜபக்ஷ இன்று இந்த மாநாட்டில் உரையாற்றவுள் ளார்.

சர்வதேச தளத்தில் பாகிஸ்தான் எப்போதும் இலங்கைக்கு ஆதரவாக இருக்கும் என்று தெரிவித்த பாகிஸ்தான் ஜனாதிபதி ஹுசைன், இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கும் முறைப்பாடுகள் தர்க்கரீதியற்றவை என்றும் மேலும் விளக்கினார்.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவை உட்பட போரின்போதும் போருக்குப் பின்னரும் இலங்கைக்கு ஆதரவாக இருந்துவரும் பாகிஸ்தானுக்கு ஜனாதிபதி ராஜபக்ஷ தனது நன்றிகளைத் தெரிவித்தார். போருக்குப் பிந்திய அரசாங்கத்தின் உடனடி நடவடிக்கைகள் குறித்து விளக்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நாங்கள் 14000 இற்கும் மேற்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களை விடுவித்து அவர்களை சமூக மயப்படுத்தியுள்ளோம்.

அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு சிறந்த இடம் சமூகமே என நான் உணர்கிறேன். 595 சிறுவர் போராளிகளை விடுவித்து போர் நிறைவு பெற்று ஒரு மாதகாலப்பகுதிக்குள் அவர்களது பெற்றோரிடம் கையளித்தோம். உண்மையில் இதுவொரு கடினமான பணி எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்த பாகிஸ்தான் ஜனாதிபதி, இது உண்மையிலேயே ஒரு பாரிய நடவடிக்கை இது உங்களுடைய மக்களுக்கும் உங்களுடைய அரசாங்கத்திற்குமான ஒரு நீண்ட போராட்டம். என்ன கொள்கைகளை நீங்கள் கடைப்பிடித்தாலும் அவை வெற்றியளித்திருப்பது சான்றாகும் எனத் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கான இலங்கையின் ஆதரவு குறித்து பேசிய ஜனாதிபதி ஹுசைன் இலங்கையுடனான உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான தனது நாட்டின் ஆர்வத்தையும் வெளிப்படுத்தினார். இலங்கை மக்களும் இலங்கை அரசாங்கமும் எமக்கு எப்போதும் ஆதரவாக இருந்து வந்துள்ளனர் என்றும் சில நாடுகள் தொடர்பில் எங்களுக்கு விசேட கவனம் உள்ளது என்றும் ஜனாதிபதி ஹுசைன் தெரிவித்தார்.

இரண்டு நாடுகளுக்கிடையேயும் கிரிக்கெட் சுற்றுப்பயணங்களை மீள ஆரம்பிப்பது குறித்தும் இரு தலைவர்களும் கலந்துரையாடினர். பாகிஸ்தான் அணி இவ்வருட இறுதியில் இலங்கையில் விளையாட திட்டமிடப்பட்டுள்ளது. என்றாலும் நாங்கள் அங்கும் சென்று விளையாட வேண்டும். பயங்கரவாதிகள் அதனை கட்டுப்படுத்துவதற்கு இடமளிக்க முடியாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது. நாங்கள் ஒரு சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைச் செய்து கொண்ட முதலாவது நாடு இலங்கையாகும் என பாகிஸ்தான் ஜனாதிபதி. தெரிவித்தார். வர்த்தகத்தை அதிகரிக்கும் விரிவான நோக்கெல்லை குறித்தும் இரண்டு நாடுகளினதும் ஜனாதிபதிகள் உடன்பட்டனர். வர்த்தக வாய்ப்புகளைக் கண்டறிவதற்காக தனியார்துறைக்கு இடமளிக்கும் வகையில் வர்த்தக தூதுக்குழுக்களைப் பரிமாறிக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. ஜனாதிபதியின் சர்வதேச ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின் வெட்டு

உயர் அழுத்த தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று மற்றும் 24.05.2014 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை குடத்தனை, நடுக்குடத்தனை, பொற்பதி, குடத்தனை வடக்கு கடற்கரைப் பகுதி, மணற்காடு சந்தி, மணற்காடு வடக்கு, அம்மன் ஆகிய இடங்களிலும்

22.05.2014 வியாழக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய இடங்களிலும்,

24.05.2014 சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை மல்லாகம் கட்டுவன் வீதி, ஏழாலை, மயிலங்காடு வீதி, விழிசிட்டி, உத்தமன்சிலையடி, கோண்டாவில் இருபாலை வீதி உணவுக்களஞ்சியம் வரை, நவரட்ணராஜா வீதி, உணவுக்களஞ்சிய வீதி, நந்தாவில் அம்மன் கோவிலடி ஆகிய இடங்களிலும்

25.05.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வைமன் வீதி, விஞ்ஞானபீட பிரதேசம், அரசடி வீதி, கோவில் வீதி, றக்கா வீதி, இராசாவின்தோட்டம், ஆஸ்பத்திரி வீதியின் ஒரு பகுதி, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி, கச்சேரி, குருசோ வீதி, கொழும்புத்துறை, பாசையூர், தூண்டி, ஈச்சமோட்டை, மகேந்திரபுரம், எழிலூர், நெடுங்குளம், மணியந்தோட்டம், உதயபுரம், ஆனந்தன்வடலி வீதியின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

## ஐ.நா.வுடன் ஒத்துழைக்க வேண்டும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை

(கொழும்பு)

யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையின் தற்போதைய முன்னேற்றங்கள் தொடர்பாக அறிக்கையிடும் ஐக்கியநாடுகள் சபையின் நிபுணர்களுடன் ஒத்துழைக்குமாறு இலங்கை அரசை மனித உரிமைகள் கண்காணிப்பகம் கேட்டுக்கொண்டுள்ளது.

அத்துடன் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான விசாரணைகளுக்கு அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப பேரவை அமர்வுகளில் இலங்கை தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இந்தத் தீர்மானத்திற்கு அமைவாக விசாரணைகளை நடாத்த இலங்கை அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.யுத்தக் குற்றச் செயல்கள் மற்றும் பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடாத்த ஆணைக்குழு ஒன்றை நிறுவுமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் தீர்மானத்தில் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### இணக்கப்பேச்சின்..

காந்தியின் கொலைச்சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என ராம் ஜெத்மலானி 'த ஹிந்து' விற்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வழக்கு மீதான விசாரணைகள் உச்ச நீதிமன்றத்தில் உள்ளதாகவும், இந்தப் பிரச்சினைக்கு சிறந்த தீர்ப்பொன்று பெற்றுக்கொடுக்கப்படும் என தான் எதிர்பார்ப்பதாகவும் பாரதிய ஜனதாக் கட்சியின் முன்னாள் உறுப்பினருமான ராம் ஜெத்மலானி தெரிவித்துள்ளார்.

### ரவிகரனுக்கு...

ராஜா பொலிஸாரின் குற்றச்சாட்டுத் தொடர்பில் ரவிகரனிடம் தமது தரப்பு வாதத்தை முன்வைக்குமாறு கோரியவேளை, சட்டத்தரணி பரஞ்சோதி மூலமாக ஆஜராகியிருந்த ரவிகரன் தான் அவ்வாறு நீதிமன்றத்தின் முன் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபடும் எண்ணம் இருக்கவில்லை எனவும் பொலிஸார் விடயங்களை சோடித்து தெரிவிப்பதாகவும் தெரிவித்தார். அத்துடன் நீதிமன்றின் முன்னால் நீதிமன்றுக்கு இடையூறு விளைவிக்கும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்துவது தவறானது என ஒப்புக் கொண்டார். இதனையடுத்து ஜனநாயகரீதியில் அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது தவறானதல்ல. ஆனால் நீதிமன்றுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டங்கள் நடாத்தக்கூடாது எனவும், மேலும் அனுமதி பெற்ற பின்பு ஆர்ப்பாட்டங்களை அமைதி வழியில் வேறு இடங்களில் நடாத்துவதற்கு நீதிமன்றம் தடை செய்யாது எனவும் தெரிவித்து ரவிகரனை வழக்கிலிருந்து நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா விடுவித்தார். (170)

### பணமோசடி..

சேர்ந்த 11பேர் உட்பட மொத்தம் 17 பேரிடம் ஒரு கோடியே 58 இலட்சம் ரூபாவைப் பெற்று மோசடி செய்துள்ளனர். பணத்தைப்பெற்றவர்களிடம் பயணம் குறித்து கேட்டபோது நாட்களை இழுத்தடித்து வந்ததாகவும் எதிர்த்துக்கதைத்தபோது தாம் மிரட்டப்பட்டதாகவும் பணம் கொடுத்தவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் ஜனநாயகக்கட்சியின் கீழ் கடந்த மாகாணசபைத்தேர்தலில் போட்டியிட்ட எம்.எஸ். கரைஸ் என்பவரும் தங்களை மிரட்டியதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வீட்டில் மோசடியில் ஈடுபட்ட பெண்ணும் அவரது மகளும் வந்திருப்பதனை அறிந்து பணம் கொடுத்தவர்கள் நேற்று அவ்வீட்டினை முற்றுகையிட்டு கலவரத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் அங்கு விரைந்த யாழ். பொலிஸார் சம்பந்தப்பட்ட பெண்ணையும் மகளையும் கைது செய்து யாழ். பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

மேலும் இவ்வாறு எட்டு சிறுவர்களும் 13 பெரியவர்களுமே மோசடிக்குள்ளாக்கப் பட்டவர்களில் அடங்குகின்றனர்.

இந்தச்சம்பவம் குறித்து யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். மேலும் பணம் வங்கிக் கணக்குகளுக்கு செலுத்தப்பட்டிருப்பதாகவும் அதற்கான ஆதாரங்களும் தம்மிடம் இருப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். இந்த ஆதாரங்களின் மூலப்பிரதிகளை பெண் ஒருவரிடம் இருந்து மோசடிக்காரர்கள் பறித்தெடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# காணி உரிமையாளர் பெயர்மாற்றம் சட்டத்தை மீறுகிறது பிரதேசசபை

(யாழ்ப்பாணம்)

காணிகளின் உரிமையாளர் பெயர்மாற்றப் படிவம் தொடர்பில் வலி.தென்மேற்கு பிரதேச சபை நிர்வாகம் சட்டத்திற்குப் புறம்பாக விதிமுறைகளை மாற்றி செயற்படுகின்றது.

இவ்விடயம் சட்டத்தின் முன் பிழையானது.

இவ்வாறு வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரபல சட்டத்தரணிகள் பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

பெயர்மாற்றப் படிவம் தொடர்பாக சட்டத்தின் முன்னுள்ள விடயங்களை சட்டத்தரணிகள் விளக்குகையில்,

பல தசாப்த காலமாக பெயர் மாற்றம் தொடர்பான பல விடயங்களை சட்டத்தரணிகள் உறுதிகள், தோம்புகள் மற்றும் ஆவணங்களை பரிசீலித்த பின்னர் பெயர்மாற்றப் படிவத்தில் கையெழுத்திட்டு சமர்ப்பிப்பார்கள்.

பின்னர் உப அலுவலகப் பொறுப்பதிகாரியின் சிபார்சின் பின்னர் சபையின் நிர்வாக செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு பெயர்மாற்றம் ஆதனப் பதிவேட்டில் மாற்றம் செய்து புதிய பெயர் வழங்கப்படும்.

ஆனால் புதிய தவிசாளர் சட்டத்தை மீறி சட்டத்தரணிகளின் கையொப்பத்திற்குப் பின்னால் சமாதான நீதவான்களின் கடிதங்களைப் பெற்று ஆதன உரிமை தொடர்பில் இணைக்கின்றார். இவ்விடயம் 1987 ஆம் ஆண்டின் 15 அம் இலக்க பிரதேச சபைகளின் ஆதனம் தொடர்பான சட்டங்களை மீறும் செயலாகும்.

எனவே பிரதேசசபைச் செயலாளர் இவ்விடயத்தில் கவனமெடுத்து உடனடியாக சமாதான நீதவான்களின் கடிதத்தை இரத்துச் செய்ய முன்வரவேண்டும். இல்லாவிடில் சட்டத்தரணிகளால் கையொப்பம் இடப்படும் விடயங்களுக்கு தாம் பொறுப்புக் கூறவேண்டிய அவசியமில்லையெனக் கூறியுள்ளார்.

இதேவேளை, இதற்கென முத்திரையின் பெறுமதியான ரூபா 25 ஐ மக்களிடம் இருந்து அறவீடு செய்வதும் சட்டத்திற்கு முரணானது.

எனவெ சபையினரின் நடவடிக்கை மீள்பரிசீலணை செய்து சட்டத்திற்குப் புறம்பான சமாதான நீதவான்களின் கடிதத்தை உடன் நிறுத்தி பொதுமக்களின் அசௌகரியத்தைக் குறைக்க வேண்டுமெனக் கோரியுள்ளனர். (92)

## 7 ஆவது ஐ.பி.எல்...



**ஹைதராபாத் 161/3**

வர்ணர் - 59
தவான் - 50
ஒச்ஹா - 24
சூசொன் 2 விக்கெட்டுக்கள்

**பெங்களூர் 160/6**

ஹோலி - 67
வில்லியர்ஸ் - 29
யுவராஜ்சிங் - 21
வி.குமார் 2 விக்கெட்டுக்கள்
ஆட்டநாயகன் வார்ணஸ்
ஹைதராபாத் - 7 விக்கெட்டுக்களால் வெற்றி

**கொல்கத்தா 156/2**

உத்தப்பா - 67
ஹசன் - 46
கம்பீர் - 21
பண்டெல், ஜடேஜா தலா ஒரு விக்கெட்

**சென்னை 154/4**

ரெய்னா - 65
மைக்கலம் - 28
பிளீசிஸ் - 23
கும்மின்ஸ், மரீன், சவ்லா தலா 1 விக்கெட்
ஆட்டநாயகன் - உத்தப்பா
கொல்கத்தா 8 விக்கெட்டுக்களால் வெற்றி

# புலிகளின் பாடல் கேட்ட இருவர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

புலிகளின் புரட்சிப் பாடல்களை கைத்தொலைபேசியில் வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு அப்பாடல்களை வழங்கிய மேலும் இருவர் விசேட பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியில் வைத்து குருநகர் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையை அடுத்து பாடல்களை பிரதி செய்து வழங்கிய குருநகர் பீச் றோட்டிலுள்ள வீடியோக் கடை உரிமையாளர்கள் 2 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டதுடன் இவர்கள் நால்வரும் இன்று கோப்பாய் பொலிஸாரினால் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (25)

# சிறுவர் தரவுத்தளம் அமைக்க நடவடிக்கை

சிறுவர் பாதுகாப்புக்காக, நாட்டினுள் நடைமுறைப்படுத்தப்படும் பொது அமைப்பு மற்றும் அரச சார்பற்ற தகவல்கள் அடங்கிய தரவுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது.

இதனை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், குறித்த அமைப்புக்களது தகவல்களை உடனடியாகத் தமது அதிகார சபைக்கு வழங்குமாறு கோரிக்கை விடுககப்பட்டுள்ளது. சிறார்களின் நலன் கருதி இயங்கும் அரச, அரச சார்பற்ற மற்றும் பொது அமைப்புக்களை ஒன்றிணைப்பதே இதன் நோக்கம் என சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

# வாக்காளர் பட்டியலில் வெளிநாட்டவர்கள்

## சம்பிக்கவின் விபரீத ஆசை

சுற்றுலா விசா மூலம் நாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டவர்களை வாக்காளர் பெயர் பட்டியலில் இணைப்பது தொடர்பில் முயற்சிகளை முன் எடுத்து வருவதாக ஜாதிக ஹெல உறுமைய தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமையவின் பிரதா்ன செயலாளர் பாட்டளி சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில், தேர்தல்கள் ஆணையாளரை தெளிவுப்படுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சி பிரதிநிதிகள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோருக்கிடையே இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# பல்கலைக்கழகத்தில் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், மாணவத்தலைவர்கள், பத்திரிகை ஊடகவியலாளர்களது பெயர்கள் குறிப்பிட்டு மீண்டும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. தேசம் காக்கும் படை என்று குறிப்பிடப் பட்டு 18.05.2014 திகதியிடப்பட்டு இந்த துண்டுப் பிரசுரங்கள் பல்கலைச்சூழலில் ஒட்டப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வடக்கின் உட்கட்டுமான அபிவிருத்தி இந்திய அரசு தொடர்ந்தும் உதவும்

## சுப்பிரமணியசுவாமி தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையின் வடக்கு, கிழக்கின் உட்கட்டுமானம் மற்றும் மீள்குடியமர்வுக்கும் இன நல்லிணக்கத்துக்கும் மோடி தலைமையிலான இந்திய அரசு தொடர்ந்தும் உதவி வழங்கும் என்றும் முன்னாள் அமைச்சரும், பா.ஜ.க அங்கத்தவருமான கலாநிதி சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 'தசதெசின்' நிகழ்ச்சி நேர்காணலின் போது கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்க நேற்று முன்தினம் கேட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் அபிவிருத்தி, மீள்குடியேற்றம்- மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளில் முழு ஆதரவினை இந்தியா வழங்கும். இலங்கையின் நீண்டகால நட்புறவு நாடாக இந்தியா உள்ளது.

2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் பின்னர் பலவித அபிவிருத்திப் பணிகளுக்கு இந்தியா கைகொடுத்துவருகிறதுஇலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்பவும் தமிழ் மக்களை மீள்குடியேற்றவும் அவர்களுக்கான வீடுகளை நிர்மாணித்துக்கொடுக்கவும் இந்தியா உதவி வருகிறது. இரு நாடுகளுக்கிடையில் கலை, கலா சாரம், உணவு, உடை, பாரம் பரியம் போன்ற பல்வேறு விடயங்களில் ஒற்றுமை காணப் படுகின்றன. இலங்கையின் எல்லை பாதுகாப்புச் சுதந்திரம் மற்றும் கொள்கைகள் என்பவற்றுக்கு இந்தியா என்றும் ஆதரவு வழங்கும் என்று அவர் தெரிவித்தார்.

# இராட்சத சுறா மீன் கிழக்குக் கடலில் சிக்கியது



ஏறாவூர் - சவுக்கடி கடற்பகுதியில் இழுவை வலை ஒன்றில் சுமார் 2500 கிலோ கிராம் எடையுடைய இராட்சத சுறா மீன் ஒன்று சிக்கியுள்ளது. புலிச் சுறா ரகத்தைச் சேர்ந்த இந்த மீன், 16 அடி நீளமுடையது. இந்த பிரதேசத்தில் சமீபகாலங்களில் சிக்கிய மிகப் பெரிய மீன் இது என்பது குறிப்பிடத்தக்கது. வெண் புள்ளிகளைக் கொண்ட குறிப்பிட்ட சுறா மீன், இழுவை வலையில் அகப்பட்டமையினால் மிகவும் சிரமத்துடன் அதனை கரை சேர்த்ததாக மீனவர்கள் தெரிவித்தனர். இந்த மீனைப் பார்வையிட பலர் சவுக்கடி கடற்கரைக்கு வந்திருந்தபோதிலும் துண்டு துண்டாக வெட்டப்பட்டு குறித்த மீன் விற்பனை செய்யப்பட்டது.

# உள்ளூராட்சி சபைகளில் மறுசீரமைப்பு அவசியம்

## தவிசாளர்கள் கோரிக்கை

உள்ளூராட்சி சபைகளில் வருமானவரிப் பரிசோதகர்களுக்கு உள்ளூராட்சி சபைகளுக்கு இணையான கிரமமான இடமாற்றத்தை வழங்க வேண்டும் என்றும் இதன் மூலம் சிறந்த உள்ளூராட்சி மறுசீரமைப்பு நிர்வாகத்தை ஏற்படுத்தலாம். என யாழ்.மாவட்ட உள் ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் கூட்டமாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

உள்ளூராட்சி சபைகளின் வருமான பரிசோதகர்களும் அவர்களின் செயற்பாடும் என்னும் தலைப்பில் உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் கருத்து வெளியிடுகையில்,

கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றங்களின் வருமான பரிசோதர்கள் அட்டவணைப்படுத்தாத பதவிகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தர சித்தியுடன் உள்வாங்கப்பட்டனர்.

பின்னர் வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநரின் அனுமதியுடன் வருமான மேற்பார்வையாளர்கள் வருமான பரிசோதகர்களாக தரம் IIIக்கு பதவி உயர்த்தப்பட்டனர்.

இவ்வாறு பதவி உயர்த்தப்படும் போது அவர்கள் வேறு சபைகளுக்கு இடமாற்றம் வழங்கியிருக்க வேண்டும்.

எனவே வடக்கில் உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் அனைத்து வருமான பரிசோதகர்களையும் உள்ளூராட்சி சபைகளிடையே இடமாற்றம் வழங்க வடக்கு மாகாண ஆளுநர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். (92)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மே 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.